திருவள்ளுவர்

நாதாந்தத் திறவுகோல்
ஏணியேற்றம்
முப்பு-30
குருநூல்-51
பஞ்சரத்னம்-500

முதலிய
நூல்கள்

தாமரை நூலகம், சென்னை - 600 026.

திருவள்ளுவர்

நாதாந்தத்திறவுகோல்; ஏணியேற்றம்;
முப்புக்குரு 11; வாதசூத்திரம்-16
முப்பு-30; குருநூல் 51; சூத்திரம் 108
பஞ்சரத்தினம்-500

ஹகீம் ப.மு. அப்துல்லா சாஹிப்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண்: 044 - 23620249
9940073194

தாமரை வெளியீடு எண் : 117
முதல் பதிப்பு : : ஆகஸ்டு 1997
இரண்டாம் பதிப்ப : ஜூலை 2013
மூன்றாம் பதிப்பு பிப்ரவரி 2018
நான்காம் பதிப்பு நவம்பர் 2024

நூலைப்பற்றி

நூலின் பெயர் : திருவள்ளுவர் நாதாந்ததிறவு கோல் முதலிய நூல்கள்

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : நவம்பர் 2024

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : கிரவுன்

அச்சுத்தாள் : 10.7 வெள்ளைத்தாள்

அட்டை : ஸ்ட்ரா போர்டு

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 248

பிரதிகள் : 1000

நூல் விலை : ரூ. 125.00

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை -

பதிப்புரை

திருவள்ளுவர் என்றவுடன் திருக்குறளின் நினைவு தான் அனைவருக்கும் வரும்.

மூவுலகும் ஈரடியால்
தாவிய சேவடி சேப்ப

என்று திருமாலைப் பற்றி ஆழ்வார் படிய பாடல் குறள் பாடிய திருவள்ளுவரைத்தான் குறிப்பிடுகிறதோ என்று ஐயுறும்படியாக - வள்ளுவப் பெருந்தகையார் தமது ஈரடிக் குறள்களால் மூவுலகையுமே அளந்து வைத்திருக்கிறார்.

ஆனால் சித்தர் இலக்கியங்களோடு தொடர்பு உடையவர்களுக்கு மட்டும் திருவள்ளுவர் என்றவுடன் ஞான வெட்டியானைப் பற்றிய நினைவும் வரும் திருவள்ளுவர் என்ற சித்தர் பாடியவைய்ர்க

ஞான வெட்டி	1500
நவரத்தின வைத்திய சிந்தாமணி	800
கவுனமணி	100
பஞ்சரத்தினம்	500
கற்பம்	300
நாதாந்தத் திறவுகோல்	100
காப்புக்குரு	11
வாதசூத்திரம்	16
முப்பு	30

முதலிய நூல்கள் கிடைக்கின்றன.

இந்தத் தொகுப்பில் இதுவரை அச்சேறாமலும் மக்களுக்குக் கிடைக்காமலும் இருந்த,

ஏணியேற்றம்	100
குருநூல்	51
சூத்திரம்	108

என்ற நூல்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த நூல்கள் சித்தர்களின் மறைப்புகளை எல்லாம் விலக்கி எல்லா விஷயங்களையும் வெளிப்படையாகக் கூறுகின்றன. அதனாலேயே கிடைத்தவர்கள் அமுக்கி வைத்துக் கொண்டு இந்த நூல்களை வெளிவிடா மலிருந்தார்கள் என்று நினைப்பதற்கு இடமுண்டாகிறது.

திருக்குறளை இயற்றிய மெய்ஞானியாரும் ஞான வெட்டியான் போன்ற நூல்களை இயற்றிய சித்தரும் ஒருவர் அல்ல. இவர் வேறு, அவர் வேறு என்று ஆணித்தரமாகத் தக்க சான்றுகளோடு வாதாடுபவர்கள் உள்ளனர். அதேபோல இருவரும் ஒருவரே என்று மூர்க்கடாக வாதாடுபவர்களும் உள்ளனர்.

இந்த வாதப் பிரதிவாதங்களுக்கு முடிவு காண முயற்சிப்பது வீண் வேலை. ஆனால் சித்தரைப் பற்றி ஆராயத் தொடங்கும் போது திருக்குறளாசிரியரை வம்புக்கு இழுக்காமலிருப்பதே நல்லது. ஏனென்றால் சித்தராகப் பாடிய ஞானவெட்டியான் முதலிய நூல்களில் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்தும், சந்தம், தாழிசை, வண்ணப்பா, இசைப்பா என்று பாடல் அமைப்புகள் பலவகைப்பட்டும் காணப்படுகின்றன. குறளின் அமைதிக்கும் நதிக்கும் சிந்துக்களுக்கும் இடையே வேறுபாடு மிகமிக அதிகம்.

ஆனால் ஞானவெட்டியான் முதலிய நூல்களில் ஈடுபாடு கொண்டவர்கள் அவை மற்ற சித்தர்கள் கூறாத அபூர்வமான முறைகளைக் கூறுவதாலும், சித்தர் நூல்களில் காணப்படும் மறைப்புகள் பரிபாஷை இல்லாதிருப்பதாலும் அந்நூல்களை மிகவும் போற்றிப் பாராட்டுகின்றனர்.

இத்தகைய பெருமைமிக்க திருவள்ளுவ நாயனாரின் வரலாற்றைப் பற்றி வரையறுத்துக் கூறமுடியாதபடி தடுமாற வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம் என்பது வருந்தத்தக்க விஷயம்.

சித்தர் பெருமானாகிய திருவள்ளுவர் மயிலையில் வாழ்ந்தார். ஏலேல சிங்கன் என்பது அவருடைய சீடனின் பெயர். தமது இறுதிக் காலத்தில் சீடனை அழைத்து, "நான் சமாதியில் அமர்ந்ததும் என்னுடைய உடலை வேகமாகச் செல்லும் ஒரு குதிரைக்குப் பின்னால் கட்டிக் கல்லும் முட்களும் நிறைந்த பாதைகளில் வெகுவேகமாக ஓட்டிச் செல்வாயாக" என்று கூறி விட்டுக் கண்களை மூடிச் சமாதியில் அமர்ந்துவிட்டார்.

ஏலேல சிங்கனால் தாங்க முடியவில்லை. "ஐயோ... ஞானப் பாலை ஊட்டி இந்த சீவன் கடைத்தேற வழிகாட்டிய என் குருநாதரின் உடலைச் சின்னாபின்னமாகச் சிதைப்பதற்கோ சென்மமெடுத்தேன். ஐயகோ முடியாது, என்னால் முடியாது" என்று அழுது புலம்பியவனாக குருபிரானின் உடலை ஒரு பெட்டியில் வைத்து அடக்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்தான்.

திருவள்ளுவர் மீண்டும் கண்களைத் திறந்தார். "சிஷ்யா! என் கட்டளையை மீறுகிற அளவுக்கு உனக்குத் துணிவு வந்துவிட்டதா? நீ என் உண்மைச் சீடனானால் நான் சொல்கிறபடி செய். இல்லாவிட்டால் குருத் துரோகியாகி கொடிய சாபத்திற்காளாவாய்" என்று கடுமையாக எச்சரித்துவிட்டு, மறுபடியும் கண்களை மூடிச் சமாதியில் அமர்ந்துவிட்டார்.

ஏலேல சிங்கன் என்ன செய்வான் பாவம். உச்சி முதல் உள்ளங்கால் வரை வியர்த்து வழிய உடலெல்லாம் நடுநடுங்கிக் கண்ணீர் ஆறாய்ப் பெருகத் தன் குருபிரானின் உடலை முரட்டுக் குதிரை ஒன்றின் பின்னால் கட்டி வேகமாக ஓட்டிச் சென்றான்.

வள்ளுவரின் உடல் சிதைந்தது. தசைகள் நாறுநாறாகக் கிழிந்தன. காயசித்தி அடைய முடியாத மற்ற சித்தர்கள் காக்கைகள் கழுகுகளாக மாறி அத்தசைகளைத் தின்று காயசித்தி பெற்றார்கள்.

வள்ளுவரின் உடலை திருவாலங்காடு வரை அவ்வாறு குதிரையின் பின்னால் கட்டி இழுத்துச் சென்றதாகவும் அங்கே எஞ்சியிருந்த எலும்புகளை அடக்கம் செய்ததாகவும் கூறப்படுகிறது. அங்கே திருவள்ளுவரின் ஆன்மா ஜோதி வடிவில் இறைவனுடன் இரண்டறக் கலந்ததாகவும் கூறுகிறார்கள்.

திருவள்ளுவர் என்ற சித்தரின் வரலாறுக்கு ஏற்றதாகவே அவருடைய முடிவு அமைந்துள்ளது. வரலாறு என்ற வகையில் கிடைத்த அளவு ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையிலேயே நாம் உள்ளோம்.

திருவள்ளுவப் பெருமானின் அரிய நூல்கள் சிலவற்றை ஓலைச் சுவடிகளிலிருந்து பெயர்த்து எழுதிக் கொடுத்த டாக்டர் R. கோவிந்தராஜன் P.I.M., A.M.P., M.M.H. அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நூல்கள் தமிழ் மக்களின் பேராதரவு பெறும் என்று நம்புகிறோம்.

வணக்கம்.

எஸ்.பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த நாதாந்தத் திறவுகோல் – 97

பொருளடக்கம்

உ

சிவமயம்

திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த

நாதாந்தத் திறவுகோல் – 97

இருவொளி வெளிமூன்றாகி
    யிலங்கு முப்பாழுக்கப்பாற்
பெருவெளி கைலைமீதே
    பேரொளியாகி யெங்கும்
குருவழி குலத்துக்கெல்லாங்
    கோதிலா. ஞானமானம்
திருவரு ளுருவமான
    திருவடி நெஞ்சில்வைப்பாம். 1

முப்பாழு மூன்றுமாய்கை
    முப்பதி மூன்றுவட்ட
மப்பாழு மிப்புறத்து
    மானந்த மயமாய்நின்று
தப்பாம லுலகுக்கெல்லாந்
    தானவனான சோதி
வைப்பாக வெந்தனுச்சி
    வட்டத் தேவைத்தநாதன். 2

வெளியொளி யிருள்மூன்றற்ற
    வெறும்பாழ தானவீட்டிற்
கனிதருமுச்சி ஞானக்
    கண்ணிலே கருத்துவைத்து
மொளிதரு முச்சிஞான
    முற்றிரை மெய்த்ததாகி
வழிவழியுச்சி வட்டம்
    வாள்பதி பாசஞானம். 3

மூலமாம் நடுவுமுச்சி
    முப்பதி முப்பாழென்று
ஞானமுமப்பு வன்னி
    நாடியதகமை தேறார்
சீலமாமரனுஞ் சத்தி
    சிவபதஞ் சிற்பரத்தில்
தோலமே மூன்றில்நின்ற
    முடிச்சது வுச்சிதானே. 4

உச்சியினிடமாய் நின்ற
    உதையமாஞ் சோதிபாத
நச்சியே யிருப்பானந்த
    நாதாந்த வெளியிலேதான்
வச்சிர வெளியானந்த
    வாசியாலடர்ந்த வன்னிக்
குச்சியாலுச் சத்தானைக்
    குருவினால் தெரிந்துகொள்ளே. 5

உச்சியாம் வட்டந்தன்னில்
    உருவியே யாறாதாரம்
நச்சிவ ஞானசோதி
    நாதன்றன் பாதந்தன்னில்

உச்சிவ நிஷ்களத்தே
நிர்மலன் வடிவதாகும்
உச்சிமேல் வைத்திருப்பார்
உயர்குரு புத்திரர்தாமே. 6.

முப்பத்தி மாய்கையாலே
மூவுலகெல்லாந் தோன்றி
முப்பத்தி மூன்றுபாழில்
மூவருந் தொழிலால்நின்று
முப்பத்தி மூன்றுவட்ட
முச்சுடர் மூர்த்தியாகி
முப்பத்தி தானேயெங்கும்
முடிந்தது சோதிபாதம். 7

முப்பாழு மூன்றுநாடி
மூலமுநடு முடியாம்
முப்பாழு மூன்றுவட்ட
மூச்சது மூன்றுமாகும்
முப்பாழே முத்தியாகி
முடிச்சுதா மூலத்துள்ளே
முப்பாழே பெரும்பாழான
முறைமையைக் கருவாற்காணே. 8

மூலமே வுச்சியாகும்
முச்சியி னடுவேமூலம்
மூலமே சோதியாகும்
முப்பொரு ளொடுக்கமங்கே
மூலமே பகலிரவாய்
முடிந்தது மூலநாடி
மூலமே முச்சிதன்னை
மூடியே திறந்துபாரே. 9

மூடியுந்திறந்து பார்க்கில்
    முப்பொரு ளுதயமாகும்
மூடியுந்திறந்து பார்க்கில்
    முச்சுட ருதயமாகும்
மூடியுந்திறந்து பார்க்கில்
    மூப்பத முதயமாகும்
மூடியுந்திறந்து பார்க்கில்
    மூன்று முப்பாழதாமே. 10

முத்தியே முப்பாழாகும்
    மூவருந் தேவராகும்
முத்தியே மூலமாகி
    முப்பொருள் தானாய்நிற்கும்
முத்தியே நாடிமூன்றால்
    முறிந்திடப் பொருள்பாழாகும்
முத்தியுஞ் சித்திரண்டு
    முடித்திட மூலமாமே. 11

மூலமே மேல்கீழாகி
    முடிநடு முப்பாழாகி
வேலமே மூலமாகி
    இருந்தது வெளிபாழாகும்
மூலமா முச்சமீதே
    திருவடி நடனமாகும்
மூலமாஞ் சோதியாகும்
    முடிந்திடந் தானேமுத்தி. 12

பசுபதி பாசம்

பதிபசு பாசமான
    பாவக முப்பாலாகும்
பதிபசு பாசமான
    பாவக முத்தியாகும்

பதிபசு பாசமான
　　பாவக மூவராகும்
பதிபசு பாசமூன்றும்
　　பராபரத் தடக்கந்தானே. 13

மும்மல மூன்றுநாடி
　　முக்குணி முத்திமுப்பாழ்
மும்மலங் கெட்டதாலே
　　முப்பாழு மதுவேயாகும்
மும்மல மயக்கத்தாலே
　　மூவர்முத் தொழிலதாகி
மும்மலங் காமியத்தே
　　மூவரும் பிறந்தவாரே. 14

நாசியும் நயனமுச்சி
　　நடுவிலே நடனமாடும்
வாசியைத் தேசியாக்கி
　　வழியுச்சி மீதேயேறி
தேசிகனாக வந்த
　　திருவடி திடமதாக
நாசியினடுவே பார்த்தால்
　　நாதாந்தந் தோன்றுந்தானே. 15

உச்சியும் நாக்குக்கண்ட
　　முகமுட னுந்திலிங்கம்
நச்சிய மூலநாடி
　　நடுவதாம் நாட்டமூன்றாய்
வச்சிர மூலமான
　　வழிசுழி விதிதானே
உச்சியா முணர்வுமூல
　　முருவியொன்றாகி நிற்கும். 16

மூலமாஞ் சோதிநாடி
    மூலாதி பாதமாகி
மாலயன் தேவர்க்கெட்டா
    மலரடி யுச்சிமூலஞ்
சீலமாம் பிரணவத்தே
    சிவலிங்க ரூபமாகி
மூலமுமேலு மொன்றாய்
    முடிந்திடச் சோதிபாதம். 17

வேறு

முப்பாழே முச்சுடராய் திசைமூன்றாகி
    மும்மூலமு முடிச்சாகி மூலமாகி
முப்பாழே வெளியொளியு யிருள்மூன்றாகி
    முடிந்தபடி யுச்சியெனு மூலமாகும்
முப்பாழுந் தானான பெரும்பாழ்தன்னில்
    மூலமாம் நாதாந்த முதலதாகும்
முப்பாழுந் தாண்டியதோர் பெரும்பாழ்தன்னில்
    மூலமாம் நாதாந்த நூலைப்பாரே 18

இதயமதில் நடமாடும் பாதந்தன்னை
    இடைபின்தான் கழிமுனையா யிடைவிடாமல்
உதயமதி னுதித்தகலை பகலிராவோடு
    உயர்பாதந் தூக்கியொரு பாதந்தன்னில்
பதவிதரும் நாதவிந்து பாதமிரண்டாய்
    பார்விசும்பு மொன்றாகிப் பார்த்தபாதம்
இதயமதில் நடமாடுங் கமலபாதம்
    எந்தை குருபாதமது ஏகபாதம். 19

அக்கினியாந் திரைசுழினை முடிச்சுணீங்கி
    ஆதார நிராதாரத் தடுக்கும்நீங்கி
திக்கரிய திசையெட்டு முலகீரேழுந்
    திக்குகளும் பதினாறு தெருவுநீங்கி

மிக்கினிய தத்துவங்கள் கருவுநீங்கி
மேல்கீழும் நடுப்பக்க மேருநீங்கி
மக்கினியுந் திரையலுக்கு மகண்டசோதி
அகாரமாய்ப் பொருளென்றே அறிவார் நல்லோர். 20

ஆமெனவும் ஊமெனவும் அவ்வுமொவ்வாய்
அக்கினியின் திரையறுக்கும்அருளு மாகி
ஆமெனவே கண்டவெளி இருளாய்த் தோன்றி
அணுவணுவா மப்பாலுக்கு அப்பா லாகி
ஊமெனவே யுயிராக உலக மெல்லாம்
உண்மைதனை யாவர்க்கும் உறைக் கொணாதோ. 21

உச்சிவெளி நயனநடு னாசிமூலம்
ஒன்றாகி நடம்புரிய முண்மைதன்னை
வச்சிரமாமணிச் சோதி நடனமென்று
மனமூலமாகவே மனத்தி னோக்கி
அச்சமறக் கூத்தாடும் அகண்ட சோதி
யானந்த பராபரமா மனாதிமூல்
நிச்சிவமா நிட்களத்தே நினைத்தபேர்க்கு
நித்தசுத்த படிகமதாய் நிற்குந்தானே. 22

வெளிமூல மாவதுவே திரையதாகி
வெளிக்குள் நின்றவித்ததுவே சிவமதாகி
களிமூல சத்திபர னாதவிந்து
காட்சியாஞ்சதாசிவமா மயேசனாதி
யளிமூல மாலயனோ டாணுமாகி
யைம்பூத மன்னமதி லெல்லாமாகி
வெளிமூலங் கடந்து நின்ற சோதிமூலம்
வேறொன்று மில்லாத வெறும் பாழாமே. 23

வேறு

மேலாதாரைந்தடுக்கு நிலைமேல்
கீழ்நடுவாய் மேவிநின்று
ஆலாகலைக்கு மெட்டாமல்
நாதாந்தத்தே நடுவாகி
மூலமாதாரச் சுடர் மூன்றாய்
மூச்சுமுனையில் முடிந்து நின்ற
காலாதாரச் சுழிமுனையைக்
கடந்தேபார் காரணமே 24

மேல் கீழ்ந்திடுவாய் மேவிநின்று
மேலாம் பதமா மெய்ப்பொருளாய்
கால் மேல் தலைகீழாய் நின்று
கருத்தாய் கருத்துக்குட் பொருளாய்
மேல் மேலுருகி வெளியுருகி
மேலாப் பதத்தைக் கடந்து நின்று
கால் மேலான காரணத்தைக்
கருதியிருப் பார்காரணரே 25

அவ்வா வுவ்வாயம் பரமா
யமர்ந்து நின்ற வாசிதனை
யொவ்வா யொளிவாய்
வெளியாகி யெங்குஞ் சோதிமூலத்
தவ்வா யகண்ட வெளியாகி
யனாதிமூலப் பாதமதாச்
சவ்வாய் நின்றதம் வரத்தை
சகலம் பிறந்து தன்னையே 26

வேதங்கடந்த பொருள் முடியிற்
பொருந்தி யிருக்கு மாத்மாவை
நீதங்கடந்த நிலைபரத்தன்
நிறைபரமாத் மாவாகி

பேதங்கடந்த வழுதான
பெரும்பாழ் வெளியே பேதமின்றி
நாதங்கடந்த நாதாந்த
னானேதானாய் நாடிடுமே 27

திரைவெளியாஞ் சிவமறவாத்
திருவாஞ்சத்திமன் மாரும்
நிறையாங் குடிலைக்கதிர் நாதம்
நிலையாஞ் சோமன் வித்தாகுங்
கரையம் புலனேயை வருமாய்
கறந்துவாதி மார்க்கருவியுஞ் சாய்ப்
பரைதான் பண்டைப்படிபார்த்தாற்
பரமாத்மாவாய் நிற்குமதே. 28

பரமாத்மாவாம் பராபரத்தே
பரமசீவாத்துமாத் தோன்றி
நரவாத்து மாவாத்துமா
தோன்று நாலாயோனி பலவுயிரா
இரவாத்து மாக்களாய்த் தோன்றி
இறந்தே பிறந்துயி ருருவமாய்
பரமாத்து மாவாய் நின்றபடி
பரமகுருவாய்ப் பார்ப்பதுமே. 29

ஐயுங் கிலியுஞ் சவ்வாகி
அமர்ந்தே நிற்கு முப்பாழை
மெய்யும் பொருளிற்றான் கூட்டி
மேலாம் பதத்தே தானாடி
பொய்யாம் பொருளா மாதாரம்
புன்மயக்கந்தான் கடந்து
ஐயுங்கிலியுந் தற்பரத்தே
நிற்பாரறிவை யுடையோரே. 30

வேறு

நடமாடுந் திருவடியை யிதயந்தன்னின்
நாகயிடைபின் கலையாகிச் சுழினையாக
நடமாடுந் திருவடியை யுச்சிமேலே
நாதாந்தக் கூத்தெனவே வேதமோடும்
நடமாடுந் திருவடியை புருவமத்தியில்
நாடினின்று பூரணமாய் நவின்றுநிற்கில்
நடமாடுந் திருவடியை பிராணவாயு
நாசிமுனை மீதினின்றே நடக்குந்தானே. 31

நாசிமுனை மீதேறி நடக்கும்பாதம்
நடுவெளியாங் கமலமுச்சி ஞானத்துள்ளே
மாசிலா வடிவுசிவ லிங்கமாதி
மாசற்ற பளிங்கொளியாய் வதிர்ந்தசோதி
ஊசிமுனை பூதினிலே யண்டமெல்லாம்
ஓங்கிநின்ற வாறொக்கு முச்சிமூலம்
வாசியெனுந் திருமடித்தா மரையேயுச்சி
வருயுருவி நாதாந்த வடிவதாமே. 32

வேறு

மூலமுநடுவு மொன்றாய்
முந்திட மூலநாடி
சீலமாந்தட மாமந்த
சோதியாஞ் சுழினைவீதி
சாலவு மதனைப்பற்றி
தங்கிடுவா றேயாகில்
கோலமாய் நாதானந்தங்
குண்டலித் துணையினேறே. 33

ஆதியினான சோதி
அடிநடு முடியுமாகி
மாரியாய்ப் பானாய்நின்று
மண்டல மூன்றுமாமே
யேறியு மிரங்குபாதை
யேகமா மூலபாதஞ்
சாரியாய் ஏகநாதன்
தனையுணர்ந் திருந்தவாரே. 34

மூலமுமுடியு மொன்றாய்
மூச்சினை யடக்கியுச்சி
மூலமாம் வெளியுருவில்
நாதாந்த சோதிதானாம்
கோலமே கண்டுநித்தங்
குறியதாய்க் குறித்தபேர்க்கு
காலங்கள் கழித்தசோதி
கடவுளே தானாய்நிற்பர். 35

மூலமுமேலா மொன்றே
முச்சுடர் முடிச்சுமொன்றே
காலமுங்கணக்கு மொன்றே
கருதிய பொருளுமொன்றே
ஞாலமும் விசும்புமொன்றே
நாடியின் வடிவுமொன்றே
சீலமுங் கருமமொன்றாம்
நின்றது சோதிமூலம் 36

நயனத்தை மூடினாசி
நுனியிலே நாடிபார்த்தால்
மயமற்ற வரூபமாகி
மாசிலாவடிவு தோன்றும்

செயமுற்ற மூலபாதந்
திருநடம் வீடதாகும்
பயனற்ற வுச்சிமூலம்
பதியிலே பதிந்துநில்லே. 37

நாசியும் புருவநெற்றி
நடுவிலே நாடிப்பார்த்தால்
வீசவே வெள்ளி முத்து
வியங்குமுன் சிவப்பு பச்சை
பேசியவரும் மெல்லாம்
பிரணவந்தன்னில் தோன்றும்
மாசிலா வடிவமுச்சி
மானிலா தன்னிற்பரோ. 38

வேறு

நாசியே யடியதாகு
நயனமிடையே நடுவாகி
வாசியுதித்து யிடமூச்சி
மலரேமுடியாய் நின்றமுனி
பேசியேயிருந்த பிரணவத்தை
பிரியாதுச்சி மூலத்தே
நேசித்திருப்பார் திருவடியில்
நினைப்புமறப்பு மிரண்டற்றே. 39

வேறு

நிராதார நிஷ்களத்தே
நின்றதோர் மூலம்
பராபரப் பதியதாகிப்
பரந்தனாதாந்த சோதி

தராதரத் துச்சியிலே
தாண்டவமான மூர்த்தி
புராதனப் பதியதான
பொருளினைப் போற்றிக்காணே. 40

வேறு

உச்சிப்புருவ நடுவுமாகி
யொன்றாய் நின்றமூலத்தே
பச்சைப்பவழம் பளிங்கொளியாய்
பதிந்தேநின்ற பாதமதை
நச்சியிருப்பார் பெரியோர்கள்
நாதாந்தத்திற் பேரொளியாய்
வைச்சகுறி காணிரவுபகல்
மறவாதிருப்பார் மனந்தனிலே. 41

வேறு

மனமேமூலம் வன்னிகதிர்
மதியாய்நின்று மாறியொன்றாய்
நினவே வச்சிமூலமதாய்
நின்றேயியங்குந் திருவடிதான்
தினமேனோக்கி யிருந்தவர்கள்
திடமாஞ் சிவமோகத்தவரே
மனமேமாய்கை தன்னைநீக்கி
மதியானோக்கி மாற்றிடுமே. 42

சோதி பராபரமூர்த்தி யுச்சிமீதே
சொல்லிவந்த பொருளாகிற்சுடர்கள் மூன்றாய்
வீதிநடு வெளிமூல பாதமாகி
விருட்களைந்த பதிமுப்பாழ்க் கப்பால்நின்று

ஆதியந்த மில்லாத பொருளதாகி
ஐவருந் தானாகி யகண்டமாகி
நீதிநெறி நிலைகடந்த மூலபாதம்
நின்றியங்குந் திருவடியி னிலைமைதானே. 43

திரைகடந்த வெளிமூலஞ் சோதினாடி
திருமூல முச்சுடராய் திருவெட்டாகி
கறைகடந்த காரணமாய்க் கடவுளாகி
காணரிய பேரொளியாய்க் கலந்துநின்று
உறைகடந்த பொருளாகி யுலகுக்கெல்லாம்
ஏறொளியாம் வேறொளியி னுண்மையாகி
விரைகடந்த வித்தாகி விளைந்தசோதி
வெறும்பாழாம் வீட்டினிலே விளங்கிப் பாரே. 44

காதிரண்டு கண்ணிரண்டு நாசிரண்டு
கையிரண்டு காலிரண்டுங் கலந்தேயொன்றாய்
மீதிரண்டும் தடமாகி மாறியெங்கும்
வினைதாண்டி வழியுச்சி வீட்டைத்தானே
சாதிரெண்டும் வகையாக்கிச் சாரமயமாக்கி
சாக்கிராதித் தாவதே சமைந்தமூர்த்தி
சோதிரண்டு வகையாக வடிமுடியாய்ச்
சூட்சமதாய் நின்றபடி சொல்லொணாதே. 45

அடிமூல நடுமூல மாடுமூலம்
அகாரஉகார மிரண்டு மானமூல
முடிமூல நடுமூல முத்திமூல
மூன்றுவட்ட முப்பாழா மூலமாகிற்
படிமூல மாகியதோ ராறாதாரம்
படிகடந்த பேரொளியாய் பரமூலம்
வடிமூல மாகியதோ ரகாரந்தன்னை
அத்தனார் வடிவென்றே யறிவார்நல்லோர் 46

அவ்வெழுத்தே யுச்சிவட்ட மாகிநிற்கும்
ஆகியதொரு காரநடு நயனமாகும்
ஒவ்வெழுத்தே னாசிநுனி புருவமாகும்
ஓங்காரம் றீங்கார மிரண்டுமாகி
இவ்வெழுத்தே யண்டமெல்லாந் தானாய்நின்று
யிருசுடரின் வகையாகி யேகமான
அவ்வெழுத் தேயடிமுடியாகி யமர்ந்தசோதி
அத்தனார் வடிவுநட மானவாறே. 47

பரையாகு மூலத்தே பராபரந்தான்
பதியிருக்கும் நாதாந்தப் பாழாம்வீட்டில்
நிரையாகி நிற்குமந்த சோதிமூலம்
நின்றியங்குஞ் சுழியுச்சி நெற்றிநேராய்த்
திரையாகு மக்கினியைக் கதவாய்மூடித்
திறவுகோல் சுழிமுனைக்குத் திறவுகோலாய்
நிரையாகுங் கதவுதனைத் திறந்துபார்த்தால்
நித்தசுத்தப் படிகமதாய் நிற்குந்தானே. 48

ஆயிரத்தெட் டிதழ்கமலத் தருணபீடத்
தானந்த மயமாகி அகாரமாகி
ஆயிரத் தெட்டிதழ்நடுவே சோதிமூலம்
அருவுருவா யமந்திருக்கு மனாதிதன்னில்
ஆயிரத் தெட்டிதழ் நடுவே சோதிமூலம்
அரனுமையு மிருக்கு மாசனமதாமே. 49

ஆசனமா முச்சிவெளி யருணபீட
மாதாரங் கடந்துநின்ற அகாரமீறே
நேசமா மனுதினமும் நினைவதாக
நேசிப்பார் நாதாந்த நிலைபெற்றோர்கள்
பாசமல மூன்றினுள்ளே மயங்கிப்பின்னும்
பரஞான நிலையறியாப் பாவிமார்கள்
மோசமெனு மும்மலத்தே பிறந்திறந்து
மூடர்களா யிந்நரகில் மூழ்குவாரே. 50

மூலாதார மென்னுஞ் சுழினைநாட்டி
முதுகு தண்டாமிசிதெளி மூலமீதே
மாலாகி மீதான பதியுமாகி
மின்னெழுந்து மனமறைந்த மேன்மைபோல
நாலாய வேதமுத லுரைக்குமெட்டா
நாதாந்த சோதியென நவின்றுநிற்கும்
மேலாகும் பரமான வீட்டைத்தானே
மேவிநிற்பார் மெஞ்ஞான மேன்மையோரே. 51

வேறு

நாட்டிய வட்டமுச்சி
நடுமுடி மூலபாதந்
தேடிய முன்னோரெல்லாம்
திடமிது முத்தியென்று
பாடிய பாதந்தன்னை
நுனிநாசி நெற்றி தன்னில்
கூடியே யொன்றாய்
குறியினைக் குறிப்பாரே. 52

அறியாத முத்துஞான
மறிவிப்பானா சானல்லால்
ஒழியாத பாதஞான
வுண்மையு மொழி யொணாது
தெளிவாகக் குருவின் பக்கத்
தெளிந்தவர் தேவராவார்
மொழியாத முத்தியுண்டா
முப்பொருட்டலை வராகும். 53

முத்திக்கு வித்தாய் நின்ற
மூர்த்தி நாதச்சோதி
சித்திக்குச் சித்தியான
திருவடி மூலபாதம்

பித்தினுக் கெல்லாஞானம்
வித்ததாஞ் சோதிமூலம்
மத்திக்கு மத்தியான
வடிவினை யகாரமாமே 54

அகாரமா முச்சிவட்டம்
ஆனந்தமயமாய் நின்ற
வகாரமா முந்திக்கீழே
ஓங்கார மூலமூன்றும்
நகாரமெழுத் தஞ்சாலே
ஓங்கார மூலமூன்றும்
இகாரமாஞ் சுழினைநாடி
ஆயிரத் தெட்டா மூலம். 55

மூலமுமுத்தி யொன்றாய்
முடிந்திட முத்தியாகுங்
கோலமா: மூலநாடி
குண்டலித் துணையினோரே
சாலியே யுருவியொன்றாய்
சாக்கிரத் தீதங்கடந்து
மேலதாஞ் சோதிபாதம்
மேலுச்சி வெளியதாமே. 56

வேறு

மேலாதார வெளியுச்சி
மேலுங்கடந்து மெய்ப்பொருளாய்
நாலாகலைக்கு மெட்டாமல்
நாதாந்தத்தே நடுவாகி
சீலாம் பரவுச்சி வெளி
சிவமாய் லிங்கச்செயலாகி
மேலாதார வெளிமூல
மேலாம் பதமாய் மேவியதே 57

வேறு

ஆதாரத்தடுக்குநிலை யோரஞ்சாகும்
அருவெளியாய்நிராதார மாத்மாவாகும்
மீதானவெளியுச்சி சிவமதாகும்
மிக்க திரை மாய்கையதை மிகவேயுன்னி
நாதாவை யடைவதற்கு னாதனாமே
நடுனாடி சுழிமுனையை னாட்டமாகும்
வேதாவுமரியயனும் விண்ணோர்தானும்
விளங்கரிய பேரொளியாய் மேவுந்தானே. 58

வேறு

சுழிமூலமான சோதி
துரைகடந் தருவுருவாய்
ஒளிமூலமாகி நின்ற
உண்மையா முச்சிமூலம்
வெளிமூலமாகி நின்று
வேதாந்தச் சிவத்துக்கப்பால்
அளிமூல மாறாதாரத்
தடுக்கொளி கடந்தமூலம் 59

ஒளியதைத் திரையதாக்கி
வேதாந்தச் சிவமதான
ஒளிவதே யறிவதாக்கி
ஓங்கார மானசித்தி
களியதாம் நாதவிந்து
கதிர்மதி யிரண்டுமாகி
அளியதாம் பூதமஞ்சம்
ஆதாரத் தேவராமே. 60

இகபரமிரண்டுக் கப்பால்
ஏகமாம் வென்றும் பாழாம்
பரமனைப் பரமாத்மாவாய்
பாழ்வெளிப் பதியதாகி
பரமனிற் பராபரந்தன்
பரவெளிதானே தானாய்
பரமுதற்பரமாய் தோன்றி
பாரெல்லாம் படைத்தவாறே 61

சத்தியே மனமதாகி
சகலமுந் தானேயாகி
பத்தியா யறிவுமாகி
பரசிவ மிரண்டுமாகி
முத்தியாஞ்சுடர்கள் மூன்றாய்
மூலமாய் வன்னியாகி
அத்தியே திரையதாகி
ஆதார சுழினையாமே. 62

அதுவவனவன் முன்னென்று
ஆனதோர் குறிகள் மூன்றும்
அதுவவனவனே யன்றி
ஆதாரம் வேறு முண்டோ
அதுவவனவன்றான் பிண்டம்
ஆகியு மொன்றதாகிப்
பொதுவதாய் நின்றசோதி
பொருளினை குருவாய்ப் போற்றே. 63

முப்பொருள் மூன்றுவட்ட
முத்தியாம் பொருளதாகும்
முப்பொருள் மூலநாடி
முடிச்சது மூன்றுக்கப்பால்

முப்பொருள் பதியிற்சாரில்
மூன்று முப்பாழதாகும்
முப்பொரு ளுணர்ந்த போதே
மூர்த்தியாந் தலையராமே 64

முத்தியாஞ் சுடர்கள்மூன்றை
முப்பாழதாக்கிப் பின்னு
முத்தியு மடைந் தொன்றாகி
மூலமாஞ் சோதிபாத
முத்திக்கு வித்தாய் நின்ற
முப்பொருள் தலைமையான
முத்தியை யடைந்தபேரே
மூவர்க்கு மதிகமாவார் 65

ஆறாகும் முப்பத்தாறுக்கு
அப்பாலனாதி மூலம்
கூறாத குறியதாகி
குருபதந் தெய்வமூன்றாய்
பேறாத மூவர்பாதம்
பேரொளி தானாய்நின்ற
ஆறாறுக்கப்பால் நின்ற
ஆதியாஞ் சோதிமூலம் 66

ஒருவழியாகி நின்ற
வொண்பொருளுக்கு வட்டம்
கருவழிக் கீழாய்நின்று
கான்மாறியாடி நிற்கும்
வெளிதடத்திற் சென்று
பேரொளி மூலந்தன்னை
குருவழிக் குறியினாலே
குறிப்புட னோக்குவீரே. 67

மேல்தலை கீழாய்நின்ற
 மேன்மையா முச்சிவட்டம்
கால்தலை மேலாய்நின்ற
 காரணங்காண மாட்டார்
கால்தலை யுடையோன்மற்ற
 நாரணன் தேடிக்காணார்
கால்தலை கண்டபேரே
 காட்சியா முத்திதாமே. 68

காட்சியா முத்திதன்னைக்
 காரணக் குருவினாலே
சூட்சியாங் கண்டபேரே
 சூதான முத்தராகு
மாட்சியா மதினாமூலம்
 மறலுங் குருக்குமப்பால்
காட்சியாஞ் சோதிமூலங்
 கண்டவர் காணத்தேரார் 69

காரணக் குருவாய்நின்ற
 காட்சி நாதாந்தசோதி
பூரணமாக வெங்கும்
 புறைவறக் கலந்துநின்ற
நாரணன் தேவர்க்கெட்டா
 நாதாந்தச் சோதிமூலம்
ஆரணங் கடந்துநின்ற
 அருள்ஞான சோதியாமே. 70

உச்சிக்குங் கீழ்மேலாகி
 உருவரு வுபாயமாகி
நச்சிவமான மூர்த்தி
 நாதாந்தச் சோதிமூலம்

பச்சையாய் பவழமுத்தாய்ப்
பளிங்கொளி வன்னமாய்
உச்சிக்கீழ்மேலாய் நின்றவுண்மையாய்
உணர்வார் முன்னே. 71

வேறு

நாடியதோர் பின்கலையாஞ் சுழினைநாடி
நடுநாசி புருவமுச்சி நடுவாய்நின்று
ஆடியதோர் திருனடந்தா னகாரமாகும்
ஆனந்த பரவெளியா யமர்ந்தமுத்தி
கூடிருந்த நெற்றிநடு வாகநோக்கிக்
குண்டலியாம் பாதமலர் தந்தசோதி
தேடியதோர் திருவடிதான் மூலமுச்சித்
திருவுந்தி தற்பரத்தே சேருந்தானே. 72

திறையாகுங் குண்டலிதான் திறப்பதற்கு
திருவதினால் சுழினையெனுங் குச்சியாலே
பரையாகுங் குடிலைசத்தி திரையைநீக்கி
பராபரத்தே சென்றமுத்தி பதித்தேநிற்கில்
கரையாகுந் தெரிசனங்கள் பதினாறெல்லாங்
கட்டறுத்துத் திரைகடந்து கயிலைமீதே
உரையாகும் பயமில்லாச் சோதிபாத
முற்றுணர்ந்து கண்டவர்க்கே யாதிமுத்தி. 73

பெரும்பாழை சுழினைவழித் தடத்தேசென்று
பேரொளியாம் ஞானமுத்தி பெறுவார்க்கெல்லாந்
திரும்பாருஞ் சுழியதுவே மூலபாதந்
திருவடியே மனத்துள்ளே திறமாய்க்கொண்டு
கரும்பாதைக் கருவழிக ளெலல்லாமாற்றி
கயிலாய வழிநடந்தார் காட்சிமோட்சம்
சுரும்பாகுங் குழலுமையாள் பங்கனெங்கோன்
சூட்சாதி பாதமலர் சூடுங்காலே. 74

அண்டபகிரண்ட முச்சி வெளிக்குமப்பால்
ஆனந்த பராபரனா ரமர்ந்தவீடு
மண்டலங்கள் மூன்றுமதி கதிரும்வன்னி
மனமாதி மூலத்தே மருவிநிற்கும்
அண்டகுரு நாதாந்தச் சோதிபாதங்
கரைகடந்த வுச்சிவெளி கயிலைதன்னில்
அண்டமெல்லாம் போற்றிநிற்கு மகாரந்தன்னை
அனாதியாஞ் சோதியென்றே யறிவார் நல்லோர் 75

வேறு

அகாரமு மகாரந்தானு
ஆனதோர் வுகாரந்தானும்
ஓகாரமாய் பிரணவத்தே
யோங்கார ரூபமாகி
நகாரமாமஞ் செழுத்தில்
நாதாந்த ரூபமாகி
சிகாரமாஞ் சிற்பரத்தின்
செயலெல்லாந் தானாய்நின்றார். 76

முச்சிய மூலாதார
மோங்கிய கடவுள்நாடி
குச்சியாந் திறவுகோலைக்
குருவினாற் கொடுக்கவாங்கி
வச்சிர வன்னியாய்
வலுவதாங் கதவுதன்னை
குச்சியாற்றிறந்து கொண்டு
குருவினா லருளைக்கூட்டே. 77

பிண்டத்தில் மூலமான
பிரணவந்தன் னைத்தானே
அண்டத்தின் மூலத்தோடே
யடிமுடியொன்றாய்க் கூட்டி

கண்டத்தில் மேலேநின்ற
கலைபதி னாறதாகக்
கொண்டித்தைக் குருவினாலே
கூர்மையாம் தெளிந்துபாரே. 78

கழுத்தின் மேற்கலை யீரெண்டாம்
காதுடற் கண்ணுமூக்கும்
அழுத்தமா முகமஞ்சாகி
உருவமஞ் செழுத்துமாகி
பழுத்ததோ ரெழுத்ததான
பராபரப் பொருளையுன்னி
எழுத்திலா வெழுத்தைத்தானே
ஏகமாயேற்றிக் காணே. 79

நடுவடி மூன்றொன்றான
நாசியா நயனமுச்சி
கடுவெளிக்கப் பால்நின்ற
காரண சோதிதன்னை
அருமையா யாசான்பக்கல்
அறிந்தவ ரருட்பெற்றோர்கள்
கொடுங்கையாங் குணத்தைநீக்கி
குருவருடன்னைப் போற்றே. 80

வெளி மூலமாகிநின்று
வேதாந்தங் கடந்தசோதி
ஒளி மூலமாகிநின்று
ஓங்கிய மூலாதாரம்
அளிமூல மாறாதாரம்
அடுக்கெலாங் கடந்துநின்று
வெளிமூலமான சோதி
விரிந்தது பதியமாமே. 81

அகாரமே வலமதாகும்
 ஆகியயிடம் உகாரம்
ஒகாரமே நடுவதாகி
 ஓங்கிய வுச்சிதன்னில்
நகாரமா முச்சி மூன்றும்
 நாடிய வெட்டெழுத்தாய்
அகாரமா முச்சிமூலம்
 அட்டாங்க யோகமாமே. 82

அகாரத்தை யுச்சியாக
 ஆனதோரு காரந்தன்னை
சிகாரத்தி னயனமாக்கி
 சிறந்த வோங்காரந்தன்னை
நகாரத்தின் வடிவாய்நின்ற
 நாசியி னுயரதாக்கி
அகாரத்தின் வடிவைநோக்க
 வத்ததார் வடிவுதாமே. 83

நகாரமே நாசியாகும்
 நாடிய மகாரம்நாலாஞ்
சிகாரமே நயனமாகுஞ்
 செடமது வகாரமாகும்
அகாரமே செவியாய்நின்று
 அஞ்செழுத்த ரூபமாக
ஓங்காரப் பிரணவத்தே
 உதித்தவரொடுங்கி நிற்பார். 84

ஓம்நமோ நமசிவாயவென்(று)
 ஓதிய மந்திரத்தை
ஓம்நமோ மூன்றினுள்ளே
 ஓங்கார ரூபமாக

ஓம்நமோ நாராயணாவென்று
ஓதிய மந்திரத்தை
ஓம்நமோ சுவாசந்தன்னில்
ஒளிவொளி யொன்றாய்க்காணே. 85

மீதாரமதியாய் நின்று
மீதிலே சோதிநாதர்
ஆதார மூன்றுக்கெல்லாம்
அருவுருவாகி நின்று
வேதாவு மரியுந்தேட
வெறும் பாழதாகி நின்ற
நாதாவு மண்டமீதே
ஞானமாநடனஞ் செய்வார். 86

அண்டத்தின் வடிவாய் நின்ற
ஆகாரமெட் டெழுத்தை
கண்டத்தின் மேலேனோர்க்கிக்
கருதுவார் கருவைச்சார
பிண்டத்தின் வடிவாய்நின்ற
பிரணவமெட் டெழுத்தாய்
கொண்டத்தை குறித்தபேர்கள்
குடிலையிற் சார்வர்தாமே. 87

தூலமாங் கண்ணைமூடி
சூட்சமாங் கண்திறந்து
மூலமா முச்சிமீதே
முடியடியொன்றாய்க் கண்டால்
சீலமா ஞானசோதி
சிலம்பொலித் திருக்கூத்தான
கோலமே காணலாகுங்
குறியறக் குறித்துப்பாரே 88

அறிவெனு ஞானந்தன்னை
யானந்த மயமாயுச்சிக்
குறியிலே குறித்தபேர்க்குக்
கோதிலாச் சோதிதோன்றும்
நெறியிலே யமர்ந்துநின்ற
நினைவிலே நிலையதாகி
அறிவிலே யறிவைப்பற்றி
ஆனந்தமாகி நில்லே. 89

ஆனந்தமாகி நின்ற
அகாரமா முச்சிவட்டம்
வானந்த வடிவினுள்ளே
வாழ்பதி சோதிமூலம்
மோனந்த மாகிநின்ற
முத்திக்கு வித்து மாகி
தானந்தமாகி யெங்குந்
தானவனாகி நிற்பார் 90

தானவனாகி நின்ற
தாலமாமுச்சி மூலம்
வானவர் தேவர்காணார்
மதிவதாஞ் சோதிபாதம்
மானதோர காரமண்ட
மாகாய வீட்டுக்கப்பால்
ஞானவா னோக்குமந்த
நாட்டமும் வட்டமாமே. 91

வேறு

பதினாறு தெரிசனமுஞ் சுழினைவீதி
பாதையிலே செல்லாது பரத்தேநிற்கும்
பதினாறும் பரந்தனிலே தோன்றுமல்லாற்
பராபரத்திற் செல்லாது பரத்தேநிற்கும்

பதினாறு மோரெழுத்தா யுச்சிமீதே
பார்வீசும் புந்தானாகி பரத்தேநிற்கும்
பதினாறு தரிசனங் கடந்து ஞான
பாதமதைக் குருவருளாற் பற்றிநில்லே 92

குருலிங்கசங்கமு மொன்றாய் நின்ற
குறியதனைச் சுழிமுனையிற் குறித்துக்கொண்டு
குருலிங்க சங்கமாஞ் சோதிமூலங்
கூறறியப் பளிங்கொளியாய்க் குருவுமாகி
குருலிங்க சங்கமாய்ப் பொருள்கள் மூன்றுங்
கோதிலா நாதாந்தக் கூத்துமாகி
குருலிங்க சங்கமாய்ப் பொருள்கள் மூன்றுங்
கோதிலா நாதாந்தக் கோலமாமே. 93

பிண்டரண்ட வேறுபீட
பிரணவமாகிப் பேரொளிதான்
அண்டரண்ட மெண்டிசைப்
பிறத்தாகி வானந்தத்தே
தொண்டாகித் தொண்டின்
தொழில் மூன்றாகித் துரியமற்றுங்
கொண்டாடி யுச்சியின்மேற்
கொண்டகோலங் கோலமதே. 94

உச்சித்துளை வழி முடிந்திறையை
உருவி யொன்றாய்
நச்சிவமான நாதாந்தக்
கூத்தி னடனமதாய்
விச்சின் விரிசுடர் மூன்று மொன்றாகி
வியாக்கிரமத்தே
வக்கிரமான செகசோதி
பரத்தில் வாழ்ந்திடுமே. 95

மாறாத்தியானந் திருவடித்தாமரை
    மனத்தி னுள்ளே
கூறாத்தியானம் வதிறெழுத்துக்
    குருவருளால்
வாறாதாரங் கடந்தானந்தமான
    அகாரத்தாலே
நீறாகுமென்ற திருவடித்தாமரை
    நேசித்தவரே. 96

செகமாய் கைநீக்கிப்பின்
    சிற்பரமாய்கை செயலறிய
அக மாய்கை யாகிய
    ஆணவம் மூல மானதெல்லாம்
சுகமான துக்கசடசுந்தரமான
    சுடர் சத்தியாம்
மகமான பேரொளி பாதார விந்தத்தை
    வுன்னி நில்லே. 97

திருவள்ளுவர் நாதாந்தத் திறவுகோல்-97

முற்றிற்று

உ

சிவமயம்

திருவள்ளுவ நாயனார் குரு முடிக்கப் பாடிய நூல்

ஏணி ஏற்றம்

காப்பு

ஐந்து கரத்தோனே யானை முகத்தோனே
தொந்தி வயிற்றோனே துணையிரும் எந்நாவில்
சிந்தையுடன் நின்று சேவித்து ஏணிஏற்றம்
எந்தனுடன் இருந்து விளையாடும் அம்மா. 1

இருந்து விளையாடும் ஏணி பங்காளா
கரும்பு இளநீரும் கற்கண்டு தேனும்
சிறுபயிறு உண்டை சீர்தனில் கனியும்
அரும்பு மலர் தூவி அர்ச்சனைகள் செய்தும். 2

செய்தோர் சித்தர்கள் பாதம் போற்றி
மெய்யனே கண்ணே விநாயகனே காரும்
பையரவம் பூண்ட சிவம்பாதம்
அய்யம் அறம்போற்ற ஆண்டவனே காரும்! 3

ஆறுமுகத்தைய்யா அருமைக் குமாரா
கூறும் வடிவேலே கோதைவள்ளி பாகா
ஏறும் மயில்வீரா ஏழை பங்காளா
பாரும் ஏணிஏற்றம் பாட வரம்தாரும். 4

சித்தர் பதினெண்பேர்கள் சீர்பாதம் பணிந்தேன்
அத்தி புறத்தாளன் அகத்தியர் தன்பாதம்
பக்தியுடன் நானும் அவர்பாதம் பணிந்தேன்
முக்திபெற சித்தர் முனிவர் பதம் காப்பு. 5

காப்பதும் முக்தி ஏணிகை தொழுதே பக்தி
தோப்பது தொண்ணூற்றாறு சோதிநிலங்கள் காணீர்
முப்பது பார் வேலிஎங்கள் முழுப்பட்ட எங்கள் பூமி
உப்பது தொண்ணூற்றாறு (96) உவர்நிலங்கள் காணீர். 6

பூமிவழக்குகள் உண்டு பிள்ளைகள் ஐந்து உண்டு
சாதிவழக்குகளும் உண்டு இதில் ஜாதிகுலங்கள் வேறு
நேமித்த வழக்கு நிலக்கரைக்காடு
தாமிசங்கள் உண்டு அதில் சண்டை வழக்குகள் உண்டு. 7

வழக்கிட்டபூமி விளைவு அற்பம் பொட்டல்
(அழுக்கிட்ட பாண்டம்) அது வெள்ளைச்சாரை
பழுத்திட்ட நஞ்சு பாங்களது வெள்ளை
தளுக்கிட்ட பூமி தாங்கழுதை மேயும் 8

மேயுமடா மாடு விளைவுஅற்ற பூமி
நாயமதைதீர்க்க நல்லவர்கள் இல்லை
தாயும்மகளும் ஆறு சண்டையிட்ட ஊரு
பேயும்பனிக்காடு பெரிய வண்ணான் வீடு. 9

பூமியாளும் ராஜன் பொது நிலமாய்த்தள்ளி
வாமிகளும் சித்தர் மண் எடுக்கும் பொட்டல்
தாமிது பார் நல்ல சதுரமுள்ள பூமி
காமிகளும் கண்டால் கலங்குமடா அந்தபூமி. 10

எங்களது மூன்று பெரிய பையன் இரண்டு
பங்கு வீரம் ஐந்து பாதி என்னு தென்று
தங்களுக்கு ரொம்ப சாட்சிகளும் உண்டு
பங்கமுள்ள கூத்து பாட்டுகளும் ரொம்ப. 11

பாட்டுகளும் ரொம்ப பாணமர ப்புண்டு
கூட்டு மரப்புண்டு கைபாகம் உண்டு
(நாட்டில் இது உண்டு) நான் உரைத்ததென்று
சாட்டுவர்த்தைஉண்டு சாஸ்திரம் பார்இரண்டு 12

பார்என்று சொன்னார்கள் பதினெண்பேர் சித்தர்கள்
கூறினார் இவர் கொடிய சட்டைநாதர்
தாருமாறுபேசி சாஸ்திரத்தை அமைத்தார்கள்
ஆரும் அறியாமல் அடக்கம் இறுநூறு. 13

இரு நூறும் பாரும் ஏணிஏற்றம் பாரும்
கறந்த பால்போலே கைமுறைகள் காட்டும்
தர்மமடா கூட்டம் சாஸ்திரங்கள் ஆட்டம்
அறனுடையமூப்பு யார் சொல்வார் தோப்பு. 14

தோப்பு மரம் கூறு சொற்பொருளும் வேறு
ஆப்படிக்கும் வாயில் யார்சொல்லக் கூடும்
ஒப்பமுடன் சொன்னேன் ஒழுங்கு மூப்பு என்று
தப்பிதங்கள் உண்டு முன் சாற்றினதுஉண்டு. 15

உண்டுது பார் கண்டு ஒழிந்தது பார் இரண்டு
கண்டுவிட்டார் பார் உண்டு கைமுறைகள் தோற்றும்
பண்டு பலநூல் பார்த்து அறிந்தோர்கள் செய்தார்கள்
தொண்டு பணி செய்தால் தோஷங்கள் இல்லை என்றார். 16

ஏணி ஏற்றம் பார் எடுத்துரைக்கும் முப்பு
காணியது கோடி ஸ்கைமறப்பும் இல்லை
பேணியது பாரு பேதமது நூறு
வாணியவள்கூட வாய்மொழிசொல்வாளே 17

சொல்லிய நூலில் சூதும் மறப்பும்ஏது
அல்ல தை மாசி அமர்ந்த மீனம் மேடம்
வெல்லும் பணி காலம் வேலைசெய்யும் மாதம்
கல்லுமது உருகும் கடினவெயில் காலம் 18

வெயில் காலம் போனால் வேதை செய்வதுண்டோ?
பெய்யவந்து சித்தர் பசப்பி என்சொல்கேட்பர்
கையிலும் இல்லை கருத்தொன்று சொன்னேன்
ஐய்யேசிவன் என்றுஅழுது கெட்டுப்போனார். 19

சித்தர்வந்து என்னை சீர்கெட்டுப் பேசி.
புத்திஉள்ளோன் என்று பொறுமை கொண்டு போனார்
சத்தியமாய் எங்கள் ஜாதிவம் சத்தில்
பக்திஉள்ள பேர்க்கு பலிக்கும் ஏணிஏற்றம். 20

வெயில் அது போனால் வேதை ஒன்றும்ஆகா
தை மாசி அந்தோ தலம் சுத்திப் பார்த்தேன்.
பையனொரு வண்ணான் பாட்டுச் சொல்லக் கேட்டேன்
மெய்யது பார்வண்ணான் மண்ணெடுக்க கண்டேன். 21

என்ன செய்யவென்றேன் எனக்குரைத்தான் வண்ணான்
பொான் விளையும் மண்ணு இது பூர்வத்திலே கல்லு
கண் வைத்துப் பாரு கருத்துள்ள மண்ணு
சோதி நூலை நான் பார்க்க தோற்றவில்லை என்றேன். 22

வாதிமகனோ நீ வைத்தியன் மகன் என்றான்
நீதியுடன் கேட்க நிர்ணயமாகச் சொன்னேன்
வாதிமகன் நானே வைத்தியனாம் என்றேன்
பூவிருக்கும் இன்னும் பொருள் இருக்கும் என்றான். 23

மாதிருக்கும் அண்டம் மனிதர் பிள்ளை அண்டம்
காலிருக்கும் சாலை கசிவும் மண்ணும் தண்ணீர்
நாவெடுத்து வண்ணான்நடக்கஎன்ன சொன்னான்
சொன்ன மொழிகேட்டு சோம்பி அழுதேன் நான். 24

கண்ணெடுத்துப் பார்த்து கைவிடுத்து அழுதான்
பொன்விளையும் பூமி பொருள் உரைக்கும் என்றேன்
பொன் விளையும்பூமி பொருள் உரைக்கும் சொல்லும்
பொருள் உரைப்பார் கேளும் புண்ணியனே நல்ல 25

கருவுரு வாய் மேகம் கல்மழைகள் பெய்யும்
அருவுருவாய் மேகம் ஆர்ப்பறித்துப் பொங்க
மருவுருவாய் மின்னி மண்ணில் இடிவிழுக
விழுந்த இடி மின்னல் வெந்தது பார்மண்ணு 26

சூழ்ந்தது பார் வன்னி சூழ்கல்லில் ஒன்றாய்
தாழ்ந்தது பார் பூமி சாரை வெடி உப்பாம்
ஆழ்ந்தது பார் வேதம் ஆனஜலம் மட்டும்
ஜலத்திலே அழுந்தி தான் எழுந்தது பார் பொங்கி 27

குலத்திலே எழுந்து கொண்டலுக்குப்போக
நிலத்திலே இருந்து நீலியவள் கண்டு
களத்திலே சினத்தில் கண்டு மெவள் மண்ணில்
மண்ணிலே மறைந்தாள் மற்றொருவர் காணார் 28

விண்ணுக்குப் போகாமல் மண்ணுக்கள் மறைந்தாள்
கண்ணுக்குத் தோன்றாமல் கல்லும் அண்டம் ஆச்சு
எண்ணிக்கையாகச் சொன்னேன் ஏகவெளி தன்னில்
அண்டமாய் விளைந்து அடியில் நிறம் கல்லு 29

கண்டவர்கள் உண்டு கல்லினுடைய தன்மை
பிண்டமது மேலே பிறந்த மண்ணு வெள்ளை
உண்டது பார் மண்ணில் ஆதிஉற்பவங்கள் சொன்னேன்
சொன்னதை அறிந்தேன் சூட்சமதைக் கண்டேன். 30

மண்ணெடுக்கும் காலம் மகிழ்ந்து உறைக்க வென்றேன்
பொன்னெடுக்கும் காலம் புகழ் தை மாசி
விண்ணெடுத்த காலம் மீனம் முதல் மேடம்
பனி பெய்யும் காலம் பாரும் களர்மண்ணில். 31

இனிய மது விந்துஇறங்குவது பார் மண்ணில்
தனிய ஐந்து பிண்டம் தானது பூநீராய்
புனிதமாய் பிறக்கும் பிள்ளை ஐந்து மண்ணு
முதல் பிறந்த பிள்ளை மூத்தவளும் பெண்ணாம். 32

வனிதவிழிமாது வளையல் செய்யும் போர்க்களம்
அதற்கு இளைய பொண்ணு அழகுமிகு வண்ணானுக்காம்
அதில் மூன்றாம் பொண்ணு பாரும் வைத்தியர்க்காம்
நாலாவது ஆண் நல்லது பார்வாதம். 33

பாரும் அதுகற்பம் பாரும் ஐந்தும்ஆணாம்
காலும் தலையாக கண்ட ஐந்து பிண்டம்
சீலம் உள்ளமாது தெரிந்து எடுப்பார் பாரு
இந்த வகையாக எடுக்கச் சொன்னேன். 34

சந்தேகம் இல்லை சரியா வெடியக்காலம்
அந்தமுள்ள பானு அது பாடும் முன்னே
சொந்தமுள்ள பூவை தொட்டெடுப்பாய் நீயே
பூர்வத்தில் சத்தி பூவெடுக்கும் சித்தி 35

பாரும் தேய்பிறையில் மண்ணும் சிவன்கூறு
வாரும் ஓர்படிக்கு பனிஜலம் தான்நாலு
வாரும் மறுபாண்டம் வைத்தே தெளியமட்டும்
காலையில் இருந்து கடைந்து ஆடைபோக்கி. 36

வாளியிலே விட்டுவந்த மட்டும் வெயில்
சோலதுபோய் காய்ந்து சுண்டிய நீரெல்லாம்
கோலமிது வாகும் கொடியமுதல் தீட்சை
தீட்சைமுதல் பானை தெளிந்த காய்ந்த அண்டம். 37

கூச்சமறசொல்வேன் கொடிய இரண்டாம்தீட்சை
வாச்சஅண்டம் தன்னை வலிய கல்வத்தால்வூட்டி
தோச்சமாவு ஒன்று சொன்னஜலம் நாலு
ஊட்டுவதுக் கொன்று உண்மைசொன்னேன் கண்டு. 38

நாட்டமுடன்வைத்து நல்ல தெளிவிருத்து
சூட்டுமது விட்டு நுரைகள் கடைந்திட்டு
ஊட்டு நுரைதள்ளு கொடிய வெய்யில் நாட்டு
வெய்யிலிலே காய்ந்து வெண்மை சுக்கான் போலே. 39

கையினால் எடுத்து கல்வத்தில் அரைத்து
பையமாவு ஒன்று பனிஜலம்தான் நாலு
தையலரை விட்டு ஜலம்தெளிய இருத்து
மையவிட்டு நல்ல வகையாகக் கடைந்து. 40

கல்மிசத்தைப் போக்கி கதிர்முகத்தில் வைக்க
சுத்த ஜலம் சுண்டி சுவரது காய்ந்தாற்கால்
சத்தியமாய் வெள்ளைதான் காணு மட்டும்
தீட்சையதுமானால் முன்சேர்ந்தமுக்குணங்கள். 41

ஆச்சிது பார்வெண்மைஅகண்ட மாரச்சுண்ணம்
காய்ச்சவும் வேண்டாம் கனல் நெருப்பும் வேண்டாம்
ஆச்சிது பார்சுத்தி வண்ணான் சொன்ன புத்தி
பத்திரமாய் பதனம்பளிங்கு குப்பியில் அடைத்து. 42

முத்துப்போல் பூநீர் முதல் உப்புச் சுத்தி
சத்தியமாய் பூநீர் தான் கசிவு போக
தீட்ச பிரிந்தால் தெளிந்த ஜலம்சுத்தி
ஆச்சிதிது வென்று வையகத்தில் வாதி. 43

சாட்சி இல்லை என்று சந்தோஷம் பேசினார்கள்
ஏச்சது பூநீரு என்னைக் கலக்கவில்லை
மாது கற்ப மாகி ஐந்தனையும் பெற்றால்
சூது கசவெல்லாம் துலக்கம் செய்வார் போலாம். 44

பேதங்கள் போக மெத்தஆக மட்டும்
சாதகப் படிக்கு சடங்கு செய்ய சுத்தி
பாத்திருந்து பாதி பாவனைகள் தோற்றாமல்
காத்திருந்து பூவை கண்டபடிவாரி. 45

பாத்திரத்தில் போட்டு பனிஜலம் விட்டு
தோத்திரங்கள் செய்து சுடர்முகத்தில் வைத்து
சுடர்முகத்தில் வைத்து சுத்திசெய்தோம் என்பார்
படம்எடுத்த நாகம் பாம்பு விஷம் போக 46

திடமுடையசித்தர் தீட்சை பத்தும் செய்தார்
திடமுடன் சொன்னேன் சாஸ்திரத்தைவிட்டு
பூத்தநீர் தன்னை போய் எடுத்தால் என்ன
சாத்தினார் பார் பூநீறு சரிஆயிரத்து ஐந்நூறு. 47

வேற்றுமைகள் இல்லை விதமாய் எண்ணெய்கழி
பூத்த மலர்போலே பூவினுடைய வெண்மை
கலரிலுள்ள பூவை கண்டபடி வாரி
அவருவாய் இட்டால் அது சுத்த பூவா. 48

ஊர் கசிவு எண்ணெய் உட்கலந்து கொண்டு
தரை நசிவு சுண்ணம் சாரை குணம் போனால்
பூவதுபோல் பூ நீர் பூவேலி கட்டப் பூக்கும்
நாவது பார் சொன்னேன் ஆயிரத்துஐந்நூறு 49

பாவனையாய் எடுக்க பழுதுஒரு நாளும் இல்லை
ஆனதுபார் பூவை அறிந்து சுத்திசெய்யே
செய்யமுறை நன்றாய் சுத்தி செய்ய முத்தி
கைமுறையை சொன்னான் கண்டித்துப் பார்மெய்யே. 50

பொய் உரைக்க வில்லை பொருள் உரைத்தேன் தீட்சை
மெய் உரைத்தேன் பத்து மேன்மை உள்ள தீட்சை
முப்பதிலே சொன்னேன் மூர்க்கமது சுத்தி
தப்பி தங்கள் இல்லை சரி ஏணிஏற்றம். 51

செப்பமுடன்வழலை சீர்பாதம் மறவேன்
ஒப்பமுடன் பூநீர் ஒழுங்கும் சுத்தியாச்சே
கசிவுகளும் போச்சே கல்லுப்பின் பிறப்பே
அசுவி இடி மின்னல் அதியகல் மலைகள். 52

ஓவுடனே பெய்யும் உவர்கடல் நீர் தன்னில்
விசும்பியே இடிவீழ்கவெந்து கடல் நீராகி
கலங்கியே நீரெல்லாம் கடலில் கல்லுப்பாசு
அலைகளும் மோதஅது தெளிந்து உப்பாக 53

மலைகளதுப் போலும் மறிவிட்டவாறே
ஜலத்திலே கிடக்கும் தான்கறையா கல்லுப்பு?
தானத்தை அறியா ஆதிசாமி செய்தஉப்பு
தோணவும் மாட்டாது சோனை மண்பெய்யா 54

பானுவின் சுடரு பட்டவுடன் உப்பாம்
சோனகரும் கண்டு சொர்ண உப்பை செய்தார்
பாத்தி கட்டி நீரை பாய்ச்சி உப்பாகும்
ஊத்து கட்டி போலே உலர்ந்தது பார்கல்லாய் 55

அரத்திலுடை யார்க்கு ஆன கல்லுப்பாம்
பார்த்திருக்கச் சொன்னேன் பாறை உப்பு உப்பாம்
ஆதியில் கல்உப்பு அறுசுவையில் ஆதி
ஜோதி மணி உப்பு சொன்ன கல்லுப்பு 56

நீதி மணி உப்பு நீத்தினத்திற்கு ஆதி
சாதனைப் பால் வாதம் சமச்சினங்கள் உப்பு
கல் உப்பு தாண்டா கதித்த இரண்டாம் உப்பு
நல்லுப்புத் தாண்டா நான் உரைத்தேன் தீட்சை 57

வெல்லும் கல்லும் ஒன்று வேத ஜலம் நாலு
சொல்லும் இடிமாவாய் சுத்தஜலம் போடு
தெளிவிருத்து இருத்து சிலுப்பு மத்திட்டு
கழிவு நுரை தள்ளி கண்ட ஜலம் வெய்யல் 58

அழிவு மண்படாமல் ஆதித்தன் சுடரில்
ஒளிவு விடும் கண்டாய் உறைந்து பாரேன் உப்பாம்
சுண்டியது உப்பாம் சுவர்நிலக்கல்லுப்பாம்
கண்டிது பார்சுத்தி கதித்த முதல் தீட்சை 59

கொண்டால் என்ன கல்வம் கூட்டி அரைப்பாய்
மண்டலம் ஒன்று மதிஜலம் நாலு
ஜலத்தில் அதைப் போட்டு தான் கலக்கி விட்டு
நலமாகத் தெளிய நன்றாக வடித்து 60

சுத்த ஜலம் நாலு சோதனைகள் ஒன்று
பத்தியுடன் கலக்கி பாங்குடனே தெளிய
தெளிய இருத்து மத்தால் சீரதாய்க் கடைந்து
நளிவின் நுரை போக்கி கதிரவன் முகத்தில் 61

அழிவு வராமல் அது சுவரில் காய
ஒளிவது யார் சொன்னேன் உத்தகல் உப்பு
பத்து முறை தீட்சை யாகும் சுத்திசெய்து
சுத்தமது வெள்ளை துவர்ப்பு கசப்பு ஆகமட்டும் 62

குற்றமல்ல கல்லு கொடிய தீ நெருப்பு
சித்து விளையாடு சிலன் இரண்டாம் முப்பு
இரண்டாம் முப்பு சண்டனிட முப்பு
கண்டது தான் உப்பு கைக் குடுக்கைரொப்பு 63

பண்டுள்ள நெருப்பில் பாதியாள் இருப்பாய்
கொண்டல் இண்ட தண்ணீர் கூட எய்தும் பாரே
வாதம்முறை செய்வார் வலிமை கல்லுப்பு
பேதங்கள் இல்லை பெரியவர் சொல்லு 64

சூதும் முறையும் இல்லை சூட்சமத்தை மறைத்தார்
வேத முறையாகும் விளங்கும் கல் முப்பு
பறங்கின வகைக்கு காரம் பகரும் கல் முப்பாம்
கரம் குவித்து நிற்கும் கண்டவர்க் கெல்லாம் 65

பறக்குமடா தோஷம் பாஷாணங்கள் எல்லாம்
உறக்கமது கொல்லும் ஓடும் ரசம் எல்லாம்
உப்பை அறியாதான் ஒரு கருத்தும் அறியானே
கைப்பும் முறியாதான் கருத்தை அறியானே 66

அப்பு முப்பு என்ற அன்புடன் கல் உப்பு
செப்பினார் முன்னோர்கள் தெரியவில்லைஅப்பு
கல் உப்பின் கருத்தை கண்டுரைத்தேன் முப்பு
வெல்லும் உப்பும் நல்ல வேதை சக்தி கூறு 67

புல்லும் பசும் பொன்னாம் போட்ட இடம் தன்னில்
நல்லதுபார் உப்பு நாவுருசியாளன்
உப்பை விட்டால் சுத்தி ஓடி அலைந்தாலும்
தப்பு வரும் கண்டீர் சரி ஒழுங்கு காணீர் 68

கற்பனைகள் பேசி கல்உப்பை மறைத்தார்
ஒப்பந்த மாக ஒழித்தார்களே சித்தர்
காலும் தலையாக காட்டி வைத்தார் சித்தர்
பாலும் பழம் போலே பாடிவைத்தார் சித்தர் 69

வேலும் மயில் வீரன் வெளி உரைத்தான் கண்டீர்
நாலும் ஆறு பத்தும் நல்லது பார் தீட்சை
தீட்சை பத்தும் ஆச்சு சேரிய இரண்டாம் முப்பு
ஆட்சி பதம் போற்றி அருள் பெற மூன்றாம் உப்பு 70

சச்சிதானந்த சதாசிவனைப் போற்றி
ஆனைமுகத்தோனை ஐங்கரனைப் போற்றி
சேனைமழைப் பொழிய செல்வன் இடிமின்னல்
ஈனம் இல்லாமின்னல் இடியும் கருமேகம். 71

இனமதாச்சே பூமியில் இறங்கும்
தைமுதலாய் மாசி பங்குனி சித்திரையில்
பையரவே நல்ல பனிபெய்யும் காலம்
வையரவே சவுடு மண்ணும் வெடிஉப்பாம். 72

கையரவே பொங்கி களரும் உப்பும் மண்ணும்
சரக்குமிடம் பாரும் பூமி எங்கும் காணும்
பாக்குப்போல் உதிரும் பழைய சுவர்களெல்லாம்
நாக்கில் இட்டுப் பாரு நல்லிணங்கன்மண்ணை 73

ஆக்கமுடன் தின்றால் அரியவெடி உப்பாம்
மண்ணெடுத்துத்தெளிய மகுளி அதைக் காய்ச்சி
உண்மையுடன் காய்ச்ச உவர் உப்பாம் உப்பு
கண்ணெடுத்துப் பாரு கதித்தவெடி உப்பை. 74

சொன்னேன் இதுபாரு சூட்சமுடன் வெடி உப்பை
உப்பதைக் கண்டால் உலகமது பொன்னாம்
தப்பிதங்கள் இல்லை சரிமூன்றாம் உப்பு
நம்பும் கதிராகும் அதில் காரியங்கள் ரொம்ப. 75

அப்பதுவும் உப்பாம் ஆகும் வெடி உப்பாம்
வெடிஉப்பைக் கண்டால் வேதை கையில் ஆச்சு
குடிகெடுத்து ஓட்டும் கூட்டங்கள் கலைக்கும்
படீரென்று வெடிக்கும் பாரதமும் உடைக்கும் 76

அடிமலை உடைக்கும் ஆகாசம் பறக்கும்
பறக்கும் வெகுதூரம் பருவதங்கள் காணாமல்
அரக்கது போல் கட்டும் அறுபத்தி நாலு
சிறக்க அது. காட்டும் சிரியவாய் பொத்தும் 77

உறக்கமது கொண்டும் உணரும் சரக்கல்ல
ராஜாங்கம் ஆகும் நாடெல்லாம் அடக்கும்
கூசாமல் தங்கம் கொடுத்துப்பு வாங்கும்
தேசங்கள் போகும் சில நாடுகளும்போகும் 78

வாசம் தாக்கும் வலிய வெடி உப்பு
உப்பதுவும் கைபாகம் ஊரல் அறமுப்பாம்
செப்பினது மூன்றும் சேரவில்லை அப்பால்
முப்பு என்று சொல்லி மூடிவைத்து இரண்டை 79

மூடிவைத்த தென்ன மூன்றும் ஒன்றாய் சேர்ந்தால்
கோடிவித்தை ஆகும் கொடிய விஷம் போலே
கூடிஉரைத்தாரே கொஞ்சம் மறைத்தாரே
நாடி உரைத்தாரே நாட்டோரே தீட்சை. 80

தீட்சையதைச் சொன்னோம் செய்குறியை காணார்
மூச்சும் பார்ஒன்று முப்பொருளும் என்பார்
ஆச்சுப்பார் என்பார் வகைஉரை யாதுஉண்டோ
கூச்சமறச் சொல்ல கூச்சுது மெல்ல. 81

உள்ளபடிகேளு உண்மை மூன்றாம் உப்பு
கள்ளமில்லை தீட்சை கடினமது தீட்சை
கொள்ளவெடி உப்பு கொடியஏழு காய்ச்சல்
கள்ளவெடி உப்பு கணக்குப்படி ஒன்று 82

சூட்சமது சுத்த ஜலம் படிநாலு விட்டு
ஓச்சலுடன் இடித்து ஒன்றாய்க் கலக்கி
காச்சிடவும் வேண்டாம் கலக்கிவையே தெளிய
மீட்சிமேலாக இருத்து மத்திட்டுக் கடைந்து. 83

தெளிய உரைவாய் பீங்கான் சீரதாய் விடுத்து
ஒளியாய் வெயிலில் வேகமது சுண்ட
வடியும் ஜலம் எல்லாம் வற்றியது கண்டால்
ஒளிவெளியே மல்ல உள்ள ஜலம் சுண்ட 84

காச்ச பின்பாரு கடினமது தீட்சை
ஓச்சமுடன் வாரி உரலிலிட்டு இடித்து
வாச்ச மாவு ஒன்று மதிஜலம் பார் நாலு
ஈச்சமுடன் கலக்கி இன்பமாய்த் தெளிய. 85

இன்பமாய்த் தெளிய இருத்து மறு பாண்டத்தில்
நம் போக மாக தான் கடையமத்தால்
அமரர்களும் போற்ற அசடில்லா நீரை
நம்பியே பீங்கானில் நாட்டியே வெயில்வையே 86

வைத்தே இருபாரு மறுவு இரண்டாம் தீட்சை
சுத்தமாய் வெயில் சுண்டியது காய
உத்தமனே இரண்டாம் தீட்சை ஒழுங்காகக்காக்க
பக்தியுள்ள நல்ல பளிங்கு உப்பெடுத்து. 87

எடுத்த இடிஉப்பை இரும்புலக்கை தன்னால்
ஒடுக்கமிதுப்பார் உப்பு படிஒன்று
படும் முன்னே நல்ல பனிஜலம் தான் நாலு
மறுபாண்டத்தில் மார்க்கமாய்த் தெளிய. 88

மார்க்கமாய்த் தெளியவை வகையாக இருத்து
கார்க்குமது மத்து கடந்து நுரை போக்கி
தீர்க்கமாய் பீங்கானில் சூரியனில் வைத்து
பார்க்க அது சுண்டி பளிங்கு நிறம் கம்பி. 89

கம்பியது தீட்சை கண்டது பார்மூன்று
நம்பு என்றுசொன்னேன் நல்ல உப்பு எடுத்து
தெம்புடன் உப்பு மூன்று பனிஜலம் படிநாலு
இன்புடனே ஒப்பு இனிய மட்டும் இருத்து 90

தெளிந்து இருத்து நல்ல சீருள்ள பீங்கானில்
கழிவு நுரை போக கடைந்திடுவாய் மத்தால்
அழிவுவராமல் அகலமுள்ள பீங்கானில்
ஒளிவது பார் பருதி உத்த சுடர்தன்னில் 91

உத்த சுடர் தன்னில் உள்ள ஜலம் சுண்டி
முத்துப்போல் காய்ந்து முழுகும் கம்பிப்பொன்னாம்
வெற்றியுடன் நாலும் முடிந்தது பார் தீட்சை
பத்துமுறையாக இத்த பாகம் தவறாமல். 92

சுத்திமுறை நன்றாய் சொல்லி முடிவாச்சு
பக்தியுடன் சுண்ணம் பண்ணும் வகை கேளு
சத்தியுடன் வெடியுப்பு சுத்தியானது ஒன்று
முக்திதரவேணும் என்று மூட்டும் கல்வத்தில்இட்டு. 93

ஆட்சி பதம் தந்தாய் ஆறுவகை ஜெயநீர்
மூட்டுவதுவில்லை மோகனரூபம் போலே
காட்டுவது வெயில் காய்ந்து உலரு மட்டும்
மூட்டுவது ஓட்டில் மூடிசீலை ஏழு. 94

ஆகும் எருவு ஐந்து அளவாய் புடம்போட்டு
வேகமுடன் வெந்து மெத்த ஆறக்கண்டு
பாகமுடன் நாலு பாகம் மறைத்தே தான்
நாகமுடன் வெந்து தனித்திருக்க சுண்ணம், 95

சுண்ணம் மூன்றாம் முப்பு சூட்சமது சொன்னேன்
அன்னவிதைவேறே அடக்கம் செய்குப்பி
பின்னும் இரண்டாம் முப்பு வினையரவே சொல்வேன்
கண்ணும் மணிபோலே கைமுறையாய்செய்ய 96

செய்யும் வகைசொல்வேன் சிறந்த கல்லுப்பை
ஐயமறக்கல்வம் அன்புடனே போட்டு
பொய்யல்ல முன்நீரால் புகட்டி அரை ஜாமம்
மெய்யது பார் ரூபாய் வீதம் அதுபார் வில்லை. 97

வில்லை அது வெயில் வெண்கலம்போல் காய்ந்திடும்
சொல்லிவையும் மண் ஓட்டில் சூட்சமாம் வைத்து
நல்லது பார்சீலை நாட்டமுடன் ஏழு
வல்லவனே நல்ல வகை எருவு ஐந்தில் இட 98

சீலமுடன் வெந்து சிறக்க புடம் ஆறி
ஆலயம் போல் கண்ணி அவிழ்ந்தது பாரு
வாலைபதம் போற்றி மன்னவனே கண்ணம்
வேலை இல்லை பாரு வேதை முடிவாகும் 99

இப்படியே நாலு எண்ணிப்புடம் போடு
செப்பமுடன் ஐந்து செய்யும் புடம் முன்போலே
தப்பிதமே இல்லை ஜெய நீர் தன்னால்
ஒப்பிதமாக ஒரு சாமம் ஆட்டி 100

ஆட்டியது வில்லை அது சிறியதாக
தாட்டியமாக சலுதியில் வெயில் வையே
மேட்டி மையாக வெயிலிலே காய
சூட்டிவையும் கட்டில் சீலை ஏழு செய்து 101

தன்வில் எரு ஐந்து தட்டிப் புடம்போடு
உன்னிதமா வென்று ஒழுங்காய் புடம் பாரு
பொன் இதுபார் நல்ல புடம் எடுத்துப் பாரும்
சுண்ணம் இது வெண்மை சொர்ணம் முடிவாச்சு 102

கல்லுப்புச் சுண்ணம் கருத்தே உரைத்தேன்யான்
நல்ல முதல் உப்பு நாட்டமுடன் பூநீர்
வேகமுடன் ரொம்ப வில்லு முதல் உப்பு
சொல்ல நாவும் உண்டோ சூட்சமுடன் முதல்உப்பு 103

சூட்சமது முதல் உப்பு சுண்ணம் செய்ய கேளும்
போச்சலுடன் சுத்தி ஒழுங்கி கண்ட பூவை
மூச்சுவிட வேண்டாம் மூட்டும் கல்வந்தன்னில்
கல்வமதில் விட்டு முன்காரம் ஜெய நீரால் 104

நல்ல பக்தியால் நாட்டும் ஜாமம் இரண்டு
வல்லமையாக வில்லை சிறியதாக
செல்லுவது பார்வெயில் சூட்சமது காய
காய வைத்த வில்லை கனத்த ஓட்டில் வைத்து 105

நாயமது சீலை நாட்டிவிடு ஏழு
தாக்குப் பதத்தைப் போற்றி தாக்கிபத் தெருவின்
ஆயிபதம் போற்றி அதன்பின் பற்று
பாடும் பூநீர் சுண்ணம்பார் துருசு அங்கே 106

வேறுபட்டு பச்சைநிறம் வெள்ளை நிறமாக
சீருடன் நாலு புடம்முன் போலே
யாரும் சொல்லவில்லை ஐந்து புடம் கேளு
கேளுமடா நல்ல கல்வமதில் இட்டு 107

நாலுமுடன் முன்ஜெய நீர் தன்னிலே அரைத்து
நாலும் சிறு வில்லை நாயமதாய் வெயில்
தாளமதுகாய தட்டிப் பார் சத்தம்
வகையா ஓட்டில் வைத்துச் சீலைசெய்து 108

வகையாகப் புடம் போடே சித்தர்கள் சகாயம் வேண்டும்
பொருள் அறிந்து தொடர்புகள் அறிந்து
தானம் அறிந்து சாஸ்திரம் அறிந்து
சித்தர்கள் பாதம் அறிந்து செய்தலே நன்று 109

திருவள்ளுவர் ஏணி ஏற்றம்

முற்றிற்று

உ

சிவமயம்

திருவள்ளுவர்

முப்புக் குரு–11

ஆதியந்தமு மேயடைத் தாண்டருள்
    ஜோதியாம் பர நாதனடி தொழ-அருள்மேவி
நீதியாயெனை யீன்றரு ளன்னையாம்
    சாதிபெண்குலத் தாரணி பூரணி-அடிபோற்றி
ஓதியாயெனை பெற்றதோர் வாலையாம்
    மாது பங்கய மாமலர் சூடியான்-பணிவேனே
ஈதறிந்து யியம்பினன் றிருவருள்
    ஓதுமே தடை யில்லை யென்னூலது-
        எழியோர்க்காய் 1

எழியனா யிரமே றுடனைந்து நூர்
    பொழியு மேகம தாகவே கூறினேன்-புவிமீது
கிழியு மெட்டுநூர் பொழியு மைந்து நூர்
    விழியுமூன்றுநூர் சுழியுமொன்று நூர்-குருவாக
விழியு மென்று நூர் புகழு மைம்பது
    சுழிவு முப்பது அழிவில்லாத னூல்-பதினாறு
ஒழிவும் நாதநூர் விதியறிந்திடு
    அழிவிலாப் பொருள் மொழியும் பத்தொன்று-
        பொதுவேலம் 2

ஏலயேல மெனக் கூவிப் பாடுறேன்
    ஜாலஜாலஞ்சை யோகமறிந்திடார்-சனியாலே
கோலகாலனருள் நீலகண்டப் பொருள்
    நீலிநீலி யெனுந் தாயுமோன மருள்-தருவாளே

ஆலியாலி யெனும் ஆயி சொன்னதிது
    போலி போலியென ஊர்கள் சுற்றியே-திரிவாரும்
வேலி வேலி தழை காய் கிழங்கு கனி
    நாலி நாலி யென வாகுவாகுமென்ப-திதுமோசம். 3

மோச மோச மென்றே யுறைபாடுவான்
    ஆசபாசவினை யானதை யொளித்தோ-ரனு...ரே
நேசனான ரசவாதி யென்பவன்
    தேசதேச மதி லேதிரிந் தவனும்-வந்தேதான்
மோச மாகிக் கண் கெட்டலைகுவார்
    கோஷ பீஷ மறியாத மூடர்கள்-தெரியாமல்
வாசி வாசி வா ரேசகத்தி லருள்
    பூஜை யுற்றுமன நேசமுற்றவன்-தனவானே. 4

தனந் தனமென எண்ணிடும் பேயர்கள்
    தனமுங் கண்டிடார் நினைவுமாறாது-அலைவாரே
நினைவிலாததோர் எனது சீடனே
    உனது மீதினி லன்பு வைத்துமே-உரைசெய்வேன்
கனக காரமது புளியதாகி விடும்
    முன்பதாகவே முப்பு மார்க்கமு(ம்)-மறிவாயே
தினமதாகவே பனியின் காலமதில்
    நினைவதாகவே கவனமாயெடு-இதுதானே! 5

தானமென்ற பொருள் தன்னைத் தானேயறி
    மோன மந்திர சாரமுண்டதில்-தெரிவாயே
ஏனமாளவும் யாக மீறிடா
    சோனையும் பொருள் கானங்கூடிட-அறிவாயே
தானமாகவே தானு மீய்ந்திட
    காணலாமிது காரசாரமுங்-கரைத்தேதான்
வான வன்னியில் காய்ந்த பின்னது
    சீனகுப்பியில் நாணயத்துடன்-அடைத்தே தான் 6

அடைத்த பின்னதில் அவ்வை யுச்சரி
அடைத்து மண்டல மேகழித்தெடு-கதிரோன்முன்
இடத்தினிற் பெரு மிடத்தில் வைத்திடு
சடத்த மின்ன மோரிடத்தில் வைத்தெடு-சரியாக
அடைத்துப் பூமியின் நாதமெடுத்ததை
அடைத்த தவ்விடம் புடத்தை முடித்திடு-வகையாக
திடத்துடனிரு யெழுத்தை யுமதில்
அடைத் துடனொரு வார மானபின்-அதின்மண்ணை
7

மண்ணைக் கெல்லியே மாரள வெடு
விண்ணு மண்ணுமே வளைந்தொரு ரூபமாய்-
நிழலாகும்
கண்ணில் கண்டதவ் வெழுத்தை யுச்சரி
பண்ணுஞ் சாரைபோல் பாயுஞ் ஜெலக்குமிழ்-சரியாக
திண்ணமாகவே சேர்ந்த வைப்பிது
வண்ணமெட்டுள திக்கு பந்தனஞ்-செய்வாயே
எண்ணி யெண்ணியே ஏழைமாந்தார்கள்
மண்ணி லுன்னியே மடிந்தார் கோடியே-அறியாமல்!
8

கோடியான கல்லுத் தேடியெடுவினை
யாடலாமதில் வீடெலாந்தங்க-மிதையீசன்
வாடிடாமலே ஆதி யிலிதைத்
தேடிவைத்தனன் யோகிகட்குமே-தெளிவாக
நாடியசித்தன் கூடி வாழ்ந்திட
மாடிகட்டிடப் பாடிப் படித்திதைச்-செய்வார்கள்
சாடிடுங்கார சார வுப்பையும்
போடு போடுநீ புளியதாகிவிடும்-புகலாதே 9

புகலிடாமலே குப்பியிலே யடை
ஜெகத்தில் மண்டலஞ் சமாதி கழித்தெடு-கனிவாக
இகபரம் புகழ் மௌனமந்திரம்
அகமகிழ்ந்திட துகையறு நூறு-உரைப்பாயே
வகையதாகவே கல்வந் தன்னிலே
தகைமை நீவிட்டு தானரைத்துநீ வடிவாக
துகையதாகவே ரவியிற் காய்ந்தபின்
பகலிலேழுமண் சீலை செய்து நீ-புடம்போடு 10

போட்டுப் பின்னதை வாட்டியே யெடு
காட்டுவாய் பரிபத்து கொன்றிதை-இடுவாயே
நாட்டு நாட்டுநீ நாலுயுகம் வரை
ஆட்டு ஆடுநீ யார்க்குங் காட்டாதே-வெளியாக
பாட்டிலே பயனின்ன திதுவென
ஏட்டிலெழுதின காரிய மறிந்துநீ-செய்வாயே
நாட்டு மாட்டென பதினொரு பாட்டையும்
கேட்டுக் கொண்டுநீ கிரகித்தறிந்திடு-முடிவாமே 11

திருவள்ளுவர் முப்பு சூத்திரம் பதினொன்று என்ற இதை என்னிடமுள்ள சுவடி எண். 0479 ல் இருந்து பிழையற எடுத்து எழுதப்பட்டுள்ளது

ஓம்-தத்-ஸத் !

உ

திருவள்ளுவர்

வாத சூத்திரம் 16

பூரணமாய் நின்றெழுந்த முதல்வன் காப்பு
புகழ்பெரிய அம்பிகைப் பெண் பாதங்காப்பு
காரணமாங் காரசாரக் குருவாங் காப்பு
கதித்தெழுந்த சுழிமுனையின் பாதங்காப்பு
வாரணமாம் ரவிமதியும் வழலை காப்பு
வாக்குதவுஞ் சரஸ்வதியும் பிரம்மன்காப்பு
ஆரணமாம் லட்சுமியின் பாதங்காப்பு
ஆறுமுகனுங் கணபதியும் ஆதி காப்பே! 1

காப்பாக என்கருத்துக் கிசைந்து மைந்தா
கருத்துள்ள ஏலேலச் சிங்கமே கேள்!
வாப்பாக மறைவான முப்பு மார்க்கம்
வகைதெரியச் சொல்லுமென்று பணிந்து கேட்டாய்
ஏப்பாக சித்தரெல்லாம் பாடி வைத்தார்
என்மகனே அதையறிய வயதோ யில்லை
தாப்பாக முப்பூவை வெளியதாகச்
சாற்றுகிறேன் சிந்தை வைத்து மகிழ்ந்துகேளே! 2

கேளப்பா ஈரடியாய் வேதஞ் சொன்னேன்!
கெடியாக இவ்வுலகோர் பிழைக்க வேண்டி
கேளப்பா பரிபாஷை ஒன்றில்லாமற்
கொட்டினேன் ஆயிரத்தைந் நூற்றினுள்ளே
தாளப்பா அதைக்கு குறுக்கி எண்ணூற்சொன்னேன்
தயவாக அதைகுறுக்கி ஐந்நூற் சொன்னேன்
மூளப்பா அதை குறுக்கி முந்நூற் சொன்னேன்
முக்கியமாய் நாதாந்தம் நூறு சொன்னேன்! 3

சொன்னேன் இவைகளிலே விரிவாய்த் தானே
துய்யகுண முள்ளதிட சித்த சிங்கா
பொன்னே நற் புத்திதனில் மிகுந்த பிள்ளாய்
பூரணமாய் முப்பதுக்குட் கருவை யெல்லாம்
பின்னாலே பரிபாஷை பிழை யில்லாமற்
பேதாதி பேதங்கள் தவறில்லாமற்
பன்னாமற் கோராமற் பதம் பிரித்துப்
பாடுகிறேன் வெள்ளையாய்த் தெரியத்தானே! 4

தானான வாதத்தின் முப்புக் கேளு
தலைகீழாய் பாடி வைத்தார் சித்தரெல்லாம்
ஏனோதா னுலகத்தோர் மலைக்கும் வண்ணம்
ஏகமாய்ப் பரிபாஷையாகச் சொன்னார்
வானபிரா னெனக்குரைத்த வண்ணமாக
வஞ்சனைக ளில்லாமற் சொல்லக் கேளு
காணாத காரத்தின் பெருமை தன்னைக்
கண்காட்சி யாகவே தான் காட்டுவேனே! 5

காரமென்றும் வீரமென்றும் பச்சையென்றும்
கதிரென்றும் கன்னியுட நாதமென்றும்
பேரான பிண்டமென்றும் குருவண்டென்றும்
பேர் பெரிய கும்பிக்கல் வழலை யென்றும்
வாரான புளியென்றுஞ் சவ்வாதென்றும்
வகையான ஐங்கோல வன்னியென்றுங்
கூரான கோஷமென்றுங் குமரியென்றுங்
குணநீர்மேல் நெருப்பென்றுங் கூறுந்தானே! 6

தானான சிலையென்றுந் தாரை யென்றுந்
தற்பரமாம் சத்திசிவ பரைதானென்றுங்
கோனான யானையென்றுங் குருதி யென்றுங்
கூறுவார் நாமாக்கள் பேதாபேதம்!
வீணாக இதனாலே மாந்தரெல்லாம்
வெவ்வேறாய்ச் செய்தழிந்து விருதாவானார்!
மானான காரமென்றால் மண்தானப்பா
மண்ணில் மிக மகத்தான மண்தான்பாரே. 7

பாரே நீ தைமாசி மீனமூன் றிற்
பலிக்குமே சந்திரனார் விந்தினாலே
சீரேகேள் மண்தனிலே ஜலமே பாய்ந்து
சிக்கியதில் ரேசித்து ஜெனிக்குங் காரம்
வாரே தான் ரவிபடவும் பூக்கும்பாரு
வானவர்கள் மெச்சுகின்ற வழலை மைந்தா
மீராமல் மறியலிட்டு மூன்றாநாளும்
விடிந்ததொரு நாலாநாள் ரவிக்குமுன்னே! 8

ரவிபடா ததற்கு முன்னதனை வாங்கி
நாதாந்த மூர்த்தி யரைப் பணிந்தெடுத்து
தவியாதே இதற்குநிக ரொன்றுமில்லை
சந்திரனைத் தரித்தசிவ மைந்தனாகும்
புவிமீதிற் சொல்லிவிட்டேன் பூரந்தன்னைப்
புத்தியினாற் செய்பாகம் அறிந்து கொண்டு
அவியாத சாரத்தின் அருமை தன்னை
அறைகுறேன் ஏலசிங்க மறிந்துகொள்ளே! 9

கொள்ளவே ஆதியிலே உதித்த நாதங்
குணமான சுத்தஜல மிதற்குப்பேரு
வள்ளவே வழலை யென்றும் பசளையென்றும்
வாகான வஸ்துவென்றும் தேன்பா லென்றும்
விள்ளுவார் வெண்சாரை பனங்கள்ளென்றும்
விபரமுள்ள பூநீர் சஞ்சீவி யென்றுங்
கள்ளான பாறையென்றும் விந்துவென்றுங்
கானகத்துச் சாரையென்றும் பாடினாரே. 10

பாடினார் வெண்சாரை கருநெல்லி யென்றும்
பதிவான (வா) காசாம்வேரென் றுஞ்சொல்வார்
தேடினால் வெளிகளிலும் கிடையாதப்பா
தெள்ளமிர்த முள்ளிருக்க முண்டுதேரு

கூடிப்பார் அண்டபிண்டம் நிறைந்து நிற்குங்
குணமான பனைமரமென் றதற்குப்பேரு
நாடிப்பா ரனந்த மர மெங்கும் நிற்கும்
நலமாகப் பாளை கொய்து நாட்டம்பாரே 11

பாரேநீ பொதிகைமலைச் சார்பிலப்பா
பாங்காக நான்குபே ரதற்கு முண்டு
தேறேநீ மலையினுச்சிக் காடுமுண்டு
தெளிந்து நின்ற கிழ்வரையும் ரோமக்காடு
கூரேநீ ஐந்தெழுத்தைத் தழுவி நிற்கும்
குணமான அகாரமென்று மதற்குப்பேரு
வாரேநீ பீஜமென்று மதற்குப் பேரு
வகையான அகார மைந் தெழுத்துமாமே! 12

ஆமப்பா காரமுடன் சாரஞ் சொன்னேன்
அதற்குயிரும் நிலைமூன்று மறியச் சொன்னேன்
காமப்பா அதுகளுட பேருஞ் சொன்னேன்
கருத்தரியநின்ற நிலை சூட்சஞ்சொன்னேன்
நாமப்பா மறைப்பெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
நான்கண்ட பாகமிது வேறுமில்லை
காமப்பால் தலைஒழித் தோர்க் கெய்துமின்னூல்
கண்டு கொள்ளுப்பெடுக்கக் கருச் சொல்வேனே! 13

கருச் சொல்வேன் காரமது ஒன்றே யாகும்
கனிவான சாரமது நாலதாகும்
உருதியாஞ் சாரத்தி லதைக் கரைத்து
உறவாக்கி அதைநீயும் பதனம் பண்ணு
அருதியாய் மூன்றாநாள் தெளிவிறுத்து
அடைவான கடைசரக்கு வீரம்பூரம்
நிருதி நீ பொடித்ததிலே தூளைக்கொட்டி
நேராக முன்போலத் தெளியவைத்தே! 14

வைத்துமே மூன்றாநாள் தெளிவைவாங்கி
 வாகாக அடுப்பேத்தித் தீயைமூட்ட
நைத்துமே ஜலமெல்லாஞ் சுண்டிப்பின்பு
 நாயகமே பீங்கானில் வார்த்துப்போடு
பைத்துமே ரவியில்வைக்க உப்பதாகும்
 பாங்காக அதையெடுத்துப் பதனம்பண்ணு
சைத்துமே தாய் தந்தா ளென்றுசொல்லிச்
 சரியாகக் குப்பிதனி(ல்) லடைத்திடாயே. 15

அடைத்த பின்பு சிறு கண்ணாம் நாகம் வாங்கி
 அதையிலுப்பை எண்ணெய்யிலே சுத்தி செய்து
திடப்படவே நாகமதை உருக்கிசாய்க்க
 திகட்டாம லுருக்குமுகங் கிராஷஞ்செய்ய
வடுப்படவே உப்பெடுத்துக் கொடுத்துப்பாரு
 வாதியே நாகச் செம்பாகு மப்பா
முடிப்பட்ட தைதைக்குருவாய் வைத்துக் கொண்டு
 மூவுலகிற் சித்து விளை யாடுவாயே! 16

ஆடப்பா செம்பதைத்தான் பத்துக்கொன்று
 அடைவாகநீ கொடுத்தால் வீரஞ்சப்பா
மூடரப்பா முறையறிந்து செய்யமாட்டார்
 முட்டாளுக் குரையாதே முழுகிப் போவாய்
தேடய்யா தேட்டான தேட்டி தாகும்
 தெரியவே சொல்லிவிட்டே னுணுக்கமாக
காடப்பா திரிந்தே நீ அலையவேண்டா
 கண்டுகொள்வாய் பதினாறுங் கணக்கு முற்றே! 17

திருவள்ளுவர் வாத சூத்திரம் பதினாறு என்ற இதை Dr. R.Govindarajan என்ற நான் என்னிடமுள்ள சுவடி எண். 10073 ல் இருந்து பிழையற எடுத்து எழுதப்பட்டுள்ளது.

உ

சிவமயம்

திருவள்ளுவர்

முப்பு – 30

சீர்சிறந்த குணமகமே ரதனிலுள்ள
செழுங்கமல விநாயகரை பணிந்துபோற்றி
கார்புகழும் பிரமருத்திரன் மாலின் பாதம்
கருத்திலே எந்நாளும்(ங்) கருதிப் போற்றி
பூரணியா மென்தாயார் வாலை சத்தி
பொன்னடியைச் சிரசுதனிற் பொருந்திப் போற்றி
வாரணத்தி லேறுமென்ற னாசான்தன்னை
வாழ்த்தியே வாதமுப்பு சொல்லு வேனே. 1

சொல்லக்கேளிந்த நூலார்க்குங் கிட்டா
சுகயோகியா மாகிற் சிக்குமிந்நூல்
கல்லிலே தேங்காயை யுடைத்தாப்போலக்
கருதுகிறேன் முப்பதுக்குள் கருவைப்பார்த்து
நல்லவினை வுள்ள மாணாக்கா சிங்கா
நாட்டா ரோடிணங்காதே குலத்துக்கீனம்
பொல்லாங்கு செய்குணத்தைத் தவிர்த்துப்போடு
பொய்களவு பிறர்தாரம் பெண்ணுந்தள்ளே. 2

தள்ளடா நூல்பார்த்தோ ரநேகருண்டு
தவறாமற் பேசுவார் நூல்கள் கற்று
கள்ளர்களைக் கண்டாக்காற் கவிழ்ந்துகொண்டு
கண்ணெடுத்துப் பாராதே கருச்சொல்லாதே
வள்ளடி மறவாதே மௌனயோகம்
வளர்பதியி லைம்பதையும் பார்த்துக்கொண்டு
துள்ளாதே முப்பதுவுங் கிடைத்ததென்று
துணிவாக பேசாதே துயரெய் தாதே. 3

எய்தினாற் கடைத்தேற மாட்டாயப்பா
இகபரமா மிரண்டினுக்குந் துரோகியாவாய்
துய்யகுணந் தனைத்தூண்டி ஓடிடாதே
சொன்னபடி நீயிருந்து தொழிலைப்பாரு
அய்யனருள் வந்தெய்தும் ஞானமாகும்
அறுபத்து நாலுசித்துந் தானேயாடும்
பொய்யில்லை யாண்டையின்னூல் புராரியானை
பூதலத்திற் சொன்னதிது ஆவதற்கே! 4

ஆவதற்கு ஆயிரத்தைந் நூறிற்சொன்னேன்
அருமையுள்ள பூநீரை யெடுத்துக்கொண்டு
தாவுதற்கு காரமொன்று சாரம்நாலு
தனதாகத் தானறிந்து பாண்டத்திட்டு
மேவியே மூன்றுநாளான பின்பு
விபரமாய்த் தெளிவிறுத்துத் தெளிவிற்கேளு
தாவியே கெந்தகமும் ரசமோடொக்கத்
தானரைத்துத் தெளிவுதனிற் கொட்டிப்போடே. 5

போட்டாலு மின்னுமுள்ள சரக்கைக்கேளு
புகழான துருசதுவும் வீரம்பூரம்
தேட்டான பாஷாண தாளகமோடொக்கச்
சேர்த்துமே பொடித்தந்தத் தெளிவிற்கொட்டி
வாட்டமாய் வாரமது வைத்துமூடி
வகையாக அதையிறுத்து வன்னிமூட்டி
காட்டாக ஜலமெல்லாந் தொக்குமாகிற்
கனகமென்ற பீங்கானி லூற்றிப்போடே. 6

போடேநீ ரவியில் வைக்க வுப்பதாகும்
பொங்கமதா யுப்பெடுத்துப் பதனம்பண்ணு
காடான மூடருடனுரை சொல்லாதே
காட்டாதே யிப்பொருளைக் கருவாயெண்ணு

தேடாத தேட்டிதுதான் வெளியிற்சொன்னேன்
சிவன்மீதி லாணையப்பா செய்துபாரு
மாட்டேனென் றோடுமறு பத்து நாலும்
வன்னியுண்ணச் ஜெயமாகும் வகைதான் பாரே. 7

பாரேநீ யிவ்வுப்பை யார்தான் செய்வார்
பாருலகிற் கொடுத்துவைத்தோர் செய்வாரப்பா
கூரான குருமொழியைக் கூறிடாதே
கோஷபீஷக் குறியைக் குணமாயாய்ந்து
சீராக நூலதனைப் பூஜைசெய்து
சிவயநம வக்ஷரத்தின் தண்ணீர் கண்டு
பேரான உப்பைவிட்டுச் சாரஞ்சொல்வேன்
பேசாதே வாதவுப்பு வயணங் கேளே. 8

கேளேநீ சாரம் நவச் சாரமல்ல
கெடியான வெண்காரம் வெடியுப்பல்ல
தாளே நீ கேசாதி பாதமட்டும்
தனியாக வளர்ந்ததடா தண்ணீருக்குள்
நாளேநீ யுன்சடத்தி லூண்தானுண்டு
நலமாகக் கொடுப்பார்கள் கேள்விவேண்டுஞ்
சாளான சிதம்பரத்தில் வளர்ந்தசாரஞ்
சடலமதி(ல்) இந்துப்பென் றிதற்குப்பேரே! 9

பேரதனை மாற்றியல்லோ யிந்துப்பென்பார்
பேசாதே யவரோடு வாதுவேண்டாம்
பாராதே அவர்கள்முகம் பகையா யெண்ணு
பாடுபடாச் சண்டியென்று புறத்திற்றள்ளு
சீராய்க்கேள் சாரத்தை யறியவேண்டிற்
ஜெபம்வேணும் தவம்வேணும்சிந்தைவேணும்
பேரான பரம் பொருளைக் காணவேணும்
பேரின்ப வாழ்க்கையிலே நின்றாற்றானே! 10

நின்றாக்கால் தன்னைத்தா னறிவாயப்பா
நிர்வாணி வாலைப்பெண் ணிருத்தஞ் செய்வாள்
குன்றான சாரந்தான் மண்ணிலுண்டாங்
குணமில்லா மாந்தர்களே கூறக்கேளுஞ்

சென்றான உண்சரண்தான் கள்ளைக்கண்டு
ஜெகத்திலே வதைக்குடித்தால் வெறிமீளாது
குன்றான குவலயத்தி லானந்தக் கள்
குடித்தவனே மகத்தான சித்தனாமே! 11

ஆமென்று சொல்லுகிறே னதுவேதென்றால்
அன்பான உன்னுடைய உடலுக்குள்ளே
வாமென்ற வாசமதாய்ப் பழுத்திருக்க
வளர்ந்ததடா ஒழியாத அருவியாகித்
தாமென்ற உன்னுடைய தாளின்கீழே
தாரைகொண்டு ஏகுதுபா ரமுரிதானும்
வாமென்ற தைப்பிடித்து மரக்காலிட்டு
மறவாம லளந்துவிட்டு வகையைக் கேளே! 12

கேளப்பா கடைச்சாரம் பலந்தானைந்து
கெடியான வெண்காரம் பலந்தானைந்து
வேளப்பா லிங்கமொரு பலந்தான்ரெண்டு
விதமாக இடித்துச் சாரத்தில்கொட்டி
மீளப்பா வாரமது வைத்துமூடி
விளம்புகிறே னைந்தாநாள் தெளிவிறுத்து
வாளப்பா வன்னியிட்டுக் குமுறக்காய்ச்சி
வண்மையுடன் ரவிதனிலே யுலர்த்திடாயே! 13

உலர்த்தியே குப்பிதனில் வைத்துக்கொண்டு
உத்தமிக்குப் பூஜை செய்து பாதம்போற்றி
மணர்ந்ததுவே கற்பூரவாசம் வாசம்
மனதடங்கிக் கொண்டாக்கால் வயதோ நூறு
கனதனமாங் காரமுடன் சாரஞ்சொன்னேன்
கனிவான அண்டத்தைச் சொல்லக்கேளு
மனந்தளர மண்ணுக்குள் வளர்ந்தஅண்டம்
வன்னியுண்டு ஜலமுண்டு வார்த்தை மூன்றே! 14

மூன்றாகி ஒன்றாகி நின்ற அண்டம்
முப்பழமாய்ச் சர்க்கரையா யமர்ந்த அண்டங்
குன்றாத கோபுரமாய் வளர்ந்த அண்டம்
குவலயத்தில் மூன்றுதிக்கு முதிக்கு மண்டஞ்
சென்றான சென்டாகி உதித்தஅண்டஞ்
செகஞ்சுமந்த ஆனைக்கல் லென்ற அண்டம்
ஒன்றாகி எப்போதுமழியா அண்டம்
ஒகோகோ சித்தருண்ணும் அண்டந்தானே! 15

தாமேதான் தானாகி முளைத்தஅண்டஞ்
சண்டமா ருதமென்னுஞ் சயில அண்டம்
வாமேதான் வான்கொழுந்தா யுதித்தஅண்டம்
வாசாம கேசரமாய் நின்றஅண்டம்(ஞ்)
சாமர்த்திய மல்லவப்பா இந்தவண்டம்
சமரசமாய்ப் பாடிவைத்தே(ன்) அண்டந்தோண
நேமத்தில் சொன்னபடி பந்தஞ்செய்து
நீதோண்டி எடுமொழியை மறந்திடாதே! 16

மறவாமற் கொண்டுவந்து உறலிலிட்டு
மாவதுபோ லிடித்ததனை எடுத்துக் கொண்டு
திறவாமற் காரவுப்பை யதன்மேற்கொட்டித்
திடமாய்மேற் சட்டியிட்டு சீலைசெய்து
இரவியில்வை மூன்றுநாள் காய்ந்தபின்பு
இயல்பெறவே தூபமிட்டுத் தீபங்காட்டித்
தெரியாமற் புதைத்துவைத்து மண்டலந்தான்
தேறிய பின் பதையெடுத்துக் கல்வத்திட்டே 17

இட்டுமே யறைக்கவொரு ஜெயநீர்கேளு
இறையாதே இப்பொருளை உன்னுள்வைத்து
திட்டமாய்ப் பண்ணைச் செவ்வீரம்வாங்கித்
திடஞ்சமனாய் மனோசிலையும் நாபிவிந்து

அட்டமாய்ப் பொடித்ததனைப் பலமாய்மைந்தா
அமுரிபடி அரைவீசம் விட்டுநல்ல
கெட்டியாய்ப் பிசைந்து பீங்கானில்வைத்துக்
கெடியாகப் பனிதனிலே வைத்துப்போடே. 18

வைத்துமே வாரஞ்சென்றதை யெடுக்க
வகையான ஜெயநீராம் பதனஞ்செய்து
சத்துவாய்க் கல்வத்தில் வைத்த முப்பைச்
சதிராயிச் ஜெயநீரை விட்டுஆட்டிப்
பத்தியாய் வாரம்வரை அரைத்தெடுத்துப்
பரிவாக வில்லைசெய்து ரவியிற் காய்ந்தாற்
சித்தியா மைம்பதெருப் புடத்திற்போடு
சீதனமா யாறியபின் னெடுத்திடாயே. 19

எடுத்துமே குப்பிதனிற் பதனம்பண்ணு
ஏகாந்த அக்ஷரத்தை லக்ஷமோது
விடுத்துமே செம்பதுதான் பத்துக்கொன்று
வீசிப்பார் பத்தரையுந் தப்பாதப்பா
கடுத்துமே நீக்கிவிடு கல்லென்றேதான்
கருத்தி லெண்ணு ஞானகற்பயோகந்தன்னை
நடுத்துமே அண்டரண்ட மயம்பொன்னாகும்
நாடுமலை கல்மரங்கள் நிலம்பொன்னாமே 20

பொன்னாகுங் கோடி வரை யழியாமுப்புப்
பொருளறிந்து பாடுபட்டேன் அவனே சித்தன்
என்னாளு மறிவுதனில் வளர்ந்துநிற்கும்
என்பிரான் றான்முடித்த ஏகமுப்புச்
சொன்னேன்யான் சிவயோகி தனக்குக்கிட்டுஞ்
சோரமில்லா நெஞ்சினர்க்குச் சித்தியாகும்
என்னையா இந்தமுறை யார்க்குக்கிட்டும்
எம்பிரா னிடமறிந்தோர்க் கெய்துந்தானே! 21

தானென்றுஞ் சுத்தபத்தினியோ டொக்கத்
தான்மருவி மற்றவரை தாயென்றெண்ணு
வானென்ற மாந்தருக்கும் மகாயோகிக்கும்
மவுனமொடு இன்னூலைப் பார்ப்போருக்குங்
கோனென்ற தானதர்மங் குறைவில்லார்க்குந்
குற்றமது நினையாத குணத்தினோர்க்குந்
தேனென்ற குணத்தோர்க்கு மெய்துமின்னூல்
திருடர்களுக் கெந்நாளுஞ் சிக்காதென்றே. 22

என்றேதான் செலவதிகஞ் செய்யவேண்டாம்
இயல்மூன்று பணத்திற்கு அதிகமாகா
அன்றாடஞ் ஜெபதபங்கள் பத்தியோடும்
ஆத்மாவைக் கண்டறிய மட்டு நீயும்
அன்றாடஞ் செய்தொழிற்கு மேலாகாது
அன்பர்களை யென்னாளும் மறக்கொணாது
நன்றாகப் பிழைக்கவென்று முப்பதுக்குள்
நலஞ்சொன்னேன் சாபமில்லை அடைவாய் வாங்கே.
23

வாங்குவா யாயிரத்தைந் நூறுபாரு
வகையா மெண்ணூறுடனே ஐந்நூறுபாரு
பாங்குபெற முந்நூறுந் நூறுமைம்பதுவும்
பதிவான முப்பதுவும் பதினாறுந்தான்
ஏங்காமற் பதினொன்றும்(ங்) குறைவில்லாமல்
இவ்வுலகிற் றான்கிடைத்தா லவனேசித்தன்
பாங்கமாய்த் திரியாதே பழுதுமாகும்
பாடுபட்டாற் பலனுண்டு பாரின்மீதே! 24

பாரின்மே லூனமில்லார் பிறந்தபோது
பத்திமுத்தி வைராக்கியம் பண்ணவேணும்
கூறியே குருவருளைத் தேடவேண்டும்
குருவறிந்து முன்கற்பங் கொள்ளவேணும்

தேறியே யோகத்தில் நின்றுக்கொண்டு
தெளிவான நாதாந்த சாரம்நூறும்
வீரியமாய் வாதமிரு நூறும்பார்த்து
வீதிசுத்தி வந்தவனென் பிள்ளையாமே! 25

ஆமேதா னிரண்டடியாய்ச் சொன்னவேதம்
அதுபோதும் உலகோர்க்கும் அறிவோனுக்குங்
காமேதான் காமனையும் ஒழித்துப்போட்டாற்
கைக்குநெல்லிக் கனியெனவே கடவுள் நிற்பார்
சோமனென்ற நீரறிந்தோன் சுத்தவாதி
சுத்தசல மறியாதான் சுணங்கனாகும்
காமப்பால் கானற்பால் தனையருந்திக்
கானகத்தின் றொழில்பாரு கடியசித்தே! 26

சித்தியாம் முத்திபெற வைக்கும் நீரு
சீர்சிறந்த தாய்பதத்தில் வைக்கும்நீரு
வெத்தியாம் விளக்கொளியாய் நின்றநீரு
வேதாந்த வேதவொளி கண்டநீரு
சத்தியாய்ச் சிவமாகித் தழைக்கும்நீரு
தாரணி யெங்கும் நிறைந்து சமைந்த நீரு
புத்தியாய்ப் பூமலராய்ப் பூத்த நீரு
புகழ்மாயை தனையொழிக்கும் பிரமநீரே! 27

நீரிலே நீரறிந்தால் நிலைக்கும்வாதம்
நிலையான சிதம்பரமுங் காணலாகும்
காரிலே கார்பூத்துக் கருத்துத்தோன்றுங்
காரமென்ற பொருள்தானுங் காட்டும்பாரு
சீரியதோர் நாகத்தை யாட்டலாகுந்
திருடரென்ற நவலோகஞ் சுண்ணமாகும்
வீரியத்தைத் தான்தொலைத்துப் பேடியாக்கும்
விளையாடுங் குழந்தைகுணம் வருகுந்தானே! 28

தானான இவைகளுக்கு ஆதியான
தாய்தந்தை இரண்டெழுத்தை காணவேணும்
வீணாகத் திரியாதே வெளியுள்பாரு
வெண்மதியாம் வாசியென்ற சவாரிசெய்வாய்
ஏனோதான் வாழ்நாளை வீணாய்ச்செய்தாய்
என்மகனே அதையறிய நாளோயில்லை
வானாட்டி லுள்ளோர்கள் செய்தபாதை
வழிதெரிந்து நீசெய்து சித்திகாணே! 29

காணப்பா முப்பத்துக்குட் கருவையெல்லாங்
காட்டினேன் பரிபாஷை கபடில்லாமல்
ஏனென்று பேசாதே மனைவியோடே
இருந்தவனே என்னுடைய பிறவியாகுந்
தோணவே இவ்வுலகில் யார்க்குக்கிட்டும்
தூயமுறச் சொற்கடவா மாதுதேவி
வாணப்பா தவமுடித்தோன் றனக்குக்கிட்டும்
வழிதுறைகள் சுளுவாகமுடிப்பாய்தானே. 30

தானேதானிந்த வொருநூலைத் தானுந்
தனியாக வைத்துநல்ல பூஜைசெய்து
மானேதான் சிவயநம ஓம்கிலியென்று
மனதிலே நீநினைக்க நாலும்பேசுங்
காலேதா னோடாதே காமத்தீயாற்
கலங்காதே மயங்காதே காடேறாதே
வானேதான் பொருளிதென்று அறிந்துகொள்ளு
வஞ்சனையில்ல மொழி முப்பதுவுமுற்றே 31

ஓம்-தத்-ஸத்!

இது எனது (Dr.R. கோவிந்தராஜன் என்ற என்னுடைய) சுவடி எண் 13049ல் இருந்து பிழையற எடுத்து எழுதப்பட்டுள்ளது!

உ

சிவமயம்

திருவள்ளுவர்

குருநூல் – 51

ஆடியதோர் நடனதிரு மூலத்தாலே
  ஆட்டான சிதம்பரத்தின் ஆட்டமெல்லாங்
கூடியதோர் பெரியோர்கள் பதினெண்பேரைக்
  குலாவியே தெண்டனிட்டுப் பாதம்போற்றி
நீடியதோர் நந்திதனைப் பணிந்து கார்த்து
  நினைத்தபடி பாடுகிறேன் முத்திதானுந்
தேடியதோர் தேட்டெல்லாம் இதற்குள்ளாகுந்
  திரமா யைம்பத் தோரட் சரமுங்காப்பே! 1

காப்பான ஐம்பத்தோ ரட்சரத்தைக்
  கருவான சுக்கிலத்தி லமைந்தசூட்சஞ்
சேப்பான ஆயிரத்தைந் நூறுக்குள்ளே
  திறந்திட்டேன் திறந்திட்டேன் அறிவுள்ளோர்க்குக்
கோப்பான குருமொழி கொண்டுறுதியாகக்
  கூறுவேன் நூல்வழியிற் குறைவில்லாமல்
மாப்பான மறைப்பெல்லா மிதிலேவிள்ளும்
  மார்க்க மப்பா நாட்டகத்தில் மாட்டினேனே! 2

மாட்டினேன் கற்பமுந்நூறுக்குச் சூத்திரம்
மகத்தான குருநூலை விளக்கமாக
ஊட்டினேன் உட்கைதனை உரைக்கக்கேளு
உள்ளபடி கருமறைப்ப தொன்.றுமில்லை
நீட்டினேன் பெரியோர்க்கு நிலைமைகாணும்
நீனிலத்தோர் காணார்க ளறிந்துபாரு
பூட்டினேன் கற்பவிதி வசியம்வாதம்
போக்கான போக்கெல்லாஞ் சுருக்கினேனே! 3

சுருக்கான மனைவிமுதற் ஜாதிகிட்டா
சொரூபமுள்ள ரெண்டான சாதியில்லை
குருக்கான மூன்றான சாதியுண்டு
குணமாக அனலிமன தறிந்துபார்த்துப்
பெருக்கெடுத்துச் சிவயோக வாழ்க்கையெய்தி
பேருலகி லெந்நாளும் பிரியாதின்ப
திருக்கெடுத்து வாழஅனலி தன்னைச்சேர்த்துத்
தீர்க்கமுடன் பூஜைசெய்ய முறையைக்கேளே! 4

கேளப்பா முன்வாலை பூஜைசெய்யக்
கெடியான பதினாறு வயதுவேணும்
மீளப்பா நாற்பதுக்குள் தீட்சைமார்க்கம்
வியந்தெடுத்துச் சனிகையுடன் கூடிப்போகும்
ஆளப்பா அருடனுக்கு அறுபதாகில்
அதன்மேலே வாயாது பலமோமில்லை
கேளப்பா யிருபேருங்கூடி நித்தங்
கெடியாக வாழ்ந்துண்ண முறையைப்பாரே 5

முறையான சனிகைதனை சேர்த்துக்கொண்டு
மூர்க்கமுள்ள அமுரிபுளி தினமுமாட்டு
உறையான முப்பதுநாள் முன்னேசெய்து
உடன்சார காரமெல்லா மெடுத்துக்கூட்டித்

துறையான முப்பதுநாள் வந்ததானால்
தூர வைத்துப் பீங்கானிற் றெளிவைவாங்கு
புறையான மூன்றாநாள் வருகுந்தேனைப்
புத்தியுடன் பிசகாமல் வாங்குவாங்கே! 6

வாங்குவது இப்படியே மாதந்தோறும்
வரிசையாய் ஆங்கிரிவு மதிலேவிட்டுத்
தாங்குவது ஓட்டிலிட்டுக் காயவைத்துத்
தவறாமற் பார்க்கையிற் கஸ்தூரிவீசும்
ஏங்குவது மணிமணியா யிரங்கும்பாரு
ஓகோகோ தாரையப்பா மணிபோற்காணும்
நீங்குமே யதையருந்தப் பிணிகளோடும்
நிமிஷத்தில் நமனோடும் நிசந்தான்காணே! 7

காணுதற்கு செந்தூர மெழுகுவீதங்
கச்காம லந்திசந்தி யிருபோதுண்ணப்
பூணுவதும் புளியுண்ணு அமுரியுண்ணு
போக்கோடே அந்தியிலே அமுரிகொண்டு
ஊணுவதுஞ் சந்தியிலே அமுரிபோதம்
உற்பனமாம் பாகமதை அறிந்துகாணும்
தாணுவதுங் குருபாதம் போதமாகுங்
சனிகையைநீ மறந்திட்டு வேறேதேடே! 8

வேறேநீ தேடாட்டா லுயிர்தான் போகும்
வெகுசுறுக்குக் காரனப்பா நாளைத் தானும்
ஊரேநீ யிருந்துகொண்டு உறங்கும்போது
உடலிலுள்ள ரோகமெல்லாம் மேலேகாணுந்
தேறயிலே திங்களொன்று காலமேதான்
திறமாக பேதிக்குங் கண்டுபாரு
கூறயிலே மேலல்லாந் தடிப்புக்காணும்
குறையுள்ள ஊரலது தோணும்பாரே! 9

பாரப்பா திங்களது ரெண்டேயானாற்
பாரிப்பாய் பேதிக்குங் காலமேதான்
சீரப்பா அந்தியிலே இறுகிவீழுஞ்
சிறப்பில்லா மண்டையிடி கால்கைகுத்துங்
கூறப்பா வாந்தியே மெத்தகாணுங்
கொடுமையடா பேதமிக்க மனந்தாளாது
தேறப்பா வாந்தியுமே மெத்தவாகும்
திறமான இடிமேலே யிடியுமாமே! 10

இடியோடே போஜனமோ மெத்தக்கொள்ளும்
இடுப்புவலி மண்டையிடி கால்கைகுத்தும்
வெடியோடே வயிறூதும் பொருமல்காணும்
வெடித்துவிடும் நாக்குதடு விரிந்துபோகும்
புடியோடே காலெரியுங் கடைவாய்வேகும்
புதுமையுள்ள கண்டமது பச்சைப்புண்ணாங்
குடியோடே திசைநாதங் கேட்கும்பாரு
கூர்ந்துண்ட மருந்தா லித்தனையுமாச்சே! 11

ஆச்சப்பா தீட்சையது நாலேயானால்
அண்டபகிரண்ட மெல்லாம் பற்றிவேகும்
போச்சப்பா உடலிலுள்ள காரமெல்லாம்
பொன்போலத் தீர்க்கமுமாம் கெட்டியாச்சு
வீச்சப்பா யெலும்பிலுள்ள சத்துப்போகும்
வீரியமாய்த் திரிவதுபோல் விபரங்காணும்
மூச்சப்பா திங்களது அஞ்சுஆனால்
முழக்கமடா பேதியுடன் வாந்திகாணே! 12

காணுமே அஞ்சுதனைச் ஜெபித்தாயானாற்
கனகமடா உன்தேகங் கல்லுகல்லு
பூணுமே அஞ்சுமட்டுந் தீனியப்பா
போட்டாலும் ஆற்றாது பூஜைகொள்ளும்

தோணுமே ஆறான திங்களப்பா
    தொடுகுறிபோற் கற்பமுண்ணு தீனி தள்ளு(ம்)
ஊணுமே பேதியது மெத்தப்பெற்று
    உள்ளிசுவா யடிவயறு நோவதாமே! 13

நோவாகும் ஏழுதிங்கள் நேரத்துக்கோர்
    நுவல்பேதி யதிகமாய்ப் போகும் பாரு
தாவாமற் றாவுமடா இளைப்புண்டாகும்
    தண்ணீருச் சோர்வேண்டாம் வெந்நீராகும்
ஆவாமற் போவதில்லை யொருநாளுந்தான்
    அப்பனே கற்பமுண்ணக் காணும்பாரு
போவாம லெட்டான தீட்சையப்பா
    போனதொரு ஜீவன்வந்த தசதியாமே! 14

அசதியுற்ற உறக்கமடா பேதிமெத்த
    ஆச்சரிய மிடுப்புவலி சந்துநோகும்
அசதியுடன் மேல்மூச்சுக் கபங்கள்வீழும்
    அனுதினமும் நொந்துவிடும் பச்சைப்புண்ணாம்
அசதியுடன் குய்யமுதற் கபாலமட்டும்
    அநேகவித குய்யமுதற் கபால மட்டும்
அசதியுடன் குய்யமுதற் கபால மட்டும்
    ஆச்சரியம் வெந்துநொந்து புண்ணதாமே! 15

புண்ணான சுக்கிலமோ இளந்தேங்காய் போற்
    புதுமையுள்ள ரசினையது போலவாகுங்
கண்ணான அமுரிபுளி வேகமெத்தக்
    கண்டிடுமே அந்நேரம் வாதப் போக்கு
ஒண்ணான பொருளப்பா மூன்றொன்றாச்சு
    உத்தமனே காரமது கொஞ்சங்காணும்
விண்ணான உலகத்தின் விசாரமெல்லாம்
    மிரண்டோடுங் காரமென்ற சுண்ணத்தாலே! 16

சுண்ணமுடன் பத்தான திங்கள்தன்னில்
சுருக்கெனவே கழிச்சலது தோணும்பாரு
அன்னமுடன் சாரத்தாற் றாரமாகி
அடியற்றுப் போச்சுதையா வேகத்தாலே
தன்மையுடன் திராவத்தாற் கழிந்த தய்யா
தளன்றதொரு சடலமது இறுகிப்போச்சு
கன்னமிட்ட சந்துவழி கீழேநோக்கிக்
கழன்றுவிடும் பத்துதிங்கள் கண்டுபாரே! 17

கண்டுண்ட படியதனா லெபியைத்தட்டிக்
காரணமாந் திரேகமது சூட்சமாகி
உண்டுண்ட மறுபிறவியாய்த் தானுமாகி
உருவோடே நான்பிறந்து ஒளியதானேன்
விண்டுண்ட படியெனக்கு சொன்னாரீசன்
வேணபடி விபரமெல்லாங் கண்டுகொண்டேன்
திண்டுண்ட படியதனாற் சாகாக்கல்வி
திரட்டினேன் உருட்டினேன் தினமுண்டேனே! 18

உண்டபடி ஏதாலே ஆச்சுதென்றால்
உற்பனமாம் நாதவிந்து உண்டசத்து
கண்டபடி புளியமுரி யதிலே சேர்க்கக்
கனகசபை திருநடன மூலத்துள்ளே
விண்டபடி அருச்சனையில் விந்துகட்ட
விபரமுடன் மேலான முத்திமுத்தி
நின்றபடி கருவூரில் வளர்ந்தவாழ்க்கை
நிகழ்த்தினேன் றிருநீற்றின் மகிமை தானே! 19

மகிமையென்று திருநீறு உன்னீரப்பா
மகத்தான பூரணத்தைக் காணமாட்டாய்
தகைமையென்ற அந்நீரை உள்ளேகொண்டு
தவறாம(ல்) அனுதினமும் பூஜித்துவந்தால்

மகிமைபெற்ற அதனுடைய சாரம்பப்பா
மகத்தான பராபரத்தின் மகிமையாகும்
நகைமையென்ற அந்நீரை மேலேபூச
நாடாது ஏவலோடு நோவும்போமே! 20

நோவோடு பில்லிவைப்புச் சூனியந்தான்
நோவான முறைப்பாடு திட்டிசூலை
பாவோடு கிரந்திவெட்டை மேகமெல்லாம்
பறக்குமடா இன்னும்வெகு ரோகந்தானும்
தாவோடு பதினொன்றாந் தீட்சைமேலே
தான்வாங்குங் காரணத்தை யெடுத்துணர்த்தல்
சாவோடுங் கூறுகிறேன் கேளுகேளு
தாக்கான சூரணத்தை மாட்டுவாயே. 21

மாட்டுவதுங் காலமே வராகன்ரெண்டு
மாட்டியே பூரணத்தை யுடனேகொள்ளு
பூட்டுவது அந்தியிலே கடுக்காய்வீதம்
புரட்டியந்தப் புளியுடனே அமுரிகொள்ளு
நாட்டுவது இப்படியே ஆண்டுஎட்டு
நாட்டிடவே நமனோடும் நோவுந்தீரும்
ஆட்டுவது வயதுபதினாறு மாகும்
அளவற்ற வித்தையெல்லா மாடும்பாரே. 22

ஆடுவது யிப்படியே சனிகைமீறி
அறிந்துமே தெண்டனிட்டு மனத்தைப் பார்த்துக்
கூடுவது இருவரையுஞ் சேர்த்துவைத்துக்
குறித்திடுநீ சித்தருட சூரணத்தை
நாடுவது மாட்டயினி விபரங்கேளு
நலமாகப் பூஜைசெய்ய முறையையூட்டு
தேடுவது புவிதனிலே யிருந்துகொண்டு
தேகத்தைச் சித்திசெய்து மேலேஏறே. 23

ஏறயிலே என்னூலைப் பார்த்துத்தேறு
எளிதல்ல இந்தநூல் தெளிவுமெத்த
ஆறயிலே அடிக்கடியே பார்த்துப்பேசு
அரைச்சணத்திற் சித்தியடா அறிந்துபாரு
கூறயிலே குருவினுட திறத்தைக்கண்டு
கொண்டிடுவாய் தினந்தோறும் ஆதிவிந்து
தேறயிலே அனுபோகங் கண்டுபாரு
திறப்படுமே சிவஞானந் திறமதாமே! 24

திறமான அஞ்செழுத்தா லவிதமாச்சு
திரியந்தச் சிகாரத்தால் வசியமாச்சு
உறமான வகாரத்தால் வாசியோகம்
உற்பனமாம் யகாரந்தா லதீதமாகும்
பரமான நகாரத்தாற் குளிகைகட்டிப்
பார்க்கக்கேசரி போகும் பண்பேசெய்து
வரமான மகார மோகனமுமாகி
வளர்ந்துகந்த சித்தரெல்லா மார்க்கங்காணே. 25

காணாமல் மாண்டார்கள் உலகத்தோர்கள்
கைபாகந் தெரியாமற் கெட்டார்கோடி
ஊணாமற் போனதினால் அனேகம்பேர்கள்
ஊர்சுற்றுங் குருக்களை இங்கருகழைத்து
தோணாமல் உபதேசங் கேட்டசீஷர்
தொல்லுலகி லிறந்தவர்கள் அநேகங்கோடி
பூணாமற் பூணுகின்ற பஞ்சதீட்சை
புகட்டினாற் சாவேது பிறப்பைமாற்றே. 26

மாற்றுவதும் பிறக்கின்ற ரெண்டெழுத்தாம்
மகத்தான சித்தரெல்லா மானவாறும்
ஆற்றுவது மூன்றோடே ரெண்டுஞ்சேர்த்து
அப்பனே அர்ச்சிக்க வாதஞ்சித்தி

தோற்றுவதும் பிராணாயம் பண்ணத்தோணுந்
தோஷமெல்லாந் திசைநோக்கி உருவை என்றும்
போற்றுவது மைங்காயக் கருவைப்போலப்
புனிதமாய்க் கிடையாது பேதந்தானே! 27

தானென்ற ஆங்கார ஆணுவத்தைத்
தள்ளிப்பின் பாருமெய்ஞ் ஞானமார்க்கங்
கோனென்ற வெட்கமுடன் மமதைதள்ளிக்
குறிப்பாகக் கற்பமுறை அறிந்துகொண்டு
பானென்ற விந்துவுட நாதம்ரெண்டின்
பக்குவமாய் யறிந்தல்லோ பார்க்கவேணும்
வானென்ற வாழ்க்கையிலே உறத்துக்கொண்டு
மருவிப்பார் வித்தையெல்லா மனத்திற்கண்டே. 28

கண்டுகண்டு மனந்தேறி உண்ணவேணுங்
கற்பமுத லருந்திநிதங் காணவேணும்
முண்டிமுண்டிக் கருவிகளை அறுக்கவேணும்
மூதண்ட லேகியத்தைக் கொள்ளவேணும்
அண்டியண்டி சமுசாரத் தோடிருந்து
ஆயிபதந் தனைப்பணிந்து பூஜைசெய்வாய்
விண்டுவிண்டு உந்தனுக்குச் சொல்லிப்போட்டேன்
விபரமா யுகாரத்தைப் பூசுவாயே 29

பூசுவது பூரணத்தை யுண்டசாரம்
பூமிதனி லிருக்கமட்டும் துவாலைபோடு
வீசுவது புளியோடே நீறுஞ்சேர்த்து
விரவியொன்றாய்த் துவாலையிட்டு உருட்டிப்போடு
மூசுவது வாசமென்று யெண்ணினாக்கால்
முழுமோச மாகிவிடுங் கற்பம்போச்சு
ஏசுவது புளியுள்ளே மெத்தவுண்டு
இறங்கிவிடுந் தனிவீட்டி லிருந்துசெய்யே! 30

செய்கையிலே பலகூட்ட மனுக்களாகா
சிவபூஜைக் கிசைந்தவரைச் சேர்க்கலாங்கேள்
பொய்கையிலே முழுகினாற் சாரம்போகும்
போகவிட லாகாது முழுகவென்றாற்
கொய்கையிலே அகாரத்தை எடுத்துமாட்டு
குருவருளால் ஆதியந்த அகாரந்தன்னை
கையிலே பூரணத்தை வாங்கிக்கொள்ளு
கருத்தாக இதுமுறைபோற் செய்திடாயே! 31

செய்திட்ட மந்திரமோ கோடாகோடி
செழிப்பான மூலிகையோ கோடாகோடி
கொய்திட்ட கருவிகளோ கோடாகோடி
குருவாகி நின்றமுறை கோடாகோடி
நெய்திட்ட சிவதீட்சை சத்திதீட்சை
நிலையான மவுனமென்ற தீட்சையுண்டு
எய்திட்ட முப்பத்திரண்டு தீட்சை
எடுத்துரைத்தே னோரைம்பத் தொன்றாம்பாட்டே 32

பாட்டான பாட்டப்பா முப்பதுக்குள்
பார்ப்போர்க்கு ஆதிமுத(ல்) அந்தமட்டுந்
தேட்டான தேட்டெல்லாம் அதற்குள்ளாச்சு
தேசத்தின் நடத்தையெல்லா மிதற்குள்ளாச்சு
கூட்டான கூட்டெல்லா மிதனுக்குள்ளே
குலாவுகின்ற ஊணுறக்க மிதனுக்குள்ளே
ஆட்டான ஆட்டப்பா தீட்சைமார்க்கம்
அதைவிட்டா லொன்றுமில்லை தீர்க்கம்போமே! 33

போமது தானெதனாலே அழிந்ததென்றால்
போக்கோடே நாதவிந்தை எடுக்காதாலே
ஆமதுதா னழியாது போகமூழ்கி
அப்பனே கற்பமுண்ணக் கோடியாகும்

நாமதுதான் பிறவிக்குட் பிறவியானோம்
 நாதாக்க ளறிந்தல்லோ உண்டாரப்பா
தாமதுதான் பூரணத்தை நோக்கநோக்கத்
 தனிப்பிறவி யில்லாமற் றானாவாரே! 34

தானான கற்பத்தை யுண்ணாமற்றான்
 தாரணியோ ரறியாமற் கெட்டார்கோடி
ஊணான உடலுயிரை அறியமாட்டார்
 உற்பனமாங் கற்பனையை அறியமாட்டார்
மூணான முப்பாமு மாகுமென்று
 மூட்டிவிட்ட வகையறியார் போகிமார்கள்
வீணான பயல்களுக்கு விள்ள வேண்டாம்
 விண்டிடவே யிந்தமுறை யறியார்பாரே! 35

அறியாமல் வாதத்தைச் சுட்டு சுட்டு
 அறிவுகெட்ட மூடருக்கு வாதமேது
விறியாமற் குவிந்தகற்ப தீட்சையாலே
 விளைந்தமுதல் மேவவல்லோ வேதையாகும்
புரியாமற் சுட்டதினால் வருவதேது
 பூவான பூரணத்தில் மீளவேணும்
சிரியாம லுலகத்தி லிருக்கவென்றாற்
 சிவசிவா அதீதமது முப்புக்காணே! 36

முப்பூவு மும்மலமும் இரண்டுமொன்று
 மூர்க்கமுள்ள ஆதியடா நாதம்நாதம்
அப்பூவில் விளைந்தந்தச் சவுக்காரந்தான்
 ஆரறியார் சுக்கிலத்திற் கல்லுப்பாச்சு
தப்பில்லை யிவ்விரண்டாற் சடலமாச்சு
 தயவான ஆண்பெண்ணு மிதுவேயாச்சு
இப்புவியிற் பிறவியறி யாதமாண்பர்
 இனியேது காண்பதில்லை யறிந்துபாரே. 37

பாரப்பா இல்லையென்ற பிறவிதானும்
பார்தனிலே பதினாறு முழத்தின்கீழே
சீரப்பா பூமிக்குட் சென்றுபுக்கிச்
சிறந்திட்ட நவநீதம் புதைப்பினாலே
வாரப்பா காயாதி கற்பமாகும்
வளமான குருவடா அண்டமாகுங்
கூரப்பா நவக்கிரக மொன்பதுக்குங்
குருவாகுங் கருவியது தொண்ணூற்றாறே 38

தொண்ணூற்றாறு விதமான வாதம்வாதம்
தொடுகுறியி லறுபத்து நாலுமாச்சு
உன்னுற்ற பொருளாலே எட்டுமாச்சு
ஒடுங்கு பன்னிரெண்டினிலே எட்டுந்தங்கி
அன்னத்தின் மலசலமும் அற்றுப்போச்சு
அறுசுவையாற் காயமது அழிந்துபோச்சு
கண்ணொத்த புருஷனுக்கு எய்தும்பாரு
கனமான பட்சியுட மார்க்கங்கேளே! 39

மார்க்கமுடன் மலசலமாம் வாய்நீர்வாதம்
மகத்தான பொருள்நாலும் வெளியேபோகத்
தீர்க்கமுடன் பெலங்கெட்டு வயதுபோச்சு
திறமறியா திகைத்தள்ளித் தயங்கினார்கள்
கார்க்கமுடன் கருவான வழலையாச்சு
கருதியதில் விளைவு சவுக்காரமாகும்
ஆர்க்கமுடன் அதிலிரண்டும் நன்றாய்ச் சேர்ந்தால்
அதுதானே பலக்காரம் அறிவாய்க்கேளே! 40

கேளப்பா அமுரிபுளி யதன்மேற்போடக்
கெட்டியா யீரெட்டு மதினாலாச்சு
ஆளப்பா இரண்டுடனே இரண்டுஞ்சேர
அப்பனே முப்பூவு முடித்தவாறாந்

தேளப்பா கொட்டுதல்போற் சுண்ணமாகத்
    தினந்தோறும் ஆட்டிப்பார் ஆண்டுபத்து
நாளப்பா வாய்கூட வெந்துபோகும்
    நாவுவெந்து வாய்வெந்து நாசமாச்சே! 41

நாசமடா கருவிகளாந் தொண்ணூற்றாறும்
    நலமாக வெந்துவெந்து போச்சுதப்பா
பாசமடா ஆசையென்ற விருப்பம்போச்சு
    பாழான கொடூரமென்ற கோபம்போச்சு
காசமென்ற கற்பத்தாற் சித்தியாச்சு
    கண்டிப்பாய் பதிமூன்றி லுள்ளமட்டும்
வாசமென்ற துற்குணங்க ளுருகிப்போச்சு
    வளமாச்சு பதின்மூன்று தீட்சைக்குள்ளே! 42

உள்ளான உள்ளமெல்லா மொடுங்கியொன்றாய்
    உறவாச்சு ஐம்பதுக்குள் தீட்சைமார்க்கம்
கல்லான கல்லெல்லாங் கரைந்துபோகுங்
    கடுமையுள்ள சுண்ணத்தா லிதுவுமாச்சு
புல்லான புதுப்பாண்டம் போலேயாகும்
    புதுமையுள்ள சுண்ணத்தா லானவாறாஞ்
சொல்லான சொல்லெல்லாஞ் சொல்ல மேலாஞ்
    சுகமான நாதத்தா லானவாறே! 43

வாறான உலகத்து வாதிமார்கள்
    வகைநாலு சரக்குதன்னைத் தள்ளிப் போட்டுப்
பேரான வெளிச்சரக்கை வாங்கித்தானும்
    பேருலகிற் சுடுவார்கள் கத்தைபோலச்
சீரான மூலிகையில் வாதமுண்டோ
    சிறந்திட்ட காயாதி யாகுமோசொல்
நீரான அகாரத்தா லாகுமாகும்
    நினைவுகெட்டுப் போகாதே உண்டுபாரே 44

பாரடா சிவமூலி சகஸ்திரத்தெட்டின்
பாலிருக்கும் நாற்சரக்கைக் காணமாட்டார்
ஊரடா இருக்கின்ற வீணரப்பா
உணர்ச்சிகெட்டுப் போனாரே கருக்காணாமற்
சீரடா கருக்குருவை என்னவென்று
சீமையிலே அலைவார்கள் குருத்தோணாமற்
கூரடா அதுயிதென்ன வென்றுதானுங்
கூட்டமிட்டுப் பார்த்தல்லோ சாவார் வீணே! 45

வீணான பயல்களுட மார்க்கங்கேளு
வெளியிலுள்ள கோவிலுக்குள் பூந்துபூந்து
கோணாமற் கும்பிடுவா(ர்) ஒன்றுங்காணார்
குறும்பரவ ரலைகின்ற மார்க்கமேதோ
நாணாமல் நாணுகின்ற மடையரப்பா
நாய்போலத் திரிவார்கள் தலங்கள்தோறும்
தோணாது முழுகுவார் தீர்த்தமென்று
துறையேதுங் காணாத மடையர்தானே! 46

மடையனென்றாற் கோபிப்பான் மாடுமாடு
மகாமோட்சங் கண்டாற்போற் பூஜை செய்வான்
கொடையான கொடையதுதான் வந்தாற்போலக்
கூறுகெட்ட கழுதையவன் பூப்பறிப்பான்
விடையாதே அவன்குணத்தைப் பார்க்கும்போது
விதிப்படியே யவன்புத்தி மேவும்பாரு
படையான கருவிகளை வெல்லமாட்டான்
பரப்பிரம்மம் போலிருப்பான் மூடன்தானே! 47

மூடனுக்கு மூடனாய் இருந்துகொண்டு
மும்மூலச் சுக்கிலத்தை அறிந்துஉண்டு
மூடனுக்கு மூடனாய் இருந்துகொண்டு
மூர்க்கமுள்ள சமாதிதனி லிருந்து மீண்டு

மூடனுக்கு மூடனாய் இருந்து கொண்டு
முடிவான நாலெட்டுத் தீட்சைபெற்றே
மூடனுக்கு மூடனாய் இருந்துகொண்டு
மும்மூலங் கொண்டுமே முத்திபெற்றேன்! 48

பெற்றனடா தீட்சையினி லிருக்கும்போது
பேருலகில் மனுக்களுடன் கூடிவாழ்ந்து
உற்றனடா வறுமையிலே வறுமையாகி
ஒருவருடன் நான்பேச்சுப் பேசாமற்றான்
கற்றனடா ஜெகத்திலுள்ள கல்வியெல்லாம்
கசகாம லதன்மேலே முப்பாலுண்டு
சித்தனடா மெய்யனுக்கு மெய்யன்யானே
செகத்திலுள்ளோர் பொய்யனென்னு செப்புவாரே! 49

பொய்யான காயத்தை மெய்யென்றெண்ணிப்
போக்கொன்றுங் காணாம லிருந்துகொண்டு
சையோக வாழ்க்கையிலே மதிமயங்கி
சருவாங்க மறியாத சண்டாளர்கள்
மெய்யென்ற பூரணமாஞ் சாகாக்காலும்
மெய்யாக உண்டறிந்தார் வேகாச்சுண்ணந்
தையலப்பா இரண்டினொடு நாலினாலே
தாய்பதத்தைப் பூஜித்து தானானாரே! 50

தானான மந்திரமோ ஐம்பத்தொன்று
தாக்கவதிற் கல்வியெல்லாம் மேலேவிள்ளும்
ஊனான உடற்பிறப்பி னாலேயாச்சு
ஒருமனதாய்க் கண்டோர்க்கு விதியை மாற்றிப்

பானான அமுதமுண்ட கற்பத்தாலே
பரமசிவ னானாற் பாருலகிற்றானும்
ஊனான முப்பொருளைக் கண்டவாதி
உருக்க முடனைம்பத்து ஒன்றுமுற்றே! *51*

ஓம்-தத்-ஸத்!

இது எனது (Dr. R. கோவிந்தராஜன் என்ற என்னுடைய) சுவடி எண் 253ல் இருந்து பிழையற எடுத்து எழுதப்பட்டுள்ளது!

திருவள்ளுவ நாயனார் குருநூல் 51

முற்றும்

உ

சிவமயம்

திருவள்ளுவர்
சூத்திரம்–108

வேதாந்த மெண்ணூற் தன்மொழி விசிதமொரு நூறும்
மேவுந்தமிழ் கவிசொச்சமும் விதியாலிவையருளும்
நாதாந்தசின் மயமேவிய நவரத்தின பீடம்
நவகண்ட மீரேழும்புகழ் நவசித்தர்கள் மகிழும்
பாதாம்புய நாதாக்கள் தன் பரிபூரண கமலம்
பதினெண்பல களையாய்ந்து நூல்பாடம் பணிந்தோதும்
தாதாவெனும் பொதிகைக்கிரி தலம்வாழ் குருமுனிவர்
தாள்போற்றிரு வடியேதொழு தர்ச்சித்தோதுவனே 1

மேவுந் திருச்சிற்றம்பல சனகாதிகள் சூழும்
விண்தாவிய பொதிகைகிரி மேவும் வளராசன்
தாவுமகத் தீசரெனை யாட்கொண்டடி யேனை
தமிழோதி மெய்ஞ் ஞானச்சுழி தலமேவியகுருவால்
யாவும்பல பொருளுமருள் அமிர்த மெனக்கூட்டி
ஆதாரமே லாதாரமு மனுக்கிரக மளித்து
காவுஞ்சுழி மூலாதாரப் பிராணாலயந் தந்து
கருவூர்குடி நகர்வாழெனில் கருணையளித்தாரே. 2

இரவிக்கதிர் முகமேனிய பகல்போன்றிட வொளிவாம்
இமையோரயன் மாலுஞ்சிவ மறியார்சுழி தலமுந்
திரவியருள் ஞானப்பதி செயல்பற்றிடு பெரியோர்
தினம்வாசி கொண்டமிர் தமுணரச் சித்தாதிகள் பெருமை

மறலியகற் றிடுவார்மகி தலமேகுடி கொள்வார்
வாழ்வார்திருசிற்றம்பல மகிழ்வார் மதிபூண்டு
நரணாதிகட் பொறீ நீரிமகருவிதனைச் சுடுவார்
காந்தத்துட முறையாலுமே கருதும்வினையொழியே! 3

காந்த செந்தூரம்

ஊசிக் காந்த மெனிலேழு
ஊசியிவை யுயரத்தூக்கிவிடு மாதலால்
ஓரிரண்டுபல மாவதற்கரிய
உறுதிவைத்து குழிக் கல்லில் நீர்
வீசியேவிடுவீர் தூளதாகப்பொடி
மேவிசம்பழ நீர்விட்டபின்
மேலதாகவொரு சாமஞ்சாடிவலு
வேகமாமயன மிவையதும்
பாசிபோன்றிடுதல் மெழுகுதன்பதமும்
பார்த்தெடுக்கும் வழித்து வில்லைசெய்
பாருதன் ரவியில் மைத்திடுஞ்சுவறல்
பாகமாகும் பதமாயெடு
பூசி தமகலிலூட்டி மேலகலு
புகலமண் சீலையுமேழதும்
புனல்சலஞ் சுவறகதிர்முகம் படவும்
பூட்டிடும் ரவியில் வைத்திடே 4

சீலைசெய்தெடு கணேசன் பூஜையிடு
செய்கை யாய்ப்புடமுங் கோழிதான்
செவியு மூன்றுவிசை சாருவிட்டரையும்
தெளிவதாய் மயனம் வருவதால்
மூலமாமிவையு முன்செய்த புடமும்
முரைத விற்படியு முணர்வதால்
முலையெனுஞ் சலநீர் தாழைதன்னியல்பு
மூட்டிச் சாட்டிவிடு மயனமாய்

வாலைதன் மெழுகு சாமமாட்டியெடு
வருகலால் வழியும் வில்லைசெய்
வைத்திடும் ரவியிலிட்டிடு மகலில்
வட்டுமூடி மண்சீலை செய்
மாலை நேரமதில் குக்குடத்தின்புடம்
வன்னியிட்டு மறுபின்பது
மாறுமூன்று புடந்தாழையின் முலைநீர்
வார்த்துச் சாடிப்புட மூன்றிடே. 5

காந்தச் செந்தூரமும் வருதலும்புரசை
காணும் பூவின்னிற மாதலால்
கண்டெடு சிமிளிற் பதனமாய்மூடியுங்
கைவசப் படுவதரிது காண்
நிந்த செந்தூரமிதாகு மிவ்வவிழ்தம்
நினைய தாகுமனுப் பானமும்
நிலைகொண்டேத்திவிடு நோய்பிணிக்கிடவும்
நிகரி லாதமுறை யறிதலால்
விந்தையாவினுட கிருதமா மதனில்
விட்டிடு மிவையும் பணவிடை
வினவுமிந்தவியஞ் செந்தூ ரந்தனிலும்
விளங்குபத மிவ்விதம்
சிந்தையேனுனது வறுமை நீங்கிவிடும்
தேகமா வதுஞ் சவுக்கியம்
சிலேத்தும மாம்வினைக ளிருபத்தொன்றுவிடுந்
தீரு மண்டல மிதாகுமே. 6

மண்டலத்தினுங் காசரோகமெனில்
மாறி யோடிவிடு மாய்கையாய்
வச்சிரதேகம் வலுவாகுங் கற்றூணது
மதுர நீரதுவு மாறிடும்
அண்டவாயுவுடன் தமரகங்களும்
ஆறு சூலையும கோதரம்

அவிழ்தமு முணர்வீர் ஆவின்பாலுஞ்
சிறுபயறு மன்ன முமருந்துவீர்
கண்டவர்கள னுபோக பண்டிதர்கள்
காண்கிலார்க டுளனில் கண்டபேர்
கனகமாகுஞ்சடம் நோய்களற்றுவிடுங்
கருது பத்திய மறுபத்தியம்
விண்டுநோய் விடுமே தந்திமேகம்
வெடிசூலை குன்மசயம் ஓடிடும்
விசிதமோர் தினமிரண்டு வேளையுணர்
மேலுமேலும் வினை போகுமே. 7

வினைப்பயன் விடுபட் டேபோம்
மெய்க்குரு விளக்கத்தாலும்
இனையிதற் கவிழ்தமேது
இன்னுந்தேன் கழஞ்சி வாங்கி
முனைந்திடு மனுப்பா னத்தில்
முன்பு மண்டலந்தான் போலும்
துனைந்திடும் நோய்க ளேகுங்
காந்த செந்தூர மூட்டே. 8

செந்தூரம் பணந்தான் கொண்டு
தேனதுங் கழஞ்சி தாக்கி
இந்திரன் முகத்தின் நேரே
இருந்து நீகுழைத்து மத்தி
மந்திர தியானஞ் செய்து
மகிழ்ந்து மண்டலந்தா னுண்ண
தந்திரமாக வெய்துஞ் சச்சுவாய்
வதுவும் போமே. 9

பசும்பயர் பாலுஞ் சோறும்
பத்திய முருங்கைப் பிஞ்சும்
விசம்பிடுந் துவரை யாதல்
வெள்ளையா மேஷம் வற்றல்

கசிவெனி வெல்லாந் தவளுங்
    காந்தச் செந்தூரத் தாலும்
நசிந்துபோம் பாண்டு சோகை
    நவின்றிடும் வீக்கம் போமே! 10

நசிந்திடு மஸ்திச் சூடும்
    நஞ்சுதின் னவர்க்கு மெய்தும்
இசிவுடன் வலியு மேகும்
    இளந்தையின் முறடும் நீங்கும்
பசுந்தயிர் புளிப்பு மஞ்சு
    பாலதும் பலமும் மஞ்சு
மசியும் நோய் மணச்செந்தூர
    மவுழ்தமத் தித்து வுண்ணே. 11

கன்மங்கள் தீர

உண்ணு மண்டலத்தில் நோய்போம்
    உண்பது மிரண்டு வேளை
கண்விழி துலக்கமாகுங்
    காலையு மாலையுமுண்டால்
விண்ணொளி யறியலாகும்
    விருப்பமாம் விழிதன் பார்வை
எண்ணுள்ள காலம் வாழ்வர்
    இந்திர னொளிகாண் பாரே. 12

பாண்டு சோகை தீர

பித்தப் பாண்டதுவும் போகும்
    பிரமி நீராமை யேகும்
வைத்திடுஞ் செந்தூரத்தால்
    வசிகரமாகும் நோய்போம்

சுத்தமாஞ் சங்குச் சாற்றில்
 தொடுத்து மண்டலமே யுண்டால்
வித்தக னருளால் சாத்தியம்
 வெண்குஷ்ட மதுபோ மாண்டே 13

மதுரந்தேன் கிருதம் ரெண்டும்
வைத்திடும் பணசெந்தூரம்
விதுரநோய் சடம்விட்டேகும்
வேளைகொள் தினந்தான் ரெண்டு
பதறிடா திரண்டு பக்ஷம்
பத்தியமாக வுண்டால்
கதிரவ னொளியுங் காணுங்
காந்தியு மதீத மாண்டே 14

காந்தி மீறுங் கதிர்தன் னொளிவதாம்
வாந்தி தன்னைவாராமல் நிறுத்திடும்
மாந்தமெட்டும் மலைகட லேகிடும்
சாந்தமாகுந் தடையொன்று மில்லையே 15

மாறுமாறும் மகோதர மண்டலம்
தேறுந்தேறுமே திப்பிலி சுக்குடன்
கோறுங் கோறுங்குருமிள கும்அனல்
நீறும்நீறும் நெருப்பில் வெதுப்பிடே 16

ஒண்ண ரைப்பல மோடதி விட்டிடுஞ்
சுண்ண வுங்கனல் காந்தச் சுடர்பட
வெண்ண வுமிவை வீசிடுஞ் சூரணம்
யண்ணு மேகிருதம் பாலுந்தே னாகுமே! 17
பாலுந் தேன் பஞ்ச தாரையி லும்விடு
காலங் கண்டு கருதிக் கொடுப் பீரேல்
மேலும் மேலும் விசையுள்ள வாயுவும்
தூலம் விட்டுத் தொலை தூர மேகுமே! 18

நாசிப் புண்ணாறுதல்

தூர தூரத் தொலைதூர மோடிடும்
மாற மாற வனேகநா ளில்லைபார்
கார காரவுங் கம்மல் சயம் விடும்
நாறு நாறுமே நாசிப்புண் ணாறுமே! 19

அப்பும் உப்பும் அறிந்து செய் தாலல்லோ
செப்பொ ணாதரி தாரக்க ளங்கதாம்
சுப்பி ரமாய்க் கழஞ்சது பத்தெடை
பொற்ப ரீதபொன் கெந்தியெ டையதே! 20

அன்ன பேதியு மவ்வெடை யேசமன்
சொன்ன தோர்சரக் காவதுஞ் சுத்திசெய்
நன்னஞ் சூதமு நாகமு மைந்தெடை
அன்ன மேளடை யஞ்சுஞ் சரியதே! 21

சூதக்களங்கு

தொந்திக்கச் சூதமு நாகமு ருக்கிடு
இந்தசேர் சரக்கேத்துங் கலுவமில்
பொந்தி யும்பூவ ரசன்வித் தேயெடு
தந்ததோர் குழித் தைலமி றக்கிடே! 22

தயிலம் விட்டுச் சாடித்திடுஞ் சாமல்நால்
செயலதாய் வழித்தே சிறுபில்லை செய்
அயின மீதி லருணன் முகம்பட
தயிலக் குப்பி தனக்கு மண்சீலையே! 23

சீலைமண் ணேழுஞ் செய்துவு லர்த்திடு
சாலக் குப்பிச் சரக்கையுந் தாக்கிடு
வாலை வாய்தமர் மயிருஞ் சொருகிடு
வேலை யுண்டோபின் வேறொரு குப்பியே! 24

குப்பி வாயில்முன் குப்பினு ழைத்துமே
ஒப்பு றவாயு ளுந்துமா வெண்கரு
இப்பதமே யேழுசீலை சுத்தியே
தப்பொணாது தாணிப் புடமதே! 25

மருந்தி ருக்கு மதுகுப்பிக் குப்பிமேல்
பொருந்த வும்பூமி தன்னிற் புகட்டிடு
வருந்து மேவிமண் சீலைவ லுத்திடு
அருந்துங் குப்பி யதுமணல் சோறிடே! 26

சோற வும்மணல் சுத்தி யிருவிரல்
சாற வும்மேரு யிட்டிடு குப்பிமேல்
கூற வுந்தணல் கொண்டிடு வன்னிதான்
ஆற வும்புட மவ்வித மாகுமே! 27

ஆறிடும் புட மாறின பின்னெடு
வாறிடுங் கவசங்களும் வாங்கிடு
கூறி டுங்களங் காவது குப்பியிற்
சோறி டுஞ்சூத நாகத்தி னாட்டமே! 28

தங்கச் செம்பு

வங்கந் தாரம துரச நாகமும்
அங்க மாங்களங் காகுமெ டுத்திடு
தங்கச் செம்புந் தயிலமாங் கெந்தியால்
திங்க ளன்னையின் செய்கையா லாண்டையே! 29

லிங்கக் கட்டு

சிங்க மாகுந் தெளிந்திடு வங்கமாம்
லிங்க மாவ தொருபலம் வாங்கிடு
தங்க மேஅயச் சட்டி தனிலிடு
மங்கொ ணாதுநல் லெண்ணெய் தீயேற்றிடே! 30

ஏத்தியே யிரு சாமஞ் சுருக்கிடு
பார்த்தி டும்பத மாகத் தைலமுந்
தூத்தி டுமேது ளிதுளி விட்டிடு
சேத்தி டுமேதி ருப்பித் திருப்பிடே! 31

திருப்பி யேவிடுந் தேங்கிடா லிங்கமுஞ்
சுருக்கி டும்வலு சோதிப்பிர காசமாம்
மருப்பொ ணாதுமால் சிங்கத் தைலமாம்
இரும்பு போல்வலுத் தேவிடும் லிங்கமே! 32

வலுத்தி டும்வலு வேகமதாகிவிடும்
மத்தியில் பத்துக்கொன்றீயவும் பொன்னதாம்
நலுத்திடும் வயதேழரை யாமெனில்
நாடினார்கள் நாதாக்கள் மகுத்துவம்
பலித்தி டும்பரி வேதைக்கு மீண்டுபோம்
பாரி லும்பண்டி தற்கிது வேண்டிடில்
தொலைத்தி டும்பெண் தோகை மயல்வீடு
சொன்ன தெல்லாஞ் சுருக்கங்கா ணாண்டையே! 33

சொன்ன தோரரி தாரக் களங்கெடு
தொட்டுப் பாரயச் சட்டி தனிலிடு
வன்ன கெந்தித் தைலங் கொண்டூட்டிடு
மாறி டும்இரு சாமஞ் சுருக்கிடு
அன்னை யாம்பி ராமி பதம்பணிந்
தான பின்பு பூஜித்துமே நீயெடு
வின்ன மேது பொன் போலிது வர்ணமாம்
மெய்வி ளங்கிடு மேன்மை பெறுவரே! 34

ஏழு மூன்று மிரண்டெனில் மூசையில்
இவை யுருக்கிப் பதம்வரும் போதினில்
வாழு மேவரும் பாக மறிவதால்
வருத லிற்குரு வொன்று கொடுத்திட

தாழு மோதனி யெட்டரை யாகுமே
தாழ்ந்து பேர்கள் தரணியில் வாழ்வர்காண்
சூழுஞ்சூழுஞ் சுகமவை காண்கிலீர்
சூக்ஷா சூக்ஷஞ் சுருக்க மறிவரே! 35

தாளகத்தில் வங்கமெடுக்க

தாளகத்திற் றனியீயஞ் செய்பவர்
நாள துண்டோபார் நாயுருவி யுப்பும்
மாளு மீய மதளைக் குழந்தையின்
நாளு மாண் பிள்ளை நன்ன மூரியிதே! 36

உப்பு தன்னி லொரு விராகனிடை
தப்புமோ குழிக்கல்லில் நீர் பாய்ச்சிடு
அப்பவே யரிதாரம் பலமிடு
முப்பு தொட்டிடு மூலியா லாகுமே! 37

பூவோ டோங்கு மூலியின் பூவதாம்
புகலுஞ் சுந்தர புட்பாதி மூலிகை
தாவிடுமேம ருக்களின் பூவதாம்
தரணி தன்னிற் பூங்காவி லிருப்பதாம்
வாவிசே ருங்கொய் யாமரப் பூவெனில்
வஸ்து விந்த மகிமையைக் காண்கிலார்
கோவிதங் கும்பற் கும்பலாய் மேவிடில்
கூறி னோங்குண வரசமி தாண்டையே! 38

எங்கு முண்டுயீ யத்திற் செந்தூரஞ்செய்
இணங்கிப் பாருநீ யிதிற்சத்தி ராதுகாண்
அங்கு முண்டாம் புவியின்கண் கானலில்
அழக தாகவம் மூலிவளப்பங் காண்
இங்கு முண்டு மெங் கெங்கு முண்டாமெனில்
இருக்கு மந்த விடங்க ளறிந்திடீர்
வங்க மேவு மழுகண்ணி மூலிபோல்
வாழுமே வளர் மூலியுங் கொய்திடே! 39

கொய்திடும் அந்த மூலிகை வாங்கிபின்
கொண்டெ டுசிறு பிள்ளை யமுரிதான்
எய்திடு மிதை நீருவிட் டேயிடித்
தேங்கிடாம லெடுத்துப் பிழிந்திடு
மெய்ய தாகுங் குழிக்கலு வந்தனிற்
மேன்மை மூன்று வகைமருந் தேயிடித்
தெய்து மேயிவை சாறுவிட் டாட்டிடு
ஏங்கி டாதொரு சாமமுந் தாக்கிடே! 40

ஆட்டிடும் போதது பதங் கண்டிடு
ஆகு மைப்பத மவ்வித மானபின்
நாட்டில் மேவிடுங் கூத்தன் குதம்பையும்
நாடெ லாமுண் டனேகவ னாந்திரங்
கூட்டு மேவியம் மூலிகை வாங்கிடக்
கூறி னோஞ்சிறு பிள்ளை யமுரிதான்
வாட்டிடு மேபின் னீர்விட்டுச் சாடிடு
வாங்கிமூர் சாம மாட்டி யரைத்திடே! 41

அரைக் கரைக்கவே மைப்பதம் போல்வரும்
மப்ப தம்மெழு காகிடுஞ் சாமமில்
இயங்கி யேயம் மெழுகை வழித்தெடு
என்ன மாயமிம் மைசதுர் பில்லைகாண்
கரைத்தி டுங்கதிர் கானல் முகம்பட
காந்தி யிலுலர்ந் தேயெடு மூசையில்
சிறைத்தி டாதசெப் புத்தகடொன்ற தாஞ்
செய்தி டுமூசை வாய்க்குச் சரியதே! 42

சரிய தாகு முக்காலரைக் கால தாய்ச்
சங்க மாமூசை வாய்க்கு நெருக்கிடு
வரிய தாகும் வரியின்மே லோடது
வைத்துச் சந்துவாய் மண்சீலை செய்திடு

குறிய தாகக் கதிர்முகந் தாக்கிப்பின்
    கொண்டி டும்பெரி தானயெ ருவதாய்ப்
பிரிய மாயிதை ரெண்டு யெருவிலும்
    பின்பு மேசிறு நாலெரு வாகுமே! 43

நன்று மேபுடங் காற்றடி யாதிடம்
    நாலெரு வுவிட் டேயனல் மூட்டிடு
வென்று மேகன லாறி யெடுப்பதால்
    மேலும் வைத்த செப்புத் தகட் டையெடு
கண்டு மேவும் பதங்கம தாகிடுங்
    காண்கி லும்மதை கத்தியால் வாங்கிடு
விண்டி டீரிவை வீணிற் பதறிடா
    மேலு மேமெது வாயெடு பற்பமே! 44

பற்ப முஞ்சிறு மூசையில் தாக்கிடு
    பார்த்து மேவிக் கரியில் வைத்தூதிடு
இற்ப தென்ன யிவை யீய மாகிடும்
    இன்ன மூமயச் சட்டியில் வைத்திடு
சிற்ப தென்னச் செழுங்கன லாயெறி
    தீப மாகும் நல்லெண்ணெய்யும் விட்டிடில்
உற்ப தென்ன விளக்குத்தீ பாக்கினி
    ஊட்டி டவேபொன் கெந்தித் தைலமே! 45

வங்க வெட்டை

தயிலமூட்டித் தனிரெண்டு சாமமுந்
    தாக்கிடுந் துளி தாந்துளி யாமெனில்
வயிரமாகும் வலுவது வெட்டையாம்
    வங்க மாமிதற் கீடது மில்லைபார்
மயிலா மில்லா வடுவதும் பொன்மயம்
    மதியு மேமுதேய் வானது மூன்றிடை
பொயிலத் திருடும் புலையனா னென்றிடும்
    பொதிகை மேவு மகத்திய ராணையே! 46

உருக்கு மாமுக மொன்று குருக் கொடு
ஓடு மேவய தெட்டரை யாமெனில்
பெருக்க மாயெடுத் தேசில வாதிகள்
பேசு வார்கள் பெருமைய தாகவுஞ்
செருக்கு மேஜெகத் தோர்கள் பழித்தனர்
சிறுமை யோசில காலமும் வாழலாங்
குருமு னிவற்கு றித்தெனக் கோதினார்
கோகு மென்மதி போல நீ செய்யுமே! 47

என்மதி யாலெடுத் துரைத் தேன்றமிழ்
எய்திடு மமுதக் கவி பாடலாஞ்
சொன்ன தோர் திருவள்ளுவன் சொல்மொழி
சூக்ஷ மெண்ணூ றிதுசொச்ச நூறினில்
வின்ன மில்லை விகற்பமு மில்லைகாண்
விரித்து ரைத்தேன் வெகுவித நூற்பயன்
மன்ன ரும்மண்ட லீசர் மகிழுவார்
மால்தேவி வரலாறு மகிழ்வனே! 48

இல்லை தாரமியம்பின தோர்முறை
வெல்ல லாமோ விதமென்ப ரிக்ஷையும்
சொல்லர் சொல்லார் வெகுசுளுவோ யில்லை
கல்லுமே லெழுதுங் கருத்தாமெனில்
அல்லர் தாமோ பொருளுங்கல் லாவதுஞ்
சொல்லு மோசெடிப் பூடும் பொன்னாகுமோ
கொல்லவந் தெமன் கூற்றன் வினையதாய்
இல்லமே யுனதுள்ள மறிந்திடே 49

இல்லையில்லை யெண் சாணுட லுக்குள்ளே
சள்ளையொன்று சாகாக்கால் வேகாத்தலை
அல்லுமேங் கலானத றிந்தபேர்
விள்ளலாகும் வினைப்பயன் ரெண்டதும்

தொல்லையேது மகாமேக லேகியங்
கள்ளமாய்வந்த நோயை யகற்றிடுங்
நல்லவன் குருசாமி யருளினால்
எள்ள ளவு(ம்) மிதிற் பிசகில்லையே! 50

திருமருவும் வடிவழகாம் மாதுவாலை
செங்கமலர்ப் பாதமலர் தெரிசித்தேயான்
மருவுதிரு பொற்காலம் பணிந்து போற்றி
மகாமேக லேகியமும் வணங்கி சொல்லக்
கருவுருவா யெனையீன்ற அன்னை யார்தான்
கருணைவைத்து நவரத்ன மணிகளாக
குருவான அகஸ்தியர்தன் கிருபையாலுங்
கூறுகிறே னாண்டே யினிக் கூறுவேனே! 51

கூறுவேன் கடுக்காய்த்தோடுந் தரனியுங்
குறித்ததோர் நெல்லிக்காய்த் தோடுஞ்சீரகம்
ஏறுசுக்கு மிளகுடன் திப்பிலி
ஏலரிசிக் கிராம்பு மதுரமும்
தேறுமேகரு வாயுடன் பட்டையுஞ்
சேர்க்கையான லவுங்கமும் பத்ரியும்
ஈறுமே சாதிக்காயும் நறுக்குடன்
இன்னுமேவாச் சாரம் வாலுமிளகதே. 52

வாய்விளங்கமு மக்கிரா காரத்துடன்
வாறுகாணெனில் கோஷ்டமு மாதலால்
தூயதன்சம னொன்று பலமரை
சூட்டினோ மாவின்கிருத மரைப்படி
சேயெனும்பலந் தேனதும் பத்ததாஞ்
செய்கை யிவ்விதக் கார்கோல் நன்னாரியும்
வேயெனும் வெட்டிவேர் கீழ்காய் நெல்லிவேர்
விகிதமே வகையொன்றுக் கரையதே. 53

பலமெனுமரை யாகுஞ் சரிசமன்
பார்த்தெடுத்துமே நீர்படி நாலது
வலமாவின்பால் படியது தானரை
வாருமோரிடைக் கமுகின் பூச்சார்படி
சலவுஞ்சம்பழச் சார்படி தானரை
சார்திடுங் கையான்சாறு படியரை
கொலமா குஞ்சிறுக்கீரை செறுப்படைக்
கொண்டிடும்படி யாவ தரையதே. 54

கீழ்காநெல்லி யரைப்படி சாரதுங்
கேளுகற்றாழை சாரு மரைப்படி
வாழ்வதோர் சரக்காவதுஞ் சூரணம்
மற்றவேர்கள் வகையெலாஞ் சூரணம்
தாழ்வுமேதொரு தாளிதன் சட்டியில்
தண்ணீர் தேன்பசும் நெய்யது வாமெனில்
வேழமாமுகன் குண்டலி வல்லபை
விகிதமென்குரு மாமுனி தியானமே! 55

தாளியிவை யானதொரு சட்டிதனி லிவ்வகைகள்
வேளீர்போல் பாலைவிட் டடுப்பில் பக்குவமாய்த்
தேளிதுவென்றே கனலுந் தீபமது போலெரிக்க
நாளிலைநீர் சுண்டியிவ்வ நடப்பதுவுங் கண்டிலரே. 56

தொக்கிவிடும் பாகதுபோல் சூக்ஷமதுவேயறிந்து
புக்கிவிடு மேயிறக்கிப் பூட்டிவிடுஞ் சூரணத்தை
தக்கிவிடு மேகிளறித் தானதனை யேதுழவி
சொக்கிவிடா லேகியமே துதித்துவிடுமே பணிந்தே. 57

பணிந்து அகத்தீசர்பதம் பாயாச மன்னமுடன்
அணிந்து சுவையுடனே யர்ச்சித்தாறாதனைசெய்
வணிந்து கிருபையினால் மகாமேக லேகியத்தைக்
கணிந்து கலசந்தனிலுங் கருதிவிடும் பக்ஷமதே. 58

பக்ஷமது உண்டால் பாழ்போன் றிடும்வினைகள்
தக்ஷணமே லேகியத்திற் சமன்களற்சிக் காய்வீதம்
உச்சந்தள்ளிக் காலையிலு முண்பதுவு மாலையெனில்
அக்ஷணமே வேளையிரு அவ்விதமாய்க் கொள்வீரே. 59

கோலமென்ன கோலமின்னூல் குருமுனியால் வந்தவிதி
ஞாலமென்ன வுண்டவிழ்தம் நாற்பது மாளுண்ணயிலும்
பாலனது வாகுமுடல் பத்தியம் பெண்தள்ளிவிடு
வாலையதாஞ்சடமும் வச்சிரம் போலாகிடுமே 60

கிருதம்நெய்யாகு மாவின் பசுந்தயிர்கெடியதுமோர்
வருதத்துவரை யவரை வழுதலைக் காயும்பிஞ்கஞ்
சிறுத்தப்பசும்பயர் வெள்ளாட்டின் பாலுஞ் சிறுமுருங்கை
முறுத்திடுந்தேனு மரைக்கீரை முள்ளும் வெள்ளரியே! 61

வெள்ளரி சுண்டையா தண்டைவற்றல்
வெள்ளாட்டிறைச்சி
கிள்ளையுங்காடைக் கிளுவையு முள்ளான் சிறுமுசலும்
தள்ளிடும் பச்சைப்புறாவெனு மாமைதசையிது பார்
கள்ளுங்கோரக்கர் மூலிப்புளி புகைக்கைப்பும் விடே. 62

விட்டிடுஞ்சூலைக் கிரந்தியும்
வாயுவும் விக்கல் கக்கல்
கட்டிடுஞ் சேத்துமந்
தொண்ணூற்றியாறுங் கடல்புக்கிடும்
மட்டில்லாச் சூசிசூதக
வாயுவு மாந்த மெட்டும்
வெட்டிடு நோயை மகாமேக
லேகியம் விழுங்கிடுமே. 63

வச்சிரகண்ட மணிகண்டமாலை வாயடைப்பும்
உச்சிப்பிளவைத் தவடைப்பிளவை யோனிப்புத்தும்
மச்சதுமேக மதுரநீர்ப்பாளை மகோதரமுந்
தச்சிடுஞ்சூலை யூண்வாய்வு சக்கந் தவறிடுமே! 64

இசுவெட்டுக் குன்மம்
இனியெட்டு மூலமெய்தும் வெடி
அசவெட்டு மாந்தை
அன்னத்துவேச மறைக்கடுவன்
கசிவெட்டுப் புண்கள்
கனல்வன்னி ரோசிக்காது மந்தம்
விசுவிக்க லேப்பங் காசமும்
வாந்தி விடுபடுமே! 65

வெண்பா

வலிகுன்மம் நீர்க்கட்டு மகோதரமு நீரழிவு
கலகமெனில் மேகமொடு காந்தல்போம்-வலிகுன்மம்
மேகமிரு பத்தொன்றும் வெடிப்புண்கள் சூலையறும்
தாகமறுஞ் சோபமறுந் தான்! 66

சன்னிசுர தோஷமறுஞ் சாந்தமது வாகுமெனில்
இன்னவிதப் பாண்டு சொரிவெய்திடா-சன்னி சுரம்
மகாமேக லேகியமு மண்டலங் கொண்டேவரவுஞ்
சுகதேக மாகுமெனச் சொல்! 67

சார்ந்து யிவை லேகியமுந் தானது செந்தூர பற்பம்
சேர்ந்து வொரு மண்டலமுஞ் சென்றதால்-சார்ந்துமிவை
சூதகெந்தி வாளமிதைத் தோகைமட மாதரசே
வாதசட மாமெனினும் வாழ்! 68

என்றுமிட லேகியமும்
எய்துமிவை செந்தூரம்
வென்று தினமாகிலுமே
விட்டுவிடா - என்றுமிவை
கண்கள் விழியொழிவாங்
காணுபகல் சுக்கிரனும்
உங்களுக் கெல்லாந்
தெரியு முண்மை! 69

அபிராமிசிவ ஞான சுந்தரி
அம்பிகை வாலை மனோன்மணி யந்திரி
தபோதனர் மெச்சிடு வானந்தி பூரணி
சச்சிதானந்த திரிபுரை நாரணி - வருவாளே.
கணேச குண்டலி சரவண பவனே
கருத்து கந்துநீ யாள்வாய் சிவனே
துணையுன தனுக்கிரகஞ் செய்வாய் நிதமே
சொல்லும் வயிரவன் மாத்திரைக் கிதமே - தருவாயே 70

சாதிலிங் கமுடன் மிளகுதிப் பிலியுஞ்
சரக்கில் வெண்கார மக்கிராக் காரமுஞ்
சோதி யிந்துப்புஞ் சூஸ்திர நாபியுந்
தூக்கிடு வாயிரு களஞ்சது வீதமாய்-சமனாக
ஆதியெனுமிவை சரக்குக ளேழையு
மப்போ தேகுளிக்கல்வ மிட்டுப்பின்
மேதியோர்புகழ் சம்பழச் சாற்றினால்
விகிதமாயிதை யொருநாளரைத்திடு-மெழுகாக 71

மெழுகு பதத்தில் வழித்தெடுத்துநீ
வெய்யிலில் ரவிபடா நிழலிலுலர்த்திடு
பழுதுவ ராசுரைக் குடுக்கை தன்னிலே
பத்தியு டன்னது பதனமதாகவே-சுகமாக
எழிலாபனுப் பானங்க ளறிந்திடு
இஞ்சிச் சுரசத்தில் குன்றி யிடைகொடு
நழுவா தசுரம் விட்டலைந் தோடிடும்
நலமாய்க்காலை மாலைவிடாமலே-தருவாயே. 72

காலை மாலையு மீரைந் துதினங்
கருதிக்கொடுத்திடச் சுரமது ஏகிடுந்
தோலைச் சுற்றியே சன்னியுந் தோஷமுஞ்
சொல்லா தோடிடும் வல்லபம் பாருநீ-முறையாக

மாலைவரு மூன்றாமுறைக் காய்ச்சலும்
மலைகட லதுவுந்தாண்டி யோடிடும்
வேலையென் றேநினை யாமலே மருந்துசெய்
வேண்டுந் திரவியங்கிடைத்திடும் ஆண்டேநற்-செயமாக 73

மாயாதென்றுங் குகாந்தகன் மாத்திரை
மாதுகெந்திப் பலமுக்கா லாகவுந்
தூயபொன்னரி தார மதினிடை
சூத்திர நாபியுஞ் சூதமுமவ்விடை
தாயெனும் மனோசிலையு மவ்விடை
சாஸ்திர பேதி வெண்காரமு மவ்விடை
நேயமாமிங்கி லீகமு மவ்விடை
நேர்மையாய்ச் செயசுத்தி செய்தானதே. 74

சித்திசெய்து சுகாந்தமாங் கல்லினிற்
சத்தியாய்விடுஞ் சம்பழச் சாற்றினால்
குத்தியேவிடு வீர்குழிக் கல்லில்நீர்
சித்தியாகுந் தினமூன்று நாளிலே 75

மூன்றுநாளும் முனைவிடா தோட்டிடு
வேண்டிய யேமய னமெழு காகிடும்
வீண்டியேவிடு வீர்வழித் தேயெடு
காண்பமிவை கண்டெடு குன்றியே 76

உண்டிட நிழல்தன்னி லுலர்த்திடு
அணடிடுஞ்சிமிள் தன்னி லடைத்திடு
விண்டிடும் விடிவேட்கை சுரம்விடும்
கண்டிடுமிது காட்சியைப் பாருமே. 77

தேனும்விட்டுத் திரிகடு குப்பொடி
மானேவைத்திடு மத்தித்துக் குன்றிடை
மானுமேமமு வேந்திய மான்பரன்
காணுமேவிக் கனலிற் கருதிடே 78

வாதசன்னி வருமைய பித்தமுங்
கேதுராகு தனக்கீடுங் கெணங்களுஞ்
சூதசன்னி சுகசன்னி தான்முதல்
சாதகமாய்ச் சமுத்திரம் புக்குமே! 79

சூரியன்கதிர் ஜோதி யொளியினில்
வாரியே மதுரம்விட்டுக் குன்றிடை
நாரி யர்முலைப் பாலது வாங்கியே
தேறி யேவிடுஞ் செய்துமத் தித்திடே! 80

மத்திக் காலை மதியிலு ணர்த்திடு
வைத்தி டும்ஐந்து நாள்வீ தமுண்டிட
எத்தி யோடும் வியாதியு டல்விட்டு
சித்தி யாகுஞ் சிவனார்சொல் வாக்கியமே! 81

எட்டெட்டு மறுபத்தி நாலு போதும்
எய்திடுமே பற்பச் செந்தூரச் சுண்ணம்
வெட்டிடும்பார் மேக ராஜாங்கத் தெண்ணெய்
வேகமா மேகங்க ளிருப துந்தான்
கட்டிடுமே பாசத்தின் கயற்றி னாலே
கனல் சூழ்ந்து கருகிவிடு மாதலால் நீ
கட்டும் வீரக் கொடியை மகிழ்வ தாகக்
கருளமென்று நினையாதே உண்மை பாரே! 82

சீரணித்திரு மேவு மலர்ப்பதஞ்
சித்தி விநாயகன் மத்த கஜமுகன்
வாரணித்திரு மாமல ரஞ்சகி
மாறு அன்னை மலர்ப்பதம் பான்துதி
பூரணிப் புவனாம் பிகை தன்னருள்
போற்றி னேனடி யேன் றிரு வள்ளுவன்
நாரணுசிரோ நாயகி பொற் பதம்
நான் மலர்த்துதித் தேன் குரு வாண்டையே! 83

முன்னை யும் முக்கத் தாரிவி லாமிச்ச
    மூலி யிற்கொடி வேலிப்ப ருத்தியும்
இன்னிலத்தில் சிறு சின்னி கொன்னையு
    மிலவன் கோங்கு விருக்ஷக முல்லையும்
நன்ம லரும் நன்னாரி விழுதியும்
    நத்தைச் சூரி யுருவிய முக்கிராப்
புன்னை மாமல ராம்பலுந் தோடையும்
    பேரா முட்டிசித் தாமுட்டி தானுமே! 84

முத்துச் சங்கு முதியார் தன் கூந்தலுஞ்
சித்து மேவுஞ் சீதா செங் கழுநீரும்
வித்துக்கை யான்வில வத்தின்வேர் வெட்டியும்
குத்தனாங் கூத்தன் குதம்பையி தாண்டையே! 85

வாறுதன் மூலிவேர் வகைத்தோடு
    வாங்கிடு வன்னியில் வெதுப்பி
வான்மதி லிலகு மூலிதன்ரசமுல
    மறுவொரு பாண்டத்திலூட்டி
வேரதின் றோடு மிகப்பத முலர்த்தி
    மிவையெடுத் தடுப்பினி லேற்றி
வெதுப்பிப் பொன்னிறமா யெடுத்துக்
    கல்லுரலில் மேலுநற் சூரணமாக்கி
பாரிது கடைதன் சரக்கதும்
    பரங்கிப்பட்டையுந் தாணியுங் கடுக்காய்
பகரிலகிய தோரரத்தையுங் கோஷ்டம்
    பரங்கி சாம்பிராணி கொம்பரக்குந்
தேரவே மிளகு திப்பிலியேலஞ்
    சீரகஞ் சிறுநாகப் பூவுஞ்
செழுஞ் சுக்கு மதுரஞ் செவ்வியங்
    கார்கோல் சிங்கியுந் தாரமிதாண்டே. 86

தெளிவதா யிடித்துக் காற்பலவீதந்
    தினுசதை யனலிலும் வெதுப்பி
செங்கைதா னிடித்துச் சூணப்பதமாம்
    செண்பகப் பூவுங் கஸ்தூரி
பொளிய வுமமுர்த மதுரமாய்ச் சொரியும்
    பொதிகை நாயகனருள் கிருபை
பூரணப் பச்சைக்கற் பூரஞ்சவ்வாது
    புனுகு கோரோசனைக் குங்குமப்பூ
சுழிமுனைக் கமலமிடம் வலம்புரியுஞ்
    சூரணம் வகைக்குக் காற்பலமாய்
சூட்டியே பொடித்துப் பாண்டத் திற்சுத்த
    சித்தாமணக் கெண்ணெய்யு மிரண்டு
வளிபட மிகவுஞ் செவ்விளநீரு
    மாவின்பால் தேசிப்பால் பசுநெய்
வான்குமரியின் சோர்சலமும் வல்லாரை
    மணக்காளான் நெய்யுங் காற்படியே. 87

கனகரத்தின மாங்கோபுரந் தாங்கிக்
    கதிர்புனற் றண்டு நீர்க்காகம்
கருதும் வெள்ளறுகு சின்னிபொற்கையான்
    காற்படி ரசமதுங் கணக்காய்
தனம்பெரும் பாண்டமதனி லூட்டிடுமே
    சாத்திடுமெண்ணெய் நெய் பாலுஞ்
சாறுஞ் சூரணமுங் கரைத்துத்
    தன்னடுப்பில் சரக்குத் தூளதுவெனுந்தாக்கி
மனமெனும் வாளப் பருப்பது
    அரைத்து வகையொரு பலமதிலூட்டி
வாடை சேராமல் வன்னியிட்டெரிக்க
    வரும் பதம் நீரெலாஞ் சுவறுந்

தினமெனும் உத்திர நக்ஷத்திரம்நாளில்
செழுங்கதிர் காலையி லுதையம்!
தீபாக்கினி கடிகை சென்று பின்கமலத்
தீயெரித்திடு வதும் பதமே! 88

சிறுகொதி கொதித்துவருங் கடுகதுவுஞ்
செலுத்திடும் நீரெலாஞ் சுவறும்
தீத்தண லாற்றிப் பாண்டமுமிறக்கச்
செலுத்திடு வாடைதன் பொடியை
கருவி செந்தூரங் களஞ்சதுமூட்டிக்
கடிகை சென்றிறுத்திடுங் கலையம்
கடுகு வெவ்வேறாய்க் கட்டியேதிரளுங்
கடுகுதன் பெருமையா ரறிவார்
நெறி விளங்கதீதமு குருமுனியருளால்
நிகழ்த்தினே னிரூபமாய்த் தமிழில்
நிருபதமன்னை கமலபொற்பதத்தை
நெறிதவ றாமலும் யேற்றிப்
பெரும்பிறப் பகற்றும் நெற்பதுங்கேற்றிப்
பின்னுமண்டல மிருத் தெடுத்து
பெரியதோர் வினையும் பக்ஷத்திலேகும்
பின்னிட்டுப் போய்விடு மாண்டே 89

குஷ்டமும் பதினெட் டஷ்ட குன்மங்கள்
குடல்வலி மூலமெட்டகலும்
கொடியதோர் கிராணிகளுஞ் சுரஞ்சன்னி
கொடூர சாத்திய மறிந்தூட்ட
கஷ்டமு மணுகுஞ் சயமொடு காசம்
கண்வலி விழிகுரு டனைத்தும்
கால்கர முடக்கல் கடிவிஷந்தீருங்
கறடுகள் முறடுகளகலும்
திஷ்டியும் வீக்கந்தீபன மந்தமஜீரணம்
வாந்தி விக்கலும் போம்

தினமொரு கரண்டி கண்டுதுட் டிடைதான்
செலுத்திடீரிச் சாபத் தியமாம்
நஷ்டமுமில்லை காண் சிறுவரும்பாலை
நடத்து மிவ்வித மறிந்துணர
நரகம்போம் சொர்க்கம் நாள்வரையிலுமே
நல்வினைப் பிறவி காணாண்டே. 90

வனந்தனிலுவர் பூப்பூக்கும் பின்
மதிரவி முகம்படக் காய்காய்க்கும் கண்
இனமறிந்திடீர் பூநீர் மேலதில்
இடிவிழு மின்னற் கொழித்துமேமதை
தினஞ்சொரிந்திடுபுன லுரவாருதி னிற்றான்
திறமாகவே பாய்ந்துடன் சுவறிடும் பார்
தினந்தெரிந்திடு மாசி பௌர்ணமிகண்
தினமாய் நிலைபிரி யாமலெடுத்திடு-தவறாமல். 91

அகில புவனமதி லடையாளம் பார்
அஞ்சு நிலத்திலொரு நிலமாம்அண்ட
பகிரண்ட மீரேழு பதினாலும் பார்
பரீக்ஷைசெய்து சோதித்திடலும் திசை
மகிதலமலைகடல் நேர் மேற்குப்பின்
வடதிசை தென்றிசை நடுப்போக்குயிச்
ஜெக மிவைதனிலும்பார் ராயபுரிமிகச்
சிறந்தது தர்மாபுரி நிலம் பாலை-வனமாமே! 92

புஞ்ச நிலத்திலும் பூப்பூக்கும் கொக்கு
பறவை களிருப்பது போற்றெரியும் இவ்
வஞ்சிலும் வேளூர்ப்பூ துய்யநிறம் அது
வைடூரியம் போற் பூவிருக்கும்எடு
நஞ்சிவை யானும் பெண்ணது வாம் ரெண்டு
நாதவிந்திவை பிள்ளையதாம் மிகக்
கொஞ்சிடு வாரிரு கூறு மொன்றேநற்
குடிவாழ் நிலமறிந் தெடு தினமேஇது-நலமாமே! 93

எண்ணூறிவை மொழியெடுத்துரைத் தேன் நா(ன்)
இவை நூற்றெட்டும் விரித்துரைத்தேன்பார்
ஒன்றும் பசுவுமொரு துறையில் கட்டிக்
கருவுங் குருவுங் கைகொடுத் தேனிந்த
மண்ணும் விண்ணு மறிந்தெடுத்துக் கொண்டு
வடிவாய் செய்வாய் தீட்சை தனையதை
எண்ணுமிரண்டு மொன்றாய் முடித்தார்பின்
ஏழு கோடியுகம் வரை யிருப்பாயே-இது சரியாமே 94

இந்தவிதம் நிலமறிந்து யெடுப்பாரில்லை
இனமறிந்து கல்லெடுத்துச் சுடுவாரில்லை
நிந்தனையென் பேறில் குற்றஞ் சொல்லுவார்கள்
நினைத்தபடி முடியுமோ நீவிப்பாரு
மைந்தனே யேலேல சிங்காகேளு
மற்றவருக் குரைப்பதில்லை யுனக்குச் சொன்னேன்
சுந்தரமே கல்லில்வரு மமுரி தன்னால்
சுத்தி தச தீக்ஷையினால் சுண்ண மாச்சே. 95

கல்லுப்புச் சுண்ணம்

சுண்ணமிவை மித்துரு சத்துருவே யாகுந்
தொட்ட சரக்கறுபத்து நாலும் நீறும்
முன்னமொழிந் துரைத்துவிட்டேன் கிளிக்குச் சொன்ன
மொழிபோலே வெளியாகச் சொல்லிவிட்டேன்
என்மொழியிற் பிழையிருந்தால் இந்தனூலை
எரித்துமே போட்டுவிடு இல்லாவிட்டால்
மன்னவனே யண்டமிடிந் தனேகஞ் சுக்கல்
மரணமெய்துந் தலைதெரித்து மடிவார் தாமே! 96

அகிலபுவனங்களதில் அலைந்தா லென்ன
அண்ட கண்டஞ் சுற்றியுமே திரிந்தாலென்ன
மகிதல மென்றறிந்து கற்பங் கொண்டாலென்ன
வளர் பிறையுந் தேய்பிறையு மறிந்தாலென்ன

சுகிதமொடு அறுசுவையை யகற்றி லென்ன
சுத்த வைக்கிறிகையிலுந் தெளிந்தாலென்ன
முகிவுமுடி வைந்தாண்டு நிருவியுண்டால்
முறிந்து யெண்ணெய் சுக்கிடு முதகமாமே! 97

எண்ணைகக்கிவிடு மன்னமுண்டு
வருவேவிதிப்பதுவர் தள்ளிடும்
உண்ண வுண்ணக்கடு காரமேறுங்கரி
உப்பகற்றிவிட நலமதாம்
மண்ணெடுத்தவறு சுவையகற்றிவிடும்
அமுதுபச்சரிசி யாதலால்
விண்ணுமண்ணுஞ் சிவக்கியான மேதவிர
விருவிநீர முதிற் கொண்டிடு
புண்ணதாகும் புவிநீரகற்றிவிடு
போங்காய் கரிமீன் மாங்கிஷம்
பெண்மயற் புகைநீர் வஸ்துடனபினி
பேணியாவதுகஞ் சாவிடு
கண்ணதாகு நதி நீர் ஜலமொழியக்
கருதொணாது வினைவன மெலாங்
கண்குடத்து ஜலநீரைவிட்டு மறு
காகினிச் ஜெலந் தள்ளிடே! 98

ஐயமீறியன லால்சுடர்க் கனலும்
அங்குமாதிதமும் வீசிடல்
அக்கினியதீத தாபகோஷம்
அணுகிணுந்துய்ய வாவின் பால்
செய்திடும் மிளகு சீரகங்கரிய
வேம்புடன் புளியாறை தான்
சிறுபயறுடன் தேனுங் கூட்டிடுதல்
சீதளம் வருதலுடல் தனில்
பையரத்தை வேர்க் கொம்புடன்
புரசை பதுமல ரமுரிநீரினில்

பத்துக் கொன்றுகுரு நீரருந்திவிட
பறக்குமேசுரஞ் சீதளம்
கொய்யும் வாய்வுகுடி கொண்டு
கொந்திவிட கூறும் சுக்குசிறு கீரைவேர்
குடிநீர் தன்னமுரி பத்துக் கொன்று
கனல் குறுகவுஞ்சுரசங் கொண்டிடே! 99

இந்த விதமிருந்து யெண்ணெய்கக்குஞ் சுத்தஜலம்
அந்த ஜலத்திலுவ ரைந்துபலம்-இந்த ஜலம்
வாரி நீர் நாழிவை டூரியக்கல் லொன்று பலம்
தேரிவிடுந் தீக்ஷை பத்துஞ் செய்யே! 100

முத்து சிப்பி தசதீக்ஷை

செய்கை முத்துச் சிப்பி தேத்துந் தசதீக்ஷை புனல்
ஐயமிலாச் சுத்தசல மந்தவுவர்-செய்கைவிதஞ்
சட்டிதனிலிட்டு மறு சட்டிசிறு சாய்க்கவிய
அட்டியிலாக் கோழிபுட மாண்டே! 101

வாச்சுதிவை சுண்ணம் மடக்கு சிறுசாயிரண்டு
ஏச்சு திவைமடக்கி விச்சுண்ணம்-வாச்சுதெடு
பேர்பாதி யிட்டுப் பின்னும் வைடூரியக்கல்
ஆரறிவரோ அறியா ராண்டே! 102

வைத்திடு மேற் பாதிவை டூரியத்தை மூடிவலு
சுத்திடுமண் சிலைதிரி சூட்டிடுவாய்-வைத்துவிடு
குக்குடமாம் பத்தெருவாங் குமுரிடுமே சுண்ணமதுஞ்
சேரக் குஞ்சரக் காகிடுமாஞ் சுண்ணம்! 103

சரக்கு பலமொன்று சற்குருவுமே களஞ்சு
அரக்குஉமிழ் நீர்தன்னா லதைக்குழைத்து-சரக்கதுமேல்
கவசமது புகட்டிக் கதிர்முகங் காட்டி
அவிழ்த்த மென்னுந் தழை கொண்டாட்டே! 104

ஆட்டினதின் மேலு மசக்கிதிரி சீலையுணர்
வாட்டிவிடும் பத்தெருவில்வாலையாம்-ஆட்டிவிடு
எந்தயிலை யெந்தசரக் கிவ்விதமாய்ச் செய்கைபடி
அந்தயிலை யென்றுறையு மாண்டே! 105

நவரத்தின மணி நன்னூற் சுருக்காமாஞ்
சிவமெய்ஞ் ஞான சிந்தாமணி சூத்திரம்
மவுனபீட மாணாக்கன் மகிழ்ந்திடும்
கெவுன யோகக் கிரிகையு மாய்ந்துணர்
விவேக மாமொழி வேதம் விளங்கிடில்
சுவர்கள் கோடி கண்டெடுத் துணர்வரோ
தவமே லாறு வாதாரமீ ராறுயிர்
கவுனங் கொண்டுணர் காக்ஷியடைவரே! 106

இன்னூல் சாஸ்திர மெண்ணூற் கருக்கிடை
சொன்னோஞ் சொச்சநூல் சூஸ்திரமாதலால்
பண்ணு மாமறைப் பாடல் மூவைந்துநூற்
வண்ணச் சித்து வைத்திய வாதமும்
நன்னூ லாய்ந்து நற்பொரு ளருளதும்
மண்ணுள் ளவரை வாழிமென் மேலதாய்
அன்னை யம்பிகை யாண்டே யருள் பதம்
முன்னமே பூசி முற்றும் இரத்தினமே! 107

முத்தி யடைய மூவைந்து நாளும்
சித்தியடையச் சிறந்த தெண்ணூறும்
சுத்தி யறியச் சுருக்கம் நூறாகும்
சத்தி யைத் தெரியச் சமைந்த தைநூறும்
சுத்தி யாம் போலே கற்பமுந் நூறும்
சூத்திர மாகக் குரு நூலைம்பதும்
பத்தித் தெரியப் பதினாறு முப்பதும்
நத்தியே பத்தும் நாதாந்தம் நூறுமே! 108

நவரத்தினமென்பது மொன்றுடன்
கோர்வைநூல் நவகண்ட புவனமவைசூழ்
நகரிலகு மகிதல மீரேழு புகழதிவிர
ஞானமு வைந்து நூறில்
சிவகுரு மெய்ஞ்ஞான வகத்தீச ரருளாலுந்
திருவள்ளு வனெனும் பேரதால்
திகிரிகட லகிலமிவை முனிரிஷி தபோதனர்கள்
சித்தர் பதி னெண்மர் மகிழுங்
தவமறைநன் னூல்விசித ரத்தின சிந்தாமணி
சாஸ்திர மெண்ணூற்றி யாறுஞ்
சரிதையில் விளங்குமதி யமுதமழை பொழியவுஞ்
சதாகோடி யுகம் வரையும் வாழ்
கவுனமணி சொச்சமொரு நூறுமிவை யெட்டுகவி
கைவல்ய பாட லுரையுங்
கனகமணி நாதாந்த நூறுபரி பூரணங்
கண்டறி கடாக்ஷ முற்றே! 109

ஓம்-தத்-ஸத் !

இது எனது (Dr.R.கோவிந்தராஜன் என்ற என்னுடைய) சுவடி எண் 501ல் இருந்து பிழையற எடுத்து எழுதப்பட்டுள்ளது!

திருவள்ளுவ நாயனார் சூத்திரம் 108

முற்றும்

உ

சிவமயம்

திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த

பஞ்ச ரத்தினம்–500

காப்பு

மஞ்சு தவழ்மலை மாநில மீதினில்
பஞ்ச ரத்தினம் பனுவல் புகலவே
அஞ்ச லெனத் திருவருளை யுதவிடும்
வஞ்சி வாலாம்பிகை மாதைப் பணிகுவாம். 1

நாதாந்தசோதி நாநிலத்தில் நவிலுதற்குப்
போதாந்த வேசமது புந்திதனிற் பூரித்தாங்கே
வேதாந்த விந்துவுடன் வித்தைபெறக் கூடிநின்று
பாதார விந்தத்தில் பணிபுரியும் பரங்காப்பே. 2

நூல்

ஞான வெட்டி நவிலாயிரத் தைந்நூறும்
ஆனநவ ரத்தினமும் அறிவரோ-தானுமிது
பஞ்ச ரத்தினத்தில் பகர்ந்திடவே சூட் சுமங்கள்
நெஞ் சறிவிப் பதுவும் நேர். 3

வேறு

ஓடி ஓடி உலகங்கள் சுற்றிய
பேடி கட்காகுமோ பேசரும் சித்தியும்
வாடி வாடி வருந்தினால் வாய்க்குமோ
தேடி நின்ற திருவிளக் காடலே. 4

வேறு

செம்பொன் இருபதமலரில் திகழ்பெறவே ஒளிசெய்ஞான
அம்பிகையின் அருளுற்றார் அடைவார்கள்
அநந்தயோகம்
இன்பமுடன் இந்நூலை இகழ்ந்தார்க்குக் கிட்டாதென்றே
நம்பினர்க் காதாரமாக நான்நவின்று விட்டேனே. 5

வேறு

விந்துவிட்டால் நாதமது கிட்டாதென்றே
வேறுபல விதமாகச் சொன்னார்சித்தர்
சிந்தைதனில் கற்பம் உண்ணக் கலங்குகின்றார்
தெளிவாகக் கூறாத குற்றத்தாலே
நொந்துகெட்டார் ஞாலமதில் மாந்தர்கோடி
நுட்பமது இன்னதென்று அறியவில்லை
சிந்தைதனில் பெண்மயக்கம் கொண்டாலன்றே
சிதறிப்போம் காயமுடன் யோகசித்தி. 6

யோகசித்தி யாவதற்கு உலகத்துள்ளே
உத்தமனாய் இருப்பார்க்கு அருளுண்டாகும்
யோகமுடன் மெய்ந்நாறும் யோனிக்குள்ளே
மூழ்கினவர்க் காவதுதான் நரகமாகும்
வாகுடனே காயமது இருக்கவென்றால்
வகையாகக் கற்பமதை உண்ணவேண்டும்
வேகமுடன் வாலையவள் அருளும்வேண்டும்
வீணான உலகமதை மறக்கவேண்டும். 7

வேண்டுமென்ற உலகமதை மறந்துமேதான்
மெய்யான சற்குருவை நாடிநின்று
தூண்டுகின்ற சிந்தைதனை உள்ளடக்கித்
தொடுகுறியில் சூக்ஷுமத்தைக் கண்டறிந்து

தாண்டுகின்ற அகங்காரந் தன்னைக்கடந்து
    தற்பரமாம் சுழுத்திதன்னில் சுகித்திருக்க
ஆண்டுமினி ஏதுபிழை அறிந்தோர்க்கு
    ஆகாசகற்பமது தானே எய்தும் 8

எய்துவதற் கானதொரு மார்க்கந்தன்னை
    இழிவெனவே நினைப்பார்க்குக் கற்பமில்லை
வைதவற்கு வகையதுவும் கிட்டாதென்று
    வழங்கினார் ஞானப்பால் உண்டவர்க்குக்
கைதவமாய்க் கிடைக்குமருள் கடாக்ஷத்தாலே
    கண்மூடி மெய்ஞ்ஞானந் தன்னுள்ளே
செய்தவமாய் செய்பவர்க்குக் கற்பமுண்டு
    சிலைபோல அசைவற்றால் சித்தியாமே. 9

சித்தியென்றால் வாசியது நிலைக்கவேண்டும்
    சிகாரத்திற் கும்பித்து நிலைக்கவேண்டும்
பத்தியுடன் இருகலையு மாறவேண்டும்
    பந்தடித்த தனைப்போலப் பார்க்கவேண்டும்
சத்தியவள் வீடுதனைக் காணவேண்டும்
    சரியான சுழிமுனையை அறியவேண்டும்
நித்தியமும் அதன்வழி செல்லவேண்டும்
    நீடித்து நிரந்தரமாய் நிற்கத்தானே. 10

தானாக முளைத்ததொரு சோதிகாணத்
    தட்டாத முக்கோண வீட்டுக்குள்ளே
மானாகக்குதித்தோட வழியைக் கண்டால்
    மதிரவியும்,அதற்குள்ளே ஒடுங்கிப்போகும்
ஊனான காயமதை உறுதியாக்கி
    உற்றதொரு இருமூன்று தலமுந்தாண்டித்
தேனான கற்பமதை உண்டுநாளுந்
    தெளிவுற்றால் இல்லையினிப் பிறப்பிறப்பே. 11

வேறு

பிறப்பிறப்பற்றுப் பிர்மானந்த போகத்தில்
பேர்பெற்று இருக்க மகாமூலி
நிறப்பழுதற்ற மயமாய் மலைமேல்ஓங்கி
நிச்சயமாய் நிலைத்திருக்கும் உண்மையாகத்
துறப்பதற்கும் உற்றதுணை தன்னைக்கண்டு
தொடர்ந்துசென்றால் தூரமில்லை துணிவுற்றார்க்கு
இறப்பதற்கு இன்பமுடனிருக்க வென்றால்
இனிதான ஏகவஸ்து அறிவாய்நீயே. 12

வேறு

அறிவிற்கிடந்து ததும்பி வழிந்து
அந்தரத் தோங்கி அடர்ந்துபடர்ந்து
நெறியிற் செறிந்த நிலையாளர்கட்கு
நிதியதுவாகும் நெடுமுடி ஜோதி
குறியிற்கண்டு குணம்விட்டுக் கும்பித்துக்
கொடுவரையுச்சிப் பச்சை மரத்தின்
பொறியிற்கிடக்கும் புதையலைக் கண்டார்
போக்கில்லைகாயம் நிலைத்தலு மாகுமே! 13

வெண்பா

குன்றத்தில் ஏறியுங் கூத்ததனைக் கண்டாலும்
குன்றத்தில் இல்லைக் கூறியதே-மன்றத்தில்
ஓடிட்டிருக்கும் வெள்ளை ஒள்விரை மலர்தோற்றும்
காடிட்டிருக்கும் அதைக் காண்! 14

ஒட்டத் திருக்கும் ஒண்முடியைக் காணார்க்கு
ஒட்டிப்பறிக்க இயலாதே-பொட்டல்
நிலத்திலே பூத்திருக்கும் நிலைமைதனை யாரறிவார்
தலத்து நீரதுபோலே தான். 15

நற்கடுக்காய் வன்னிநிறம் நானிலத்தில் தானெடுத்துப்
பற்கடுக்காய்த் தானுண்டாற் பாலிக்கும்-சொற்கடுக்காய்
தோற்றாது போகிக்குத் தூயவர்க்கே கைகூடும்
மாற்றான் மாமூலி மருந்து. 16

அரிதரிது கற்பத்திற்கு ஆதிகரு நெல்லி
துரிதமுடன் அதனைத் தூசகற்றி-இருமுறையாய்
தானுண்டால் ஆறுதலம் தானாகத் தோற்றுவிக்கும்
வானுண்டால் மழை உண்டுமா. 17

கோலத்திற் காயத்தைக்கொண்டிருந்த வல்லார்கள்
மூலப்புளியருந்த முந்திடுவார்-ஞாலத்தில்
அன்னையவள் காரத்தடி மடியில் தான்வளரும்
சொர்ணமதைக் கண்டார் சுகம். 18

வேறு

காரம்கண்டார்க்குக் கனகமும் சித்திக்கும்
சாரம்கண்டார்க்குச் சண்டனு மிங்கில்லை
காரமொடுசாரம் கைவிட்டால் உலகத்தில்
சீரதுகெட்டுத் திசை மாறிப் போவாரே. 19

இடைகலை பின்கலை இருக்கும் சுழிமுனை
நடுகலை என்றிடும் நாதவிந் ததிகாரம்
தொடுகலை பனிரெண்டின் தொகைநாலு
குறைந்திட்டால்
முடுகிடும் காரம்சாரம் மொழிந்தேனே. 20

ஆடும் சரக்குகள் ஆறொரு பத்துநான்கும்
ஓடும் காரசாரக் குருவதனைக் கண்டார்க்கு
நாடும் யோகமும் நானிலத் தினுடல்சித்தி
ஓடுமி தன்பெருமை யோகிகள் தங்கட்கே. 21

வேறு

அண்டமென்றும் அவனியிலே பலர்
அங்குமிங்கு மலைந்து தயங்கினார்
பிண்டமென்றும் உயிர்தனைக் கொன்றுதாம்
பேதையாகி நரகத்தி லழுந்தினார்
துண்டமிட்டுத் துலைக்குந் தரும்பொருள்
சொல்லரிய பேரண்டமு மாகுமோ
கண்ட கண்டபடி வெளிகாண்கிலார்
கருத்தறிந்து கலப்பர்கள் ஞானியே 22

ஆதியான என்னன்னையின் அண்டத்தில்
ஆனவைம்பத் தோரக்ஷரத் தோடுசேர்
சோதியான சுருதி முடியது
சொல்வொண்ணாத சுத்தச் சுடரொளி
சாதிமதமொடு சமயத்திற் சண்டைசெய்
தன்மையர் கட்கது தானதுகிட்டுமோ
ஓதி நூல்களின் நுட்பந் தான் அறிவரோ
உண்மையிலண்ட முனக்குள்ளு மாகுமே. 23

நாதமென்பதும் அண்டம தென்றுமே
நானிலந்தனில் ஆருறை செப்பினார்
பேதம்பேதமென் றேயுணர் பேதைகள்
பேசுவதற் கெளிதாகுமோ அண்டமும்
போதமதுதரு மென்னப் புகன்றவர்
புத்தியிற்சென்று புலப்படு மாதலால்
வேதமறைமுடி அண்டமும் நாதமே
மேலுமிகமதி பிண்டமும் விந்துவே. 24

வேறு

அகிலத்தில் அண்டபிண்டம் அதுவாகும் நாதவிந்து
சகலத்தி னுக்குமது தான்ஆதி-புகலும்
அண்டபிண்ட நாதவிந்து ஆகுங் காரசாரம்
கண்ட வர்களே யோகிகள். 25

வேறு

உப்பைவிட்டு உலகத்து வாதிகள்
ஓடிநூல்தனைப் பொய்யென் றிகழ்வர்கள்
அப்பை உப்பதில்விட்டு அகற்றுவார்
ஆசையென்னும் பொய்க்கைப்பும் விலகிடக்
கைப்பைஒட்டிக் கவின்பெறச் செய்ததால்
கண்டுகொண்டார் கனகமாம் வேதைதான்
சொற்படிப்பின் தொகுத்திட்ட நூன்மறை
தோற்றுமோ அப்பும் உப்பும் அறிந்திடே. 26

சிவயோகமுத்தி சித்திக்கச் செய்தார்
பதினெண் சித்தர்கள் முப்புவின்பாகம்
பவபோகமது கண்டால் பலிக்காது
பாழாகும் ஞானமுடல் அழிந்துபோகும்
தவயோக முற்று ரவிமதிசுழிமுனை
தன்னை நாடோறும் உணர்ந்து
விவகார மற்றஞானிக்கு வாய்க்கும்
வீணருக் காகா தாண்டே. 27

வெட்டிஞானம் ஆயிரத் தைந்நூறில்
விரித்துமே உரைத்திட்டதோர் கல்லுப்பு
கட்டியாகவே காணும் கடற்குள்ளே
கதிரவன் தன்கருணை விதத்தினால்

கெட்டியான கல்லுப்பது கட்டினால்
　　கேவலம்இனி இல்லைஇப் பூவினில்
அட்டியேதினி முப்பு முடிந்திடும்
　　அம்மைவாலை அருளினால் ஆண்டையே. 28

வேறு

மங்கையர் மகுடமன்னர் மதித்திடு மந்தமுத்தும்
பொங்கிடுஞ் சிப்பியாக அசுரநீர் நடுவேஆழி
முங்கியே எடுக்கும்போது முத்தினும் ஜோதி யென்னக்
கங்கையிற் கிட்டும்கிட்டும் அதீதகல்லுப்பிதாண்டே 29

வேறு

பஞ்ச ரத்தினத்தில் பகர்ந்திட்ட சூட்சுமம்
சஞ்சல மகற்றிடும் தனிவழி காட்டிடும்
கஞ்சனில்லை வேதை கல்லுப்பு அறிந்த வர்க்குப்
பஞ்சுபோல் நவலோகம்நீறும் பார்தனில் குறியிதே. 30

வேறு

மூலமாம் அமுரியுப் பதுரெண்டு
　　முடித்திடுவார் முப்புச் சுண்ணமும்
ஆலகால விஷம் போலவே
　　அறுபத்து நான்கையும் நீற்றிடும்
வாலைமாது நாத தீக்ஷையால்
　　மாசுநீங்கிப் பரம மாகிடும்
கோலமாங் குருகடாக்ஷமும் பெறக்
　　கூடிடும் இந்தச் சுன்னமே. 31

வேறு

செகமெங்கும் சீவசெந்துகட் காதாரம்
உகமெங்குங் கறியுப்பென்று அறிகிலார்
இகமெங்கும் ஏரிவாரியிலு முண்டு
சுகந்தரும் சொரூப மீதாண்டையே. 32

வேறு

பானமென்றும் அமுரியென்றும் பாரில்சித்தர் செப்பிய
ஞானமா மதுவுமென்ற நாட்டமும் நற்காடியே
ஊனமான உடலைநீட்ட உபாயமான மாதநீர்
பானையிற் கிடந்துசீறிப் படிந்திருக்கு மாண்டையே. 33

வேறு

புத்திமானறிவன் பூநீரின்உப்பு
பூதலத்திலா றறிவார்கடான்
சித்திமுத்தி வைராக்கியம்
சேர்ந்திடில் உடன்கிட்டிடும்
சத்தியுமை சடலத்திதழ்தனில்
சதுர்க்கோண வட்டமாகவே
வித்தியாச மறவேகிடைக்குமது
விண்டிட்டேனது தெரிந்திடே 34

விந்தமுரி வேகமேயறிந்து
செயவேணும் குருபலனதுவே
இந்திரனுப்ப திதுவெனவே
இகத்திலே இனியறிவாரார்
சுந்திரச் சொரூபஉப்பது
தோற்றுமே சிவயோகிக்கே
இந்தஉப்பி னாலும்முப்பது
இகத்திலேசித்தி ஆண்டையே. 35

வேறு

துதிபெருகும் புவிதனிலே சுகா தீதமான
கதிபெறவும் கனிவுடனே பாரைஉப்புக்காண்பரோ
மதிநீரினடி தனிலே வதிந்துறையும் உப்பு
அதிசயமீ தாரறிவார் அகத்திய னருளாலே. 36

வாயுவுடன் வன்னிகூடி வையகத்து நீரில்
தாயும்தந்தை யாகச்சேர்ந்த வாறுபோற் சனிக்கும்
ஆயும்போது பாரையுப்பு ஆனதித னாலே
மாயுமேசரக்கு எல்லாம் மகிதலத்தி னுப்பே. 37

வேறு

சித்தராலும் காண்கிலாத
தேவவுப்பு உவர்சத்திதன்
வித்துங்கூடிச் சாரையுப்பு
மேவினா லிரண்டாச்சுது
சுத்தநீர் சலக்காடியால்
தூய்மையாமது சுண்ணமே
இத்தரையி லிந்நூலைப்போல்
யாருரை செய்வாராண்டே. 38

தீட்சைநீர்தனை யாரறிவார்காண்
தீம்புனலது சாகரக்
காட்சிநீ ரதுகோடியே இதைக்
கண்டயாவரும் விண்டிலார்
ஆட்சியாகவே மறைத்தாரிந்த
அம்புவியில் அநேகர்கள்
தாட்சியாகக் கைவிட்டனர்
தன்மையாக இந்நூல்முறை. 39

மாதுநாத மெனச்சிறந்தது
மங்கை மார்தினம்கூடியே
நீதியாகவே கூட்டுவாரிது
நேர்மைகண்டு உணர்வாரிலை
சேதியேதெரியாத தாலிதில்
தேர்ந்தவர்புவி மீதிலை
ஆதியாம்நம தன்னையாள்
அண்டநீர தறிந்திடே. 40

வாசிபோலவும் உன்னுள்ளே
    இடை பின்கலையென வாய்மையா
ஊசிநீரது ஒடுமேயினி
    உய்த்துணர்ந்திடு வீட்டிலே
கூசிடாமலே தினம்தினம்
    கொண்டு உண்டிடக்காயமே
நாசமாயழியாது நாதநீர்
    நவிலுறும் சுத்தக் கெங்கையே. 41

சுத்தகெங்கை மாதுநாதம்
    சுயம்ப்ரகாச சோதிரூபம்
சித்தியாகித் தெளிந்ததாமிது
    தீட்சைநீரென்று உரைப்பார்கள் தாம்
சத்தி வாலையென் அன்னையாள்
    சடமுன்கரு வானதால்
சுத்திபுத்தியுந் தொடத்தகும்
    தோஷமில்லை கேளாண்டையே. 42

மறைத்தது சுத்தகெங்கை தீட்சைநீர்
    மாதுநாதமமுரி கள்ளுதான்
நிறைத்தது கருங்குருவை கொண்டுமது
    நெல்லினுமி நீக்கியே
கறைத்துநற்பருவ வன்னியிட்டுமே
    காய்ச்சியே விடுசோடசம்
இறைத்த காடியது ஏகமே
    சிவநீரென்றும் குருஓதினார். 43

அச்சலநீர் சுத்தசல மெனப்புகல்வார் அறிவினால்
மெச்சுமென்குருவகத்தியர் சொன்னமேன்மையால்
இச்சையாகவே தீட்சை செய்துமே இயற்றினேன்
அச்சமேது மில்லாமலே ஆனமுப் பூவின் சுண்ணமே. 44

கும்பமுனி அருளினால் கூறினேன் ஞானவெட்டி
அம்புவியிலுள்ளோர்க்காய்அறைந்தேன் எண்ணூர்சுருக்கி
நம்பினபேருக்காக நவின்ற பஞ்சரத்தின நூல்
வம்பில்லை பிசகுமில்லை வழியது சுருக்கமாண்டே. 45

வேறு

காடிவிட்டுக் கடைச் சரக்குகளை
நாடிவிட்டுப் புடமிட நன்மையாம்
கூடிக்கெட்டுக் குடிகெடும் வாதிகள்
வாடி நட்டமிட்டு நலிவார்களே. 46

ஆறுதிங்கள் அறுசுவைக் காடிதான்
நீறிடும்நவலோகத்தை நீற்றிடும்
வீறுயர்பெறும் மேனி பொன்னாகிடும்
கூறுகெட்டவர் கொண்டிடார் உண்மையே. 47

வெண்பா

கங்குல் விடியாமே கதிபெறவும் காத்திருந்து
பொங்கியதைத் தானெடுப்பார் பூதலத்தில்-தங்குமது
மாசியிலும்சித்திரையிலும் மன்னுபங்குனிதனிலும்
மாசறு பூநீரை மதித்து. 48

உவற்சாரம் என்றே ஓதிவரும் பூநீரை
எவர்க்காயும்தோற்றாது இவ்வுலகில்-சவர்க்காரம்
கண்டாரேகண்டார் கலிவிலக வண்ணாரே
அண்டாருக் காகா தது. 49

வேறு

ஆதிப் பூநீரும் அத்துடன் கல்லுப்பும்
பாதிப் பாரைப் பனியுப்பும் சுத்தநீர்
வேதிப் பாருக்கு மேதினியி லிம்மூன்றும்
பாதிக் காதநற் பாதைகா ணாண்டையே 50

வேறு

சோமன் விந்துநீர் பூமிநாத மெனச்
சொல்லிய புவி சுண்ணநீர்
தாமலைந்து தவியா விதந் தனக்குத்
தன்மையான நிறம் வெண்மையே
கோமகன் தொழுமகத் தீசன்வர்க்கமெனில்
குடிசை கட்டியு மெடுத்திடும்
க்ஷேம மாகுமினித் தீமை ஓடிவிடும்
தீட்சை யாகவு மிதித்திடே. 51

செகமாய்கை யது தீர்ந்திடா விடிலே
செய்வதேது நல் யோகமும்
வெகுமாய்கை மனம் யோனியாசை தனில்
வெம்பியே கீழிழுத்திடும்
சுகமாகமனம் அலையாதிருக்கச்
சொல்லினார் பதினெண் சித்தர்தாம்
அகமாய்கை தனை நீந்தினால் வரும்
ஆத்ம ஞானம் பூநீரதே. 52

வெள்ளையான நில உப்பிதற்குநிகர்
வேறுஏது இது மேதினிக்
கள்ளமே அகலக் காட்டினார் சுத்தக்
காட்சியாகவே மதியினால்
துள்ளுமப்புவியில் தோன்றியே யெழும்பும்
தூய்மையான தோர் உப்பதைச்
சள்ளையே யறவும் கைப்பு நீக்கியே
சந்திப் பார்களா மாண்டையே. 53

சித்தமொடு புத்தி யகங்காரம் போமே
சிற்றறி விலாது மனந்தன்னை நோக்கி
இத்தரையில் உய்த்த இடர்களுக்காக
இசைந்திடாமலும் அசையா மலுமே

முத்திமோன வைராக்யந் தன்னிலே
முச்சுடர்க் குறி வைத்துமே
நத்தியே யிருந்தானுடன் வரும்
நாயன் சொல் திருவருளுமே. 54

இச்சை யென்ன இகபர மிரண்டிலும்
இதமாய் மனதை வைத்தால்
உச்சிதமான உலக ஆசையது
உற்பவமா இருக்கையினால்
அச்சமேது இரண்டுமற்ற
ஆனந்தம் பரிபூரணமே
பக்ஷமேவிப் பதிந்திருந்தால் வரும்
பாக்கியமீ தாண்டையே. 55

சந்திர புஷ்கரணி தீர்த்தமும்
சலியாத பானமமுரி கள்ளுதான்
சுந்திர மாகவும் பிண்டத்தில்
தோன்றுமே கண்டத் தானமே
சிந்தையாலறி சிவராஜ யோகமாம்
சித்திவிலாச நற் சாதனை
புந்தியோடு புரிந்ததால் சுத்தப்
புனித னாகவும் வாழலாம். 56

வேறு

முப்பு முப்பென்று முன்னமே செப்பிய
வைப்பு இப்புவிமீ தறிவார்களோ
அப்பு முப்புவும் ஒன்றென் றுணர்வரேல்
கைப்பு முப்புக் கசடற முப்புவே. 57

கண்டு கொண்டு களர் நிலமீதினில்
பண்டு நின்றபடி யந்தத் தாயினை
மொண்டு வந்து முழுவதும் காய்ச்சினால்
விண்ட உப்பும் வெடியுப்பு மானதே. 58

வேறு

வெடிஉப்போடு விகசித வானைக்கல்
பொடிசெய்தே தினம் போட்டிடு மூசிநீர்
வடிவதாகவே வன்னியை மூட்டுமே
படியதாகநீ காய்ச்சிப் பணிந்திடே 59

ஊசிநீர் என்றும் ஓதிடும் சுத்தநீர்
காசினிதனில் காடியென்றே தினம்
யோசியாமலேழ் உலகங்கள் சுற்றினால்
கூசிடாது குடிகெடு வார்களே. 60

உப்பு வென்றதை உதரிநீர் விட்டிடில்
தப்புமோ சடலந் தரியாதுகாண்
செப்புமார்க்கந் தெளிவுறத் தேர்கிலார்
இப்புவிப்புரி வாளடியி னியக்கத்தால். 61

வேறு

போற்றும் புவிநாதம் பொங்கும் கடலுப்பும்
ஊற்றுநீர் பாறையுப்பும் உட்கூட்டித் தேற்றமாய்
கைப்பாகந்தானறிந்து காரணத்தாற் செய்தக்கால்
மெய்ப் பாக முப்பாகுமே. 62

வேறு

இடைகலை பின்கலை எதிர்சுழி முனைதனில்
தொடுகலை நெறிதனைச் சொற்குரு வருளினால்
படுகலை யிதன்பயன் பாக்கிய சாலிகள்
திடகலை யெனத்தினந் தேர்ந்து மிருப்பரே. 63

வேறு

முப்புச்சுண்ணம் முடித்தார்க்கு
ஆயுசு முடிவுமில்லை
இப்புவிப் பாசமில்லை
இகலோக சாதக மிதுவுமாகத்
தப்பிடாது தனியாஞ் சொரூப
சுயஞ்சோதி யிதுகண்டார்
செப்பிடார்கள் யோகபாகமும்
செய்பாகமு மாண்டையே. 64

வேறு

குருமுனி யருளினால் கொண்டே னான்
முப்புவும் கொடுமை நீங்கத்
திருமுனி சொன்ன மார்க்கம்
திகைப்பில்லை திசைஎட்டும் காட்டிடும்
கருவினியேது முப்புவின் கைவல்ய
மநுபோகம் விட்டால்
கருமமோடுமே கருணாகர ஞான
காரணன் கிருபையே. 65

வேறு

பொழியுமே ரவிமதி பூதலந்தனிற் புணர்ந்தநீரால்
அழியுமோ சடலம் அதையறிந்து தினமுண்டால்
பழியுமேது படர்பவமோடிக் கடல் புக்கிடும்பாரிது
இழிவினோர்கட்கிது கைகூடாது எண்ணூறைந்நூறே. 66

எண்ணூறைந்நூறு முலகதனின் யோகிக்கே எய்தும்
பொய்ந்நூல் என்று தள்ளினால் சாவுவரும் உண்மையே
முன்னூலாமென்னூல் மூவைந்நூறும் முழுதறிந்தார்க்குப்
பின்னூலா மின்னூல் பிசகில்லை தப்பாதாண்டே 67

கதிரொளியால் ஆனதொரு விந்துநாதம்காரமீறிப்
பதிதனிலே மதிவிந்துவுடன் கூடிப்பிள்ளையாக
உதித்திடும் அதின்சூட்சமம் உய்த்துணர்ந்தால்
விதியேது வினையேது மெய்ஞ்ஞானி தானாண்டே. 68
சுக்கிலஞ் சுரோணிதமென்று சுருதிகளரைந்திடும்
கக்கிடும் எண்ணெய் கழட்டறியாப்பதர்க ளொன்றுகூடி
மக்கிடும் மங்கையர் ஊன்தேடி மதியழிந்து போனார்
எக்கலிட்ட நதிபோல் இவர்வாழ்வு இற்றதினாலாண்டே.
69

இப்படியாகவும் கண்டவர் இகமதிலே வெகு வாயில்லை
சொற்படிகேட்டுசுட்டுச் சுட்டுச் சுருதியை இகழ்ந்துநிற்பார்
செப்பிடுவித்தை மீதாச்சு செகதலமயக்க மிதனாலல்லோ.
கைப்பதுநீக்கிக் கசடதுபோக்கிக் கனிந்துநில்லே. 70

நெருப்பாறு என்றுமே
நெறியாய்ச்சொன்ன நூல்களுக்கு
விருப்போடு உரையுணர்ந்து
விண்ணிற்கப்பால் ஊசலாடும்
அருப்போடு மயிர்ப்பாலம்
அதனைத்தாண்டி அகண்டத்துள்ளே
பொருப்பாரு மதியமுதம்
புசித்தார்க்கன்றோ காயசித்தி. 71

வேறு

மதியமுதம் என்று பலர் மறைப்பாய்ச்
சொன்னார் மனிதற்காக
மதியமுதம் மதியற்றார் வண்ணானைக்
கேட்டறிந்தால் கிட்டிப்போகும்

பொதிசுமந்த கழுதைபோல் பூரணத்தை
யறியாமல் அலைந்தாலந்தோ
விதிவிட்டுப் போமோ மேனோக்கிக்
கும்பிக்கத் தெரியாதாண்டே. 72

வேறு

வாசியென்றும் வழலையென்றும்
கெங்கையென்றும் வன்னியென்றும்
ஊசியென்ற உதகமென்றும்
உவரென்றும் பூநீரென்றும்
தேசியென்றும் காரமென்றும்
செயனீரும் சாரமென்றும்
பேசிப்பேசிச் செத்தாருலகோர்
பேதிக்க வகையறியாதாண்டே. 73

வெண்பா

தன்னையறிந்தவர்க்குந் தானன்றோ வானத்துள்
அன்னையவள் வந்து ஆதரித்து-முன்னைப்
பவமோட்டிப் பாலூட்டிப் பக்குவமாய் மேற்கூட்டிச்
சிவநிலையைச் சேர்ப்பாள் சிறந்து. 74
பிண்டத்தின் மேற்குப் பிரிதிவு தான்கிழக்கு
அண்டத்தில் அடிமுடி யென்றருச்சிப்பார்-விண்டுமுள்ளே
காணாச்சுழி முனையைக் கண்டார்க்குப் பிண்டத்தில்
மாணா மண்டலிக்கும் மருந்து. 75

வேறு

பூத்தவுவர்க் களத்தில்-ஆண்டே
பூரணமோங்கி நிற்கும்
ஆத்தாள் தனையறியா-தாண்டே
அறிவுகெட்டு மாண்டரே

மாசுமரு வறியா-ளாண்டே
மக்கட்பிறப் பறியாள்
ஆசைவிடுத்த வர்க்கு-ஆண்டே
அன்பாய் உபசரிப்பாள்
ஊற்றைச் சடலமிது-ஆண்டே
ஓடோடப் பார்க்கிறது
நாற்ற மெடுத்தவர்க்கு-ஆண்டே
ஞாயம் பிறக்குமது
காத்தை அடைத்த கப்பல்-ஆண்டே
கறை காண மாட்டாமலே
பார்த்த பெரு வெளியில்-ஆண்டே
பாய்மரந்தான் முறிய
தாயை மகன்மறந்து-ஆண்டே
தாரத்திலே கிடந்தால்
மாயும்வகை பதின்மர்-ஆண்டே
மாயை மயக்கத்தினால்
காயத்தின் பொக்கிஷத்தை-ஆண்டே
காண வகையறியார்
வாயைத் திறந்த பிள்ளை-ஆண்டே
வர்மம் தெரிந்ததுவே
எண்சா ணுயரமது-ஆண்டே
ஏறவகையு மில்லை
பெண்சாதி ஆசையல்லோ-ஆண்டே
பின்னுக் கிழுக்கு திங்கே. 76

வேறு

நட்டகம்ப மீதிலே நாட்டியங்கள் செய்குவார்
வட்டமிட்ட வாசியை வழியதாய்த் தெரிந்திடில்
எட்டும்ரெண்டும் இன்னதென்று ஏகமாய்த் தெரிந்திடும்
அட்டியில்லை யெங்களகத் தீசனாணை உண்மையே. 77

உண்மையென்ற அக்ஷ்ரம் ஓங்கிநின்ற குண்டலி
பெண்மையென்றடி பணிந்து பேணிமேலு மேற்றினால்
தண்மையான யோகமுக்கால் தானும்வந்து வாய்த்திடும்
வெண்மையான உவர்நிலத்து உப்பறிந்து மேவிடே. 78

பஞ்சபூதமொன்று சேர்ந்து பார்தனிற் படிந்துமே
மஞ்சுலாவு வாசியோக வாழ்வினிற்கு ளாதியாய்
மிஞ்சியே படர்ந்தமூலி வேதையிற்கு மேகுமே
வஞ்சமும் மறைப்புமில்லை வழலையின்றன் போக்கிதே.
79

போக்கினைத் தெரிந்து மூவர்பூத்த மண்ணிலத்திலே
நோக்கிடவே நீலவர்ணம்நுட்பமீது வெண்மையை
நீக்கியே எடுத்திடில் நிச்சயம் கைகூடிடும்
முக்கியம் நிலவளத்தை முன்புநீ அறிந்திடே. 80

அறிந்தநீல உப்பதும் ஆண்டையே பூநீரது
சிறந்தநீல உப்பைநீக்கிச் செய்யவீண் பாடாகுமே
உறைந்த பஞ்சவர்ணமாம் உப்பதில் விளைந்தது
நிறைந்தநீல உப்பதென்று நிகழ்த்தினேன் கேளாண்டையே.
81

ஆண்டையேநீ அந்தவுப்பு அறிந்துமேஎடுத்திடில்
தாண்டுவாய் பகிரண்டமெல்லாம் தஞ்சமென்று
முந்தனை
வேண்டிச்சிவ யோகியோடு விஞ்சையரும் மேவுவார்
காண்டிவம் போலிந்தவுப்புக் கைதனில் மறைந்திடே. 82

உப்புடனா மானைக்கல்லை ஓதியாறு திங்களாய்
வைப்பறிந்து வைத்தகாடி வானநீரில் சுத்தியாம்
செப்பிய வீரைந்து தீட்சை சீருடன் முடித்திடில்
கைப்புநின்ற கசிவுநீங்கிக் காரசார மானதே. 83

காரசார மானவுப்பே கருதிமுன்னம் சாற்றிய
பாரஞான வெட்டிதன்னில் பகர்ந்தனம் நல்முப்புவென்று
தேறசொற் பதத்தைக்கண்ட தீட்சையின் பெருமையால்
பாரில்முப்புவை முடித்துப் பார்த்தனர் சிவயோகரே. 84

வேறு

மூலப்புளிச்சுன்னம் முப்புவென்று மொழிந்தோம்
மூவுலகில் யிதன்பெருமை யாரறிவார்
ஞாலத்தினால் நீலவுப்பின் நன்மை நிலவளம்கண்டு
நாடியே நாதவிந்து கூட்டிக்
கோலத்துடன் வெட்டி சொன்ன குறிப்புணர்ந்து
கூறிய முப்புச் சுண்ணமாக்கி
சாலத்திடம்பெறச் சடலத்தில் தினமுண்டால்
சாற்றிய சாவுதானேது ஆண்டே. 85

பூமிநாதமெனும் பூநீரதுதான் புகலும்நீலநிறம்
புனித முடனதைச் சாடிநீரதில்
சாமிநாதகுரு பரனருளால் அதைத்தான்கலக்கிச்
சாமமூன்று வைத்துத்தெளி விறுத்துக்
காமிவாலையருள் விந்துவையும் கொண்டுதாக்கிக்
கடிதினிற் கூட்டிடு கெங்கையால்
நேமமாகவே பூநீருடன் சேர்த்துச் சமாதிவைத்து
நேரதாகவே எடுத்திடு மாண்டையே. 86

விந்துநாதமது காரசாரப்பெருமையா லொன்றுகூடி
விகசிதம்செய் முப்புவாய் முடிந்ததுகாண்
சந்திரனொளியாலே கடலினுப்பது நாதமே
தாரணியி லதினடியில்தோற்றும் சிவவிந்துவும்
முந்திக்கொண்ட முறைப்படிக்கு நாதவிந்தும்
முற்றிலும் சுத்தகெங்கையால் சுண்ணம்
இங்கிதன் சூட்சுமமறிவார் ஞானவெட்டி மூவைந்நூறதில்
ஏகவஸ்து அதை ஆரறிவாராண்டே. 87

வேறு

ஏகமென்ற முப்புவிற்கு
எழிலான சுத்தசலம் இதனால்தீட்சை
பூகமென்ற குருவருளால்
யோகிகட்கே யிதெய்து மானாலிது
ஆகுமென்று சொன்னேன் ஆகையால்
ஆடியோடி மாய்தலின்றியே
போகமென்ற மயக்கம் நீக்கி
பூரித்துக்கும்பித்து ரேசியே 88

வெண்பா

அப்புவுடன் வன்னியும் ஆனதோர்
இப்புவியில் ஏகமாய் இருந்திட-ஒப்பியதோர்
ஆதி வழலை ஆகுமே ஈதறியும்
சேதிஇந் நூலினால் செய். 89

பூதங்கள் ஐந்தும் புலனைந்தும் ஒன்றாக
ஏதங்கமின்றி ஏரிபோல்-ஆதங்கம்
நீங்குமொரு வாரிதியாய் நேர்மையுட னேயிருக்க
ஈங்குஇனி வறுமை ஏன். 90

சாகர நீரைச் சடுதியில் தானறிந்து
பாகமதாய் உப்பைப் பண்படுத்திச்-சாகசமாய்த்
தீட்சைதச பத்தும் தீவிரமாய் நீமுடித்துக்
காட்சி வழியிலே காண். 91

சுத்தப் பெருவழியாய்த் தோற்றும் துரியாதீத
வித்தைக் கிலக்காய் மெய்யினுக்குள்-எத்தைக்
கொண்டால் குவலயத்தில் கூத்தன் வரானென்று
விண்டார்கள் ஞானிகளின் மேல். 92

காயத்திற் கன்னம் கனமாய்ப் பிரதானம்
ஞாயத்திற் கிதுவும் நளினமே-ஆயத்தில்
திங்கள் இருமூன்றில் சேதுமாய்ச் சுத்தசலம்
பொங்கும் வழியதனைப் போற்று. 93

அடிமுடியிரண்டும்போக ஆதாரம் நடுவிருக்கும்
ஆகமத்தைத் தான்மறந்து ஆதியிலே
கொடுமுடியென்றுமனம் கொண்டுமே சித்தர்கள்
கூறியதோர் நூன்மறைப் பதனாற்றாமே
நெடுமுடி வாலாம்பிகை நீலியவள் பாதம்
நிலையாக மறந்துபல போக்குமுற்றார்
படுமுடிபாதாளமூலியது பரந்து பாருலகில்
பதிந்திருக்கும் சூட்சமத்தை யாரறிவாராண்டே. 94

அறிந்தவரேசித்தர்முதல் விஞ்சையர் யோகிகள்
அந்தரர் வித்யாதரர் அவர்கள் ஆனார்
செறிந்துமணற் பாங்குதனில் செகசோதிநிலமாம்
செனித்ததோ ரானைக்கல் லதனாலன்றோ
நிறைந்ததோர்பூமிநாத வழலையென்று பூத்திருக்கும்
நிலைதனிலே மெய்மறந்து வீணதாகக்
குறைந்துமேகெட்டார்கள் குவலயத்தில் குண்டலியாள்
குறியறியாச் சண்டாள ராண்டே. 95

நகாரமதேநாயகியாள் நிலைபெற்ற வீடதாகும்
நானிலத்தில் அதன்மேலே நவின்றிட்ட
மகாரமே அவளூசல் ஆடும்வாசல் அதற்கப்பால்
வதிந்ததொரு மணிபூரகம் சிகாரமாச்சு
வகாரமேவழலையாச்சு மணிநடந் தான்புரியும்
வர்ணமா மண்டபமு மதுவேயாச்சு
யகாரமேமுப்புவின் அடைவுமாச்சு அரிமாலீசன்
அம்மூவர் அதற்கப்பால் ஏகமாண்டே. 96

வேறு

அண்டத்தில் முப்புவாய் முடித்து அறியுடனே
பிண்டத்திற் கொண்டால்பிலக்குமே வாசியது
மண்டலத்தி லிதன்மாட்சி அறிந்த மானிடர்க்கு
எண்டிசையும் கிருகிரென்று நடுங்கு மென்னாண்டே 97

சுண்ணநீரது பின்னமிலை சுருக்கான வழியது
மண்ணிலே யோகசித்தியோடு வாதவைத்தியஞ் சித்தியாம்
கண்ணிலே மைபோட்ட கசடருக்குக் கிடைக்காது
விண்ணிலே இருந்து விளையாடு மாகாச மாண்டே 98

வேறு

விந்துநாத மென்றுசொன்ன மேதினிப் புரட்டெலாம்
வந்தவிதமே இரண்டு வாறதாக வாய்க்குமே
அந்தநாதமே அறிந்தால் விந்துவேறு இல்லையே
இந்தவாதமே மறைத்த பூட்டறியு மாண்டையே. 99

விந்துவோடு நாதம்கூடி விளைந்துமே இருக்கையில்
நொந்துமேவி வேறதாக நோக்கினால் கிடைக்குமோ
சந்திரன் கலையினால் சனித்தநாதம் விந்துவாம்
அந்தகன் போல்சுற்றினால் அகப்படுவதில்லையே. 100

ஏகவஸ்து என்றுமே நாம்இனிய ஞானவெட்டியில்
பாகமாகச் செப்பிய பனுவலை மறந்துமே
நாகம்போலச் சீறியே நானிலத்தில் சுற்றினால்
ஆகுமோநன் முப்புமுறை ஆண்டே முடியாததே. 101

வேறு

உலகதனில் உப்பும் புளியுமதைக்
கைவிட்டால் உடலதழியு மென்று
உச்சிதமாகக் காரசாரமதை நாடியே
உணவினிற் பெருக்க ஊட்டி

இலகு மானிடர்க்கிது ஏற்றதென்றுமே
ஏந்திழை மார்கள் சமைப்பார்
இதனையறியாமலே மதிகெட்டுப் போனவர்
இகம்தனிலும் கோடா கோடி
அலகைபோல் புவிதனிலே சுற்றியே சரக்குகளை
அடுப்பிட்டு வன்னி மூட்டி
அவித்தவர்கள் எத்தனைபேர் அறைவதார் அவர்சிறுமை
அநந்தஉடல் நீத்து மாண்டார்
கலகமலர் பொருதுமதன் கணைக்கிலக் கியமானார்
கதியற்று வீணி லாழ்ந்தார்
கருதுகுண்டலி யன்னை கருணை பெற்றார்களே
கற்ப தேகிக ளாண்டையே. 102

வேறு

நாற்சதுரக் குழிவெட்டி நல்லஇருள் தனைநீக்கி
நடுமதி பூர்ண நிலவிலே
ஆச்சரிய மெண்சாண் அளவு குழியதுசெய்து
அடுக் கடுக்காய் மிதித்தே
பூச்சதுர மதுநின்று பூத்த நாதமது
பொங்கிவரு மஞ்சு வர்ணம்
நீச்சலறி யாதவர் நிலைதவறி மாண்டனர்கள்
நேர்மையறி யாம லாண்டே 103

பாய்ச்சலது நாலையது பார்த்தால் பசுவாகப்
பாலித் திருக்கு மடங்கி
மூச்சதுவே வாசிநுனி முன்பின் பிறழாது
முனைநடுவில் தாரை போல
வீச்செனவே ஓங்காரச் சங்கொலி நாதமூட்டும்
வித்தகர் நிட்டை தனிலே
ஏச்சுமிலை அகத்தீசர் அருளினால் பாடினேன்
அறிவாளிகட் கெய்து மாண்டே 104

வேறு

உவர்சாரமது சலமுவர்நீர்
 உலகினில் சத்தசாகரநீர்
நவச்சாரமென்று பலரேங்கினர்
 நாதநீர்வாரிதி நீர்காண்
தவச்சாரல் மலைநாவொன் முகில்
 தண்ணெனக் குளிர்ந்த
உவப்பேது இதுபோல
 உண்மை யைந்நூற்றிலாண்டே. 105

வானொடு முகிலும்கூடி
 வன்னியின் பெருமையாலே
கானொடு காற்றினாற்பண்
 கட்டியே வித்துமாச்சு
மானொடுங் கண்ணிவாலை
 மதியமுதினை அருந்தித்
தேனொடுங் காயசித்தித்
 திடமான வுடலமாண்டே. 106

பார்த்தார் பரிதியொடு மதிமயங்கிப் பரவிப்பூத்துக்
காத்தால் கண்களிற்படும் காடதில்குடிசைகட்டி
வேர்த்தார்க் கன்றோ விதிதொலைந் தறிவுமேவும்
ஆத்தாள் அம்பிகை யோகியானவர்க் கருளுமிதே. 107

வேறு

நச்ச னிருத்தன் நாயகன் கண்டமே
இச்ச கந்தனி லின்னதென் றறிவாரோ
பச்சை மேனிப் பகவதி யானவன்
மெச்சு மருளினால் மேவித் தெரிவரே. 108

ஆலகால விஷமமுரி அதுதான் பானமும்
சீலமாக அதன்நஞ்சு நீக்கியே தெளிவதாய்
காலமீதி லனுதினம் காலைமாலைநீ உண்டிடில்
ஓலமிட்டு மறலியோடு மோடுமீ துண்மையே. 109

வேறு

சுத்த கெங்கைச் சுகாதீதச் சுருதிகள்
மெத்த மெத்த விதங்கள் விளம்பிடும்
நித்தம் நமதில்லில் நிலவிய நீரெனச்
சித்தர் செப்பும் மறைப்பது ஆண்டையே. 110

வேறு

அந்திசந்தி அமுரிமூலப் புளிஉண்டு
அட்டாங்க யோக நியமமும்
உந்திமூலச் சுழியறிந்து கும்பித்து
ஓங்கி ஏகவஸ்து தன்னில்
சுந்திரக்கனல் மண்டையோடதனில் தாக்கிட
சுடர்த் தாரம தாகவே
முந்திநின்ற வர்க்கன்றோ முத்திசித்திக்கும்
மோட்ச வழி யாண்டே. 111

வேறு

அன்றுரைத்த ஞானவெட்டி மூவைந்நூறும்
அகத்திலோதி
நன்றெனப் பின்புகலு மெண்ணூறும் ஆராய்ந்து
மன்றிலாடும் வாலாம்பிகை பாதம்பூசித்துத் தெளிந்து
கன்றுபோல் கைதேர்ந்தெடுப் பார்காண் ஐந்நூற்றே. 112

குளகமாகவும் பாடியவெந்நூலெலாம்
    இலக்கணக் குறிப்பாளர்
அளகமாகவும் காண்பார்காண்
    அஞ்சனக்கண் போற் கற்றறிவார்
தளகமாகும் தள்ளாடிக் கண்மூடித்
    தவறிதைச் சேர்வார்
புளகமாகும் புலவோர்க்கிது
    குறிப் புணர்ந்தால் புண்ணியமே. 113

கன்னியபிராமி யருள் கடைக் கணோக்கம்
    கருத்திலுண்டு
பின்னமின்றி யிந்நூலைந்நூறும்
    பிரிந்துணர்ந்து தேர்ந்து
வன்னியொடு கால்மீறவும்
    வதனமாதர் தமை நீக்கியே
உள்ளினார்க்கிது வாய்த்திடும்
    ஒண்முத்திசித்தி யீதாண்டையே. 114

வேறு

சூதவிந்து கன்னிநாத கெந்திசுத்த சலத்தினால்
வாதம்வந்து பலிதமாகு வண்ணத் தீக்ஷையால்
பேதமேது பிசகொன்று மில்லையினிப் பேசவே
ஆதிவிந்து அமுரிநாதமென்றதும் அநாதியே. 115

வேறு

சூதமெனும் விந்துவதன் சூக்ஷுமத்தைத் தானறிந்து
நாதமுடன் தான்கூட்டி நானினத்தில் மாதருளால்
வாதமுடன் வைத்தியமும் வாசிமுதல் வான்குளிகை
நீதிபெறவேபெருகும் நேர். 116

வேறு

ரசசூதவிந்து மூலிபானமதால் நவின்றுஎண் சித்திகூடும்
பிசகா்துயிது அறுபத்துநாலும் பெருமித மாகவேநீறும்
அசையா்த நாதம்அத னோடுவிந்து அமுரிவிட்டு
வஂசபோட்ச் செய்ய வாய்க்குமே காயசித்தி யாண்டே.117

வேறு

விந்துவுடன் நாதமதுமேவியேநற்கெங்கையொடு
சுந்தர காசசமாதியில் தோன்றிவரும்-அந்தவுப்பு
முப்புவென்றே யறிவார் மூலத்திலே தெளிந்தோர்
அப்புமுப்பு மொன்றானதால். 118

அலைகடல் மேவியே ஆனதுகாண் சாகரம்
விலையற்ற மாணிக்கம் வேறேது-கலைகற்று
ஆய்ந்த சிவயோகி அன்பால் தன் பெருமை
தோய்ந்துணர்வா னிச்சை துறந்து. 119

மங்கையர்க் கணிகலம் வாரிதிவாழ் கிளிஞ்சியதில்
தங்கியமுத்து வாணிகர் தராதலந்தனி லெடுப்பார்
பொங்கியகடலில் விளையும் நுரையே பூதலந்தன்னில்
சங்கையிலாத கல்லுப்பிதை யாரறிவார் தன்மையமே.120

மேவும்கல்லுப்பதனை விந்தையாய் விரவியெடுத்துத்
தாவுதனையறிந்து தன்மையாய் நாதமுடன்கூட்டி
ஓய்விலாமல் சுத்தசலம் விட்டுத்திரிநாள் உய்த்தெடுக்க
ஏய்வுமேது யிதுசமாதி இருநில முப்புவாண்டையே. 121

வேறு

முப்புச் சுண்ணம் முடிந்தவர்கட் கன்றோ
இப்புவிச் சரக் கெல்லாம் இறங்கிடும்
தப்பிலாத சடல உப்பதை யறிந்து
சொற்பிரகாரம் சுருதி காணுமரோ. 122

வேறு

அம்பிகை பாதத்தடிமலர் அநுதினம் பூரணமாய்
நம்பிக்கும் பித்தேரேசிக்க நாடுமோவினை நாட்டினில்
வெம்பி வாடி வீணிலுழைத்திடும் வேதியர்க்குச்
செம்பினூறல் செககுலத் தோடுமோ சிறிதாண்டே 123

வேறு

உன்னில் ஒடுங்கும் உதகநீர் தன்னையுநீ
இன்னிலத்தில் கண்டால் எய்துமே-பன்னியதோர்
காயத்தில் சட்டை கருத்திலது தான்தள்ளித்
தேயத்தில் உருதிசெயம் தேர். 124

வேறு

செகமதில்சித்தர் சொன்னசிறப்பது மனிதர்கள் ஏமாந்து
இகமதில் கோடாகோடி இட்டமதாய் சரக்கதனை நீற்று
வகைபெற வழியறியாது மயங்கினர் வழலை தனையறிந்து
சுகமுறத் துறைத்தனைக்கண்டார் துரிசற்றார்க்கிது
தானாண்டே 125

வாய்த்ததோர் வழலைதன்னை
வன்னியில் சலம்விட்டுக் காய்ச்சி
மாய்த்திட மறுபிறவி
அதீதசுத்தநீரில் மதிப்பெய்தும்
காய்த்திடாமூலி கபாலவழலை
கருத்தி லுணர்ந்துகொண்டு
தோய்த்தனை வாங்கிக்கற்ப
மோராண்டு தேறச்சித்திக்குமே. 126

ஏறுமீரெட்டு என்றுமே இறுமாந்து கும்பித்து
மாறுதலறியாது வாய்ப்பது குடல்போய் வலித்துச்
சீறியகுறியால்சூலைபோல் வாட்டுமது தேர்கிலர்
ஆறுவிதகற்பம் அற்பமே யிதுதான் ஆண்டையே. 127

வாமப்பால் என்றுமறைத்து
வைத்தார் வாயாற்சுத்த கெங்கை
நாமத்தால் சொல்லாது
நவின்றாரதன் மகுத்துவமாரறிவார்
காமத்தால் சடலம்வெந்து
கதிமாறிக் கருத்தகசடர்தாம்
சேமத்தால்வாழ உதகநீர்
சித்திக்கும் சமாதிவைப்பதாலே. 128

வேறு

காமத்தினால் காயமதழிந்த கசடர் கடாம்
ஏமத்தினால் ஏதுகாண்பர்காண் நாதமெனும்
ஓமத்தினால்உதகம் பொங்கியே ஊசிநீராம்
நாமத்தினால் வழங்கும்நாரியர் கைப்பாகமீதே. 129

பத்துவயது கெளரி பகர்வாலாம்பிமை மூலி
சித்தர்மோக்ஷ யோகசிவநிலை வதியும்நீலி
பித்தர்கள் பாலர்போலப் பிதற்றியே ஊர்த்திரிந்தால்
எத்ததுகாண் கிலார்கள் எய்திய பத்துத்தீட்சை. 130

முக்கோணவட்டம் முதிரப்பருவம் முளைத்தெழுந்த
இக்காய நட்ட நடுவிருக்கும் எழிற்றாயம்மாள்
விக்காமலேறி விளையாடஓதும்வேதபாகமோர்ந்த
அக்கால மன்றோ அடைவார்கள் அட்டசித்தி. 131

வேறு

அமுத மென்னும் அச்சலம் நீரதும்
திமிர்த மிட்டுமுள் தேகத்திற் றேங்கிடும்
உமிழும் நீரதென் றாலுணர் வார்களோ
குமிழி நீரது போலக் குறிப்பினால். 132

வேறு

வீரமாம் வெள்ளைக் கல்லுப்பறிந்துவிரைவதாகச்
சாரமீதென்று சமுசய மற்றுச் சலிப்பற்றுக்
காரமென்ற நாதநீர் கலக்கியே தெளிவிறுத்து
வாரிநீரதுவான விபரமிது வழுத்தவார்களாண்டே. 133

வேறு

இந்த விந்தினை யாரறிவார்கள் காண்
மந்த மாருத மானதும் வன்னியும்
சொந்த மாகச் சுருக்கினில் கூடியே
வந்த உப்பது முப்புவென் றோதிடே. 134

வேறு

எண்ணத் தொலையாது ஏரிநீர் மேவியபேர்
பண்ணத் தொலையாத பாதகர்தாம்-விண்ணதிலே
தானொடுங்கித் தாரையாய்த் தவத்தோருக் காய்வீழும்
வானுதகம் வந்த திதுவாம். 135

பஞ்சமா பாதகத்தில் பாரினுளே வாய்மடுத்துப்
பஞ்சைப்போல் வண்டிளைத்து மாதர்கடம்-மிஞ்சியெழு
மாதனத்தில் வீழ்ந்தாலே வாய்க்குமோ யோகமெனும்
ஆதனத்தில் ஆவதுதான் அன்று. 136

வேறு

நிலத்தினின் நேர்மையை அறிந்து நெறியதாம்
தலத்திடைத் தோன்றும் சாதகமாய் நாதமதின்
மலத்தினைப் போக்கி மாண்புடன் கொண்டவர்க்குச்
சலத்துடன் மலம்கட்டிச் சாதிக்கும் கற்பமாண்டையே.
137

மலசலவாழ்வினால் மாய்ந்தனர் மண்ணில் பலகோடி
நிலசல மிதுவென்றுணர்ந்து நிலமதில் வெடியுப்பறிந்து
கலசலமாலை காலையினு மருந்திக் கருத்திலுய்த்து
மலசலனதற்று நிற்பார் சதாகோடிகாலம் சமாதிதனிலே. 138

வழலையின் போக்கறிந்தால் வழங்கிடும் வாதமாகும்
நிழல்என நின்றுநானும் நீடூழிவாழ எண்ணிச்
சுழல்விழிமாதர்நோக்கில் சுற்றியேமடியும்பேய்க்கு
அழலது மூலத்தாமோ அகத்தீசனருள் தானஈண்டே. 139

வேறு

எங்கள்குரு அகத்தீசன் இன்னருளால் நாதமது
பொங்கிவழி நிலமடைந்துபூரணத்தை நானறிந்து
கங்குலுடன் பிசகற்ற கருநிலத்தில் தான்வாழ்ந்து
எங்குமொரு சத்தியென இகமதனிற் கண்டேனே. 140

வேறு

சத்திநாதமது வழலையெனச் சாற்றினார் சத்தியாவது
எத்திலாது மாதருணர்வர்க ளிவ்வையகத்தி லின்பமுடன்
முத்தியோக பூர்வமது மோனவழியறிந்து முன்பாகச்
சித்தியாகும் சிவயோகம் சிலாக்கியமீ தாண்டையே. 141
முச்சந்தி வீதிமுனை மராதிது மயிற்பால் வாசல்முடிவற்ற
இச்சந்தி யறியச்சகமதனில் இயலாது விருப்புற்றார்க்குத்
தற்சந்திர னொளிமேவிய பனியினால் நாதமுவர்சாரமாய்
பொற்சந்தி யாகும்வெகு வேதைமேவும் பூவுலகிலாண்டே
142

வேறு

யோனியது நான்குவகை யோசிக்கில் தோற்றமேழ்
மானிலத்தி லித்தை மதிப்பார்யார்-வானிலத்தில்
வீழ்ந்த உதகநீர் மெய்கருக்கும் கற்பமாம்
ஆழ்ந்திதனை ஆய்ந்தார்க் கமை. 143

பூரித்து ரேசித்துப் பூரணமாய்க் கும்பித்து
ஏரிட்டிருக்க யார்க்கும் ஏலாது-வீரிட்ட
விந்ததனைக்கட்டறியார் மேதினியில்வீணர்கடாம்
அந்தகனுக் காளாகு வார். 144

வேறு

அலை வழங்கிடும் மதஜலந்தனில்
ஆதியா மகத்தீசனார்
கலைமுழங்கிட நாதநீரதில்
கருதியேமுன் விளக்கினார்
நிலைவிளங்கிடச் சித்தர்கள்தினம்
நேர்மையாயதன் உப்பினால்
மலைவழங்கிடத் தீட்சைபத்துமே
மதிப்பதாக முடிந்ததே. 145

வேறு

சுருதிமாமொழி மூத்திரம்
எனச்சொல்லும் சாகரமமுரியே
வருதியேதிதன் மார்க்கமேகண்டு
வாய்மையா யுலகெய்தினால்
நிருதிமேவி யிழைக்குமேயிதன்
நிட்சயம் பதினெண்சித்தர்
கருதியேசெய்த கபடுகண்டவர்
காட்சிகூடுவ ராண்டையே. 146

கலசநற்சல மதுவுமூசிநீர் கரகமாமுனி யருளிய
நிலசலத்தினில்நிலைவதாகவும் நித்தமும் பலபுத்தியாய்
அலைசலத்தனை அறிவினால்தினம் அண்டிக்
கொண்டிடவாகுமே
விலையிதற்கிணை யேதுபூமியில்வித்தை வாத
முமாண்டையே. 147

வேறு

அப்பதனை விட்டால் அட்டமா சித்தியேது
உப்புஎன்று கடல்உவறி னாற்கைக் கூடுமோ
முப்புவானது அப்புவென்று மொழிவா ருண்மையாய்ச்
செப்பினாலுமே சித்தராவரோ ஜெகதலப்
புரட்டாண்டையே. 148

பூதலத்தில் அநேகங்கோடி புண்ணியராய்ப்
பாவாரென்று
வாதவித்தை என்றதொரு மாய்கைதனைக்
காட்டிவைத்தார்
சாதகத்திலே தெளிந்த தன்மையோரிதுதான் தொடார்
பாதகத்திலாழ்ந்தினோர் பாரிற்காண்கவுமாகுமோ. 149

சாத்திரத்தி லநேகம்பேர் சாதித்தார் தயவதாகப்
பாத்திரத்தில் கோடிபேர்பண்டையினில் சித்தராக
ஆத்திரத்திற் சொன்னநூல் ஆதியில் மொழிந்தார்காண்
காத்திரத்திற் காயசித்தி கற்பமிதி லாண்டையே 150

கற்பமென்று மேமொழிந்த காட்சியையார் காண்குவார்
அற்பமென்று இதனைவிட்டு அமர்ந்தபேர்கட்காகுமோ
சொற்பதங்கள் சூட்சியாகச் சோதித் தறியாமலே
பற்பலதுறை ஏகினார்கள் பண்பினாலுல காண்டையே.
151

வேறு

வழலைதொட்டு வாதம்கண்டு
  வானமாமலை யேறியே
உழலுமாந்தர்க ளுய்த்துமே
  உணர்வார்களோ கனசோதியை
அழலுமேவிய குண்டலியருள்
  அன்பினால்வரும் சாகரக்
கழலிதைத் தெரியாது காட்சியில்
  கண்டு மெலிவர்கள் கசடரே. 152

வேறு

சோதித்துரியாதீதச் சுடரொளியில் தோன்றிவரும்
ஆதிப் பராபரையை அம்புவியில் ஆரறிவார்
சீதத்திரு வைச்சடலத் திகைப்பற்றாருக் கிதுவே
காதற்றவூசி கடைத்தெருவில் விலையானதே. 153

ஆனைக்கல் என்று ஆதிரிப்பதைத் தானறிந்து
ஊனக் கைப்பதனை உறுதியாய்ப் போக்குவித்து
மானக்கிருபை வாய்க்க மதுவுண்ட வண்டது போல்
தானுந் திருந்தினர்க்குச் சடலமது வீழா தாண்டே. 154

வாதகுரு விந்துநீர் வாய்க்குமது நாதநீர்
பாதையிது நீரறியப் பாகம்வர மோனவிழிப்
போதமுற வந்துதிக்கும் போகம்விட வேயழியும்
நீதமிதைத் தானறிந்து நிட்டையுங் கைகூடிடவே. 155

வேறு

விந்துநாத மென்றவிரு மேம்படு நற்பாகமே
இந்தவேதை தானுணர ஏற்குமே-சந்ததமும்
யோகமெனும் சுழிமுனையில்யுத்தியுடன்சாதிக்கத்
தேகமது திடமுள்ளதே. 156

தேடித் திரிவார்க்குச் சேவியிலே சித்தியது
நாடி யிருக்குமதை நாடுகிலார்-பாடிக்
கறக்கும்வகை யறியாக் காதகர்க்குப் பாலேது
இறக்கும் துறை யறியாரே. 157

ஆதியென்ற நாதமது அண்டமதிற் றானேது
சோதியென்று தொல்லுலகி லாரறிவார்-வாதிகள்தாம்
கடைச்சரக்கைத் தான்சுட்டுக்காய்ந்தார்களல்லால்
இடைச்ச ரக்கால் ஆவதுதான் இன்று. 158

சுத்தச் சுகாதீதச் சோதிச் சுடருப்பு
இத்தலத்தில் விந்துவென ஏகமாய்ச்-சித்தர்களும்
வைத்தார் அதன்பெருமை வையகத்திலே யறிந்தால்
இத்தரணி ஞானி இவர். 159

வேறு

அண்டபிண்டம் ரெண்டுமாகி ஆனதோர் கல்லுப்பினால்
விண்டநாத மேலெழும்பி விளைந்தது உவர்க்காடதில்
தெண்டனிட்டுத்தூபதீப பூசையிட்டுத் தெளிவதாய்க்
கொண்டபேர்க்குக் கூற்றுமில்லை கூறினேன்
மெய்யாண்டையே 160

நாதமென்ற உப்பினோடு நவின்றவிந்து கூடியே
ஆதிகார சாரத்தாலே அமைந்ததே சொல்முப்புவும்
நீதியாக யிந்தவந்த ரங்கங்கண்டு நேர்த்தியாய்ச்
சாதனைசெய் வாருமாகில் சண்டனேது ஆண்டையே.161

சாகரத்திலே தெளிந்த சலந்தனில் கலக்கியே
வாகுரத் தெளிவிறுத்து வைத்தநீரும் காடியாம்
ஏகமான இந்தவஸ்து இனிமையாக நீயறிந்து
பாகம் செய்யச் சுண்ணமாச்சு பார்த்திடு மதிகமே. 162

உலகமீதில் முப்புவின் பெருமையால் உணாவினோர்
கலகமாதின் வாழ்வைநீக்கிக் காட்சிமேவி மௌனமாய்
இலகுவாலை கன்னியின்பம் ஏறியண்ட மீதினில்
மலையுமித்தை யறிவரோகாண் மகத்துவ மீதாண்டையே. 163

மன்னுமுவர்க் காடதனில் வைத்திருக்கும் உப்பதை
இன்னிலத்தி லேயறிந்து ஏகியே எடுத்திடில்
சொர்ணமாகும் சுத்தமாகும் ஜோதியுப்பின் பாகமாம்
இன்னமும் ஏமாற்றமேன் இந்தநூல்போலில்லையே. 164

வேறு

சந்திரனொளி மேவிச் சாகர நீருப்பாச்சு
சுந்திர காயமாச்சு ஜோதிமுடி துலங்கலாச்சு
இந்திர னுப்பறிந்து இதுதனை முடிக்கவல்லார்
சந்ததம் யோகநிட்டை சாதித்து மிருப்பாராண்டே. 165

வேறு

மாதுநாதமே காரசார மகிமையால்
 மகிதலத்தி லுவரது போக்கும்
தீதுராதுமே அணுகாது திகழ்பெரு
 முதகநீர் சுத்தஜலப் பெருமை
ஓதுமிந் நூலைந்நூறில் உணர்த்தினேன்
 உலகின ருய்யும் வண்ணம்
சாதநீரதே சுத்தஜலம் சந்தேகமில்லை
 சாஸ்திரங் கள்கூறிய தாண்டே. 166

ஓங்காரநாதம் பிரணவ மூலம்
 உதித்த மதியமுதம் உந்திக்கமலம்
தாங்காத சத்திதன்னருட் சுயம்பிரகாசம்
 சவிஸ்த்தார மீதாச்சுது காண்

பாங்கான மாது வாலாம்பிகை
செகஜ்ஜோதி பாதாரவிந்த சூட்சமம்
நாங்காணறிந்த தில்லைநடனப் பிரபல்யம்
நாடும தீதமெ னாண்டே 167

விந்துநாத மிவ்விரண்டும் விஷம்போக்கும்
வெகு கடினமிதை யாரறிவர்
தந்தையோடு தாய்மருவிய தன்மையைப்போல்
தாரணியில் செனித்த தாலே
அந்தமேது ஆதியேது அந்தவிந்துநாதம்
அடிமுடி நடுவு மின்றியே
வந்தவாறு வகை சொல்வேன்
வழலையுட கூத்தினாலு மாண்டே 168

கற்பூரமொடு தீபம்கலந்த பாவனைபோல்
காணுமந்த விந்து நாதம்
பொற்பாருஞ் சுத்தஜலம் புகலவா காசமாச்சு
புதுமை வெகு அற்புதம்
கற்பான நல்மாது சுரோணிதநீரிற்
கண்ட கலசல மிதற்கு
ஒப்பான திப்புவி யிலேது
உளுத்தர் களுக்காகா தறிந்திடே 169

சித்தாதி யோகி முனிவர்க்கிது
சிலாக்கியம் சிறப்புற் றிருப்பர்காண்
இத்தாதி மார்க்கமறிந்தார் வாழ்ந்தார்
ஏனையோ ரிறந்து பிறப்பரே
முத்தாதி சிப்பிமுனைந் தெடுப்பர்
முடிவில் முழுகியநல் வஸ்துவாம்
சுத்தோத கம்வெகு துல்லியம்
சுடர்நீர் சுயம்பிரகாச மதாண்டே. 170

ஞாலத்தினில் செனன உயிர்பிழைக்க
நல்லருட் சத்திரவி யுதயமாய்
மூலத்தினில் கண்ட வெப்பமது
முனைவழி கபாலமேற லாச்சுதிந்தச்
சாலத்தினை யறிந்தால் சடலமுறுதியாம்
சண்டன் வெகு தூரந்தான்
பாலொத்திடு மொழிச்சி வஞ்சி வாலாம்பிகை
பாதம் பணிகு வேனே. 171

வேறு

காடோறும் நானுண்ட கற்பம்
நாட்டினி லறிவாறில்லை நாதவிந்து
தாடேறும்படிச் சங்கற்ப விகற்பந்
தாண்டி நூல்வழி தெரிந்து
காடான மார்க்கக் கசடுநீக்கிக்
கடிதினில் ககனமார்க்கம் சென்றேன்
பாடானபாடிது பகரவொணாச் சூட்சமம்
பரதேசி யறிவா ராண்டே 172

வேறு

வித்தில்லையென்றால் விளைவேது காண்
வீணான மூடர்களழுது புலம்பிச்
செத்துமடிந் தாரிப்பூதலத்தில் சிவராஜயோக
மறிய மாட்டார் செப்பும்
வத்துவான திதுவெனவறிந்து வத்துவாய்
வனாந்திர மோடிப் பிழைப்பார்
சுத்தசை தன்யப்பெரு வெளியில்
சுலபமாய்க் குருவருளா லாண்டே 173

குருவிலார் கொடுமை

நாட்டில்விளைந்த நாலுவித சரக்குகளை
நாய்போல் விலைக்கு வாங்கி
மூட்டை யிட்டு எருமுட்டையில்
வன்னியிட்டு மூண்டஅழலில் மாய்வார்
சாட்டையின்றிப் பம்பரம் சுழற்றுவார்கள்
தமக்கான குண மிதுவே
ஏட்டைப்படித்து இஷ்டம்போல் பிதற்றும்
இழிவானவர்க ளாண்டே. 174

காயமழிந்தால் உலகிற் சித்தியேது
காரியமின்றிக் காரண மில்லை
ஓயும்சர ணங்களழிந்து உன்மத்தர்போல்
வாழ்வார் உய்த்து ணர்ந்தார்
பாயும்கலையறிந்து பட்டியிட் டடைத்துப்
பரவெளி துரிய வாழ்க்கைக்
காயம் அறுபத்துநான்கும் அடங்கும்
அதுவு முப்பினா லாண்டே. 175

வேறு

நிலவுப்பும் நீலவுப்பும் நேர்மையாக ஒன்றினால்
மலவுப்பும் மாய்ந்துபோக வாய்த்ததுமவ் வுப்புமே
சலவுப்பென் றேயறிவர் சாத்திரங் கைதேர்ந்தவர்
பவளமப் போருப்புமுவ ருப்பெனப் பகர்வாரோ. 176
நித்தமந்த வுப்பையுண்டு நீணிலத்தி லநேகரும்
மெத்தவும் மெலிந்துபோனார் மேன்மையாகச் செப்பிய
வித்ஃதயை யறிந்துதீட்சை விதியதை உணர்ந்துமே
வைத்தவுப்பு வைப்புமாச்சு வஞ்சமில்லை யாண்டையே.
177

நன்மைதீமை யென்றிரண்டு ஞாயமுமிப் பூமியில்
வன்மையாக வேகலந்து வைத்தனர் மகத்துக்குள்
பன்மைபோக்கி யேநுகரப் பாதைகாட்டக் குருவருள்
இம்மையிலே கிடைக்கஎய்தும் நன்மையென்ற றிந்திடே.
178

அப்புஅப்பு என்றுரைத்த அரியசூத சுத்தநீர்
இப்புவிச் சரக்குகட்கு ஏமனாயி ருக்கையில்
வைப்புவைத்தவுப்புவிட்ட வல்லமைகள்பேசினால்
தப்புண்டாகும் பொய்மையில்லை சயிலநீர் குறித்திடே.
179

கோடிசூரியப் பிரபையாற் குலாவுகின்ற வானநீர்
சாடியே கரைத்திடிற் சகலதோஷம் போக்குமே
காடிநீரி தற்குப்பேர் கருத்தறிந்து செய்திடில்
ஓடிப்போவ னேமனும் உண்மையாகு மாண்டையே. 180

கற்றவர்கள் காடதிற் கதித்தெழுந்த உப்பினை
மற்றவப் பயனினாலே நாளும் சுத்தசாகரம்
உற்றநீரில் சுத்திசெய்ய உருதியாச்சு காயமும்
மற்றவாறி னாலுமான தில்லையே ஏமாற்றமே. 181

பஞ்சபூத மென்றுகூடில் பளிங்கு போலதீதமாம்
விஞ்சையுப் பென்றேவழங்கி விளையும் பூமிநாதமே
நஞ்சதாகும் நாதநீரில் நாட்டுதோஷங் காற்றினில்
பஞ்சுபோல் பறந்துபோகும் பாட்டைசொன்னே
னாண்டையே. 182

சுத்திசெய்த உப்பினோடு சொல்லும்விந்து கூட்டியே
இத்தலத்து விந்துவுந்தான் எய்தும்சுத்தி கெங்கையால்
வைத்தநற் சமாதியில்வதிந்தஉப்புச் சுண்ணமாம்
நத்தும்புட பாகங்கண்டு நாளும்நீ எடுத்திடே. 183

சுண்ணமென்ற குகையில்மூடிச் சுத்திசெய்த உப்பினை
வண்ணமாகச் சீலைசெய்தவ் வாறுபோல வெருவினால்
நண்ணியே அழலிலிட நல்லமுப்புச் சுண்ணமே
எண்ணினாலு மாகுமோ எளிதலவீ தாண்டையே. 184

வேதையென்ற மாற்றினுக்கு வெய்யநற் குருவுமாச்சு
ஆதியென்ற உப்புமாச்சு அதீதசொர்னஞ் சித்தியாச்சு
சோதிகாண வழியுமாச்சு துரிசுமே பளிங்குமயமாச்சு
சேதிசற் குருவருளால் செனனமில்லை யாண்டையே. 185

வேறு

மதிமயங்கிக் குருவருள் வழங்காமாந்தர்கள்
நதிமயங்கி நாதவிந் தறியார் நாதவிந்துவின்
பதிமயங்கிப் பலநாளும் பார்த் திருப்பாரவர்கள்
விதிமயங் கிச்சேட்டை செய்வினை யகற்றியே. 186

வெட்டவெளியாகு மிந்நூல் விபர மறிந்தால்
தொட்ட சரக்கெல்லாம் சுருக்கினில் வேதை
இட்டமாக வாழலாம் ஏகாந்த மாகவும்
கட்டமேது கனகமுன் கைக்ககப் பட்டதே. 187

வேறு

மாற்றுயர் வாயிரம் வழிபோற் சென்றாருக்குக்
கூற்றுவனேது குறையேது குவலயத்து
மாற்றமேது மண்பெண் ணாசையேது
ஏற்றும் வகையறிந் திருந்தார்க் காணாண்டே 188

மூச்சைப் பிடித்து முனைவழி மாற்றறியார்
பேச்சைப் பேசிப் பேடிபோல் திரிவார்
மூச்சினால் ஆவதேது முடிவுண்டாகும்
ஏச்சுவாராத ஞானிகட் கிழுக்கி தாமே. 189

வேறு

காற்றைப் பிடித்தடைத்த கரகங்கண் மூடும் கணக்கில்வருங்
கூற்றை யறிந்து குணா நுபவச் சுழிமுனைகண்டு
ஆற்றைக் கடக்கமயிர்ப் பாலம்யாரறிவார்
நேற்றைக் கிருந்தவ ரின்றில்லையென்பது நிச்சயமே. 190

சொன்ன ஞானவெட்டிச் சுருதி கண்டும்
பொன்னை மேவுவரோ பெரியோர் பொய்பேசார்
இன்னுமிவ் வுலகில் எத்தனைபேர் ஞானியானார்
அன்னை குண்டலி அடிமலர் அவாவினாலே. 191

ஆத்தாளருட்சத்தி ஆயிகுமாரி கன்னியவள்
பூத்தாட்பணியக் குருவருள் புனைந்து நிற்பார்
பார்த்தால் பரமம் படித்தால் பற்றொழியும்
காத்தாடிக் கயிறிந்தக் காயபாச மாண்டே. 192

வேறு

பாசக்கயிர் தெரிந்தும் பந்தமெனு மாபாசக்
கோசங்கள் தாண்டிக் குண்டலியின் தாளின்ப
நேசத்திலே கலந்து நிர்மலமாய் நிற்குமவர்
வாசற்குளன்றோ வையமும் வாய்த்ததாண்டே. 193

பாகினில் தித்திப் பெனப் பண்புடனார்ந்த
சாகசத்தில் சகலரும் மாய்ந்தார் சகதலத்தில்
யாகமுட னேத அதிக்ரமங் களினாலாமோ
யோகநெறிபற்றி நின்றார் யூகிகள்தானாண்டே. 194

அட்டாங்க யோகத்திற் காதாரம் அபிராமி
தொட்டாங்கு நின்ற துரியாதீதச் சுழினைதனில்
பட்டார்க்குக் காட்டும் பரமபதம் பாதகர்க்குக்
கிட்டாது கிருபையின் குருவழி கேளாண்டே 195

வேறு

சாதிமத சமயபேதமதிற் சண்டையிட்டுச்
சலிப்புற் றகங்கார
மாதியான வல்லலிலகப்பட்டு அலறி
அலகை போலுலவும்
நீதியேது மறியாமனுவர்க் கத்தினர்க்கு
நிலைக்காது எண்சித்தி
காதுபோன ஊசி கடைத்தெருவில்
என்செய்யும் கடினமிதாண்டே 196

வெட்கமே துமிலாதுவெய்ய வினைதான்
வெருவிட மிரண்டுகொண்டு
பக்கமேவும் பணியினார் அரவப் படமதனில்
பாகுதே னுண்டென்று
கக்கலைப்போற் குலவிநக்கிக் குலுக்கிதிரிந்து
குடிக்கு மடையர்கள்
சொர்க்கம் மேவச்சுருதி சொல்லுமோ
சூட்சம விந்தினையறிந்திடே 197

எக்கலிட்டிருக்கு மடுவுதனில் இழிவரோ
மனிதரிளைப்பாற இதனால்
கைக்கப்படுவ தெதுவெனக் காண்கிலார்
கடிதினில் நரகதுபுக்கி
மக்கியமிரு கண்களிற் பீளைசொரிய
மழலைபோற்குரலது தளரப்பின்பு
விக்கலிட் டிறப்பர் இதுதினமறிந்தும்
விடுபட வழிதேடு கிலாரே. 198

வேறு

மட்டற்ற செம்பொற் சோதி
    மரகதத் தொளிதிகழ் மனோன்மணி குண்டலி
பட்டப்பகற் போல்பரந்த வெளிதனில்
    பராபரை நடம்புரியப் பார்த்திருந்தும்
தட்டற்ற சுகவாரிதி யழுந்திச்
    சகச வாழ்வுதா னித்திய சண்டாளர்கட்குக்
குட்டிச் சுவர்மேல் குவலயத்தில்
    குருவருளால் முத்தி யாண்டே 199

சத்தந் தன்னொடு புலனைந்தும்
    சடலமிசை ஒடுங்கிச் சதானந்த மாயிருந்து
நத்தும துறையறிய நாடோறும்
    சற்சங்கமொடு ஞானநூற் கேள்விவேண்டும்
பித்தங்கொண்டுதலை கிறுகிறுத்துச்
    சரக்குகளைப் பேதிக்கத் திரியமூடருக்குச்
சித்தப் பிரமைதவிர வேறில்லை
    சித்தர்சொன்ன மறைப்பி தாண்டையே. 200

வீரம்பூரம் குருவண்டு நாபியும்
    விதியாகவே சேர்ந்தரைத் திடக்
காரம்ஏறும் கடிதான நேரமதில்
    காணுமே சதுர்சாமமே
சாரமோடு சவ்வாது தன்னைச்
    சமன்தனி யிடையதாகவே கூட்டிப்
பாருமே அதீத சுண்ணமே
    பகர்ந்தகுரு விதறிந்திடே 201

வேறு

இந்தவகை வந்தகுரு இன்னதென யாரறிவார்
விந்தையின் வேதைதனை விண்ணவரு மெச்சிடுவார்
தந்தையொடு தாயினுக்குத் தானிகர்ப்பரோ தரையில்
தொந்தம் பலகோடிவிதம் தோன்றிடுந் தொடுத்திடே.202

வேறு

பிந்துவுடன் நாதமது விகசித மதாகத்
தொந்தமுற வந்தவுடல் சொந்தம் நமதாச்சு
அந்தியொடு காலையு மருந்திவரக் காயம்
சுந்திரமும் கூடிடவே சொர்ணமதுமாமே. 203

அண்டபகி ரண்டமெலாம் ஆனவோ ருருவாய்க்
கண்டபடி யாகுமிது கனகமிதற் கீடோ
உண்டோ யிதன்பெருமை உம்பரு முரையார்
விண்டவர்கள் கண்டதில்லை மேன்மை பெறலாச்சே.204

அத்திமுத லீரெறும்பு வானவுயிர் கட்கும்
சத்தியுடன் நாதமின்றிச் சாவது முண்டாச்சு
சுத்தமிகு மிந்தமுறை சொல்லவுஞ் சடலம்
சித்திபெற வுற்றவழி செய்வதறி யாண்டே 205

சர்க்கரை யிருக்குமிடம் சார்ந்திடு மெறும்பு
பக்குவ மடைந்தவுடன் பக்ஷமிகச் செப்பும்
சற்குரு தமக்குவரச் சஞ்சலமு மில்லை
பொய்க்கதை படிக்குமவர் போகும்வழி நீக்கே. 206

திட்டமுடன் சற்குரு தமக்கு வரச்சித்தி
எட்டது கிடைத்திடும் இதற்குத் தடையில்லை
விட்டகுறை வாய்த்திட விளங்கும் பரிபாஷை
தொட்டகுறை முடிவுவந்து தோன்றுமுடனாண்டே 207

முன்னுரைத்த ஞானவெட்டி மூவைந்து நூறும்
பின்னுரைத்த எண்ணூறும்பேணியவை பார்த்து
இன்றுரைத்த வைந்நூறில் ஏற்றபடி தோன்றும்
என்றுரைத்த நூன்முறையில் ஏகுமுளைத்தோர்க்கே. 208

அப்புவென முப்புவென ஆயியவள்பாதம்
செப்பிய வகைப்படிக்குச் சேவை புரிந்திடவே
முப்பிறப்பில் செய்தபாவம் மூளவகை யேது
செப்பு புழுப் போல்மனது செப்பியழிந்தோர்க்கே. 209

வீட்டினிலே நின்றிலகல் விட்டு வெளிமேவிக்
காட்டினிலே சுற்றியதால் காணும் பயன்யாது
நாட்டினிலே பாரையுப்பு நானிலத்தி லுண்டு
பூட்டகமு ணர்ந்துதினம் பொருளெடுப்ப ராண்டே. 210

வேறு

தொடுகுறி சூதம்விந்து சுரோணிதக் கெந்திநாதம்
விடுகுறிமானிடர்க்கு வீண்வாத மேன்விளம்பும்
படுகுறி ரெண்டும்கூட்டிப்பக்குவம்பெறமுடிப்பார்
நடுகுறி விட்டுநீங்கா நாதர்கள் நவின்றார் பாரே. 211

உப்பினிற் காரசாரம் உவர்நீருமுவர் மண்ணுப்புஞ்
செப்பிய சுக்கானோடு சிலாக்கியஞ் சாரமாச்சு
ஒப்பிய நூல்களெல்லாம் ஓதிய முப்புவாச்சு
இப்பிறப் பறிவினோர்க்கு இதுதெளிவாச்சு தாண்டே 212

பற்றற்று நின்றுபார்பரமயோகிகட்கல்லாது
உற்றுற்றுபார்த்தாலாமோ ஓலமிட் டழுவார்தாமே
கற்றறிந்தா லும்காணாக் கசடர்கள் முப்பிறப்பில்
உற்றதோர் குறையிருந்தால் உறுதியாய்ப் பலிக்குந்தானே. 213

விந்துடன் சத்திநாதம் மேலுவர் நீரினுப்பு
சந்துடன் முப்புவாச்சு சலிப்பில்லைமாற்றமில்லை
இந்திரர் முதலாந்தேவர் இனியுனக் கேவல் கேட்பார்
மந்திரமில்லை சொன்னேன் மகத்தான மார்க்கமாண்டே.
214

பத்தியாய்த்தசமாம்பத்துப் பலிவுள தீட்சைசெய்து
உத்தியால் மூன்றும்கூட்டி உறுதியாய் புடந்தான் கோழி
எத்திடச் சுண்ணமாச்சு எழிற்குருதப்பாதாண்டே
செத்தவர் போற்றிரிந்து செகம்புரந் திருந்தி டாயே. 215

வெட்டவெளிபோற் சொன்னேன் வேறில்லை நூல்களாலே
பட்டதொரு பாடுனக்குப் பலனது மென்னாலாச்சு
தொட்டதோர் சரக்குகட்குத் துரிதெம னோலையீதால்
இட்டமுட சித்தியெல்லாம் என்னாலே யாச்சுதாண்டே.
216

வேறு

முடிப்பதென்றால் யெளிதல்ல முப்புவொன்றே யிகத்தில்
பிடிப்பதர்க்குநல்லாசான்பெரிது மநுபோகமொடும்
அடுப்பெறி யோகம்செய்கை அணுவளவும் தப்பலாமோ
படிப்பதில் பயனுமில்லை பக்குவம் முன்னூறு பாரே. 217

கருதிடும் மார்க்கத்தோடும் கைமுறை செய்பாகங்கள்
சுருதியோ டுத்தியனுமானமும் சொன்னேன்பண்டு
விரிதிறை யெனவும்ஞான வெட்டியான் மூவைந்நூறில்
அரிதிதன் அநுபோகத்தால் ஆமிகத் தெளிவா மீதே. 218

மதிசூதவிந்து மறைத்தார் மாநிலத்தி லிங்கம்
பதிவானதாகு மதுபரிந் தெடுத்துத் தூள்செய்தே
விதிபோலத் தோண்டிதனில் வெல்லரிய நாறிமூலி
அதிகாரமுடன் கூட்டி அசையாமலறிந்தது கொள்ளே.
219

அறிவோடுசீலைமண் ணேழும்செய்துஅனலேற்றி
நெறியாகக் காடாக்கினி நிமிடமது சோறாமலே
பறியாமல் வாலுகைமேல் பலமாக யேற்றியே
குறியாகச் சாமமொன்று குணமாக எரித்தி டாயே. 220

எரித்திடவு மேற்றோண்டி மேலு மெழிலதாய்ப்
பரித்திடும் கண்ணைப் பளபளப்பாகப் பனிபோல்
தரித்திடும் சூதமது தப்பாது வெகுசுளுவாம்
சரித்ததைப் பேணி எடுத்திடு சாகாதாண்டே. 221

குறிப்பறி யாமற்சடக் கொண்டார் செயரசம்
தெறிப்பேதுமாசேதில் தினையளவும்தோஷமேது
மறிப்பேது சுத்தியேது பார்க்கமு மினியுமேது
கறிப்பேது கவலையேது கனகமுமிது தானாண்டே. 222

தொண்டொரு சட்டியது சோதி மயமதாம்
மண்டபத் தீயிட்டு மாட்டிவிடு தீபத்தால்
விண்டதில்லை யிந்தவழி விட்டிடு நாதத்தைலம்
கண்டதில்லை விந்துவுந்தான் களைக்காது காணினியே. 223

முன்னமும் சொன்ரசம் முந்திடு யிடைக்கிடை
இன்னமும் தைலமது இனியதொரு நாதமும்
பின்னமிலா வெட்டையாம் பிசகாது குழிக்கல்லிற்
பின்னமும் நீர்விடுத்துப் பிரியமோ டரைத்திடாயே. 224

அரைத்திடு நாற்சாமம் அணுவும்கை சளைக்காமல்
உரைத்திடு சுத்தஜலம் உறுதிபடப் பின்புநான்கு
கரைத்திடு சாமந்தன்னில் கசிவது மற்றுப்போகும்
விரைத்திடு ரவியில்வைத்து வெளியேநீ எடுத்திடே. 225

அருக்கனைப் போலநிறம் அம்புவியி லதீதவிந்து
சுருக்கமது பற்பமுறை சுருதிகளில் சொன்னதில்லை
கருக்கவழி யாச்சுமுன்னே கண்டதொரு மார்க்கமெல்லாம்
உருக்கமுடன் அகலில்உறுதியாய்ச் சீலைஏழே. 226

ஏழது சீலைசெய்து எழிபடரவியில் வைத்துப்
பாழது போகாமற்றான் பக்குவமா யெருவும்பத்து
ஊழது ஏதுனக்கு உறுதியாய் பற்பமாச்சு
வாழ்வது வந்ததென்று வைரிபோ லிருந்திடாயே. 227

சூதமது பற்பமானால் தொட்டது முடியுமற்றும்
வேதையும் கோடாகோடி வெகுசுருக் கிதற்குமுப்பு
ஓதிடத் தானு மொப்போ உண்மையாய்ச் சான்னேனிந்தப்
பாதையை உணராமற்றான் பதர்களு மானாராண்டே 228

நீலியுடரசமும் முன்சொலும் பற்பமுங் கூட்டி
வேலியுடன் நின்றரசம் விரிவுறவதையும் கூட்டிச்
சாலவும் மூவிரண்டு சாமமும் கல்விற்பாய்ச்சிக்
கோலமா யரைத்துக்கொண்டு பின்பு நிம்பழச் சாற்றாலே 229

வேறு

சாற்றாலே ஐந்துசாமம்
சாடிடு வெண்ணை போலே
மாற்றாதே பின்னும் கேளீர்
மகத்தான கையான் சாறு
தூற்றேர்டே சேர்த்தும் பின்பு
துகளவே ஐந்து சாமம்
விற்றொடே அரைத்துப் போடு
மேலும் வெண் கருவினாலே. 230

வேறு

சோதியின் கருவைச் சொல்லவும் எளிதுமாமோ
வாதிகளினி வாரிதுதான் வர்ணம்செகச் சோதியாமே
சாதிசம யங்களற்ற சத்தர்களிதன் பெருமை
பேதியாமலு மறிவார் பிறவாத நிருவிடமே. 231

சாவலின் கருவதென்று சண்டாளர் கொலைக்குள்ளானார்
ஆவலின் கருவிதென்று அறியார்கள் அவனியிற்றான்
ஓவியக் கருவிதற்கு ஊறுசுரோணித நீரென்று
பாவியர் அறியமாட்டார் பகரறு திங்கணீரே. 232

திங்களுமாறு சென்றால் திகைப்பில்லாக் காடிநீர்தான்
மங்கல்வெண் கருவிரங்கு மகத்தான தாயுமாச்சு
சங்கைகள் வேண்டாமின்னும் சற்குரு வகத்தீசனார்
எங்களுக் குரைத்ததாலே இயம்பினோ மிதைவிட்டேகி.
233

விட்டுவெண் கருவினாலே விளைந்திடச் சாமமைந்து
மட்டும்நீ அறைத்தெடுத்து வாயகன் றகலில் வைத்துத்
தட்டற ரவியில் வைத்துத் தன்மையாய் அகலால்மூடி
இட்டிடு சீலையேழும் இன்பமாய்ப் பின்னும் கேளே. 234

வேறு

பின்னுமொருமுறை குக்குடம் புடமிடப்
பேசவும்தகுமோ வகல நீக்கினால்
இன்னதென் றதன்சோதியைச் செப்பிட
யாருளா ரிப்புவிமிசைச் சூரியன்
தன்னிலு மதன்வண்ணம் கண்கூசிடும்
சற்றுமே தவறாதிது பற்பமே
என்னிலத்திலும் ஈடிதற்கே யிலை
இயம்பினே னகத்தீச ரருளினால். 235

அந்தி காலையுமாக வருந்திநீ
அன்பினோடு மதனை யணுகினால்
சொந்தமாகப் புசித்தவர்க்கே தினிச்
சொல்லும் பல்வினையோடும் புகன்றிடும்

பந்தமாகுஞ் சஞ்சித வாகாமியம்
பாரினிற் கடற்புக்கிடும் மாண்டுமே
விந்தினா லுயிராகிய குருவிது
விண்டி லாரிதைக் கண்டவ ராண்டையே. 236

சொல்லும் பயறுடன் பச்சையரிசியும்
தூயவாவினன் பாலுமுட் கொண்டுமே
வெல்லும் மூலத்திருந்து சுகித்திட
வேண்வெண் பெரும்சித்தியும் கூடிடும்
கல்லும் கனகமதாகக் கனிந்திடும்
காயமோ மலைபோல வலுத்திடும்
நல்லவனென்று நாட்டி விருந்துமே
நம்பி யம்பிகையோகம் பயின்றிடே 237

தென்பொதிகையின் மீதில் விளங்கிடும்
செந்தமிழ் முனியா மகத்தீசனார்
முன்புதாரிந்த விந்துவினால் மலம்
மூன்றையும் பொடியாகவு மூதினார்
பின்பெனக் கவரோதிய மார்க்கத்தால்
பெருமையா யன்னை தன்னையும்சேவித்தேன்
நம்பினோர்க்கெந்தன் நூன்முறை யணுவதும்
நாட்டினிற் றவறாதையந் தீர்ந்திடே 238

அன்றவர் செய்தநற் றவர்த்தாலுமே
அம்பிகை பதமாய்ந்து தெளிந்திட
நன்றெனப் பஞ்சரெத்தின மைந்து
நூறாகவும் புவிமீதினில் நாட்டினேன்
குன்றமேவிக் குகையி லிருக்கினும்
கூடுமோ குருவன்றியும் குண்டலி
என்றனீஸ்வரி யாளருள் தானுமே
இந்தநூற் குருவாகுந் தெரிந்திடே 239

பூநாகச்செம்பு

நாகமென்றது பூமியில் வாழ்ந்திடும்
நல்லவர்க் கதனேகம் கிடைத்திடும்
ஆகமென்ற நான்குமுழ வாழமே
அன்பினாலும் சிவந்த நிலந்தனில்
வாகுடன் வரகாதி வைக்கோலதில்
வைத்துமே மண்ணைமூடிட மண்டிலம்
ஆகுமேலும் பிறித்து எடுத்திட
அகப்படுமவை பாண்டத்தில்வைத்திடே. 240

தூயமா நருமாவின்தன் பாலினில்
சுத்தமா மரைத்தாலு மகன்றிடும்
பாயுமே பலஞ்செம் பழத்துமே
பாலினிற் குழம்பாகக் கசிந்திடும்
மாயமா யரைத்தானு மெடுத்துமே
வன்னி யிட்டுமோர் சட்டியில்வைத்துநீ
தீயெரித்திடச் சிவந்திடுமே பினுந்
தீய்ந்துமே கருப்பாகும் கடிதினில். 241

வேறு

கொண்டொரு அகலில்கொல்லுலை யூதினால்
மண்டித்தீயிட மாசறும் செம்பதாம்
எண்டிசைதனில் ஈடிதற்க் கேதுகாண்
மண்டலத்தறி மகத்துவ மாகுமே. 242

அற்பமென் றிதனை எண்ணாமலே
உற்பவந்தனில் உண்மையா யோதிய
பற்பந்தன்னில் அரிசி பகிர்ந்துமே
தற்பவங்கெடத் தாக்கிடு செம்பிலே. 243

சற்குரு வகத்தீசன் தயவினால்
பொய்க்குரு வலசெம்பின் புகலறும்
மெய்க் குருவருள் விளங்குமே
பொற்குவியிது பூதலத்திலே. 244

வேறு

வானமொடு பூமிதனில் வாய்க்குமோ யிதற்குமிணை
கானமலை மீதினிலும் கனகமிதற் குயினி
ஈனமிலை வாய்த்ததுவும் ஏழெனவே நீயறிந்து
தானமும் வழங்கியே தணிவாக விருந்திடாயே. 245

ஆதிமறை சூதமுடன் ஆகமசு ரோணிதமும்
நீதியுடன் நீறுபட நீட்டிடவும் செம்பதனில்
சோதிமிக வானிது சொர்னம் வயதேழதுவே
வேதையும் வெகுளளிது வேணும் வழியாண்டே 246

அண்டர் முனிவரும் காத்திருந்தார் அமுதமிதை உண்டிடவும்
கண்டவ ருரைக்கவில்லை கையழிந்து குலைந்து போனார்
பெண்டிரொடும் வாழ்பவர்க்குப் பேராசையால் மனது
கண்டதினைக் கவர்ந்திடவும் கருத்தறியார்களாண்டே
247

கருத்தறியாமலும் மார்க்கந் துரையறியா மலும் கசடராய்க்
குருத்தெறி யாமலும்கோபி தாமிகளாகவும்
குலைந்தனர்காண்
திருத்தமிகும் சூதவிந்துசிவ சித்திநாத கெந்திவாய்நீர்
அருத்தமுணரார் அகில மிசைக்கோடி யாவராண்டே.
248

தொட்டுவிட்டுக் கைவிட்ட கோடி தொல்லுலகில்
சுட்டுவிட்டுக் கைவிட்டவர் கோடி சுரு;க்கிலுயிர்
விட்டுவிட்டு மடிந்தவர்கோடி மாய்கையிற்குள்ளே
பட்டுவிட்டுப் பதைத்தவர் கோடிபலி யாமலாண்டே. 249

வேறு

கனகமென் றதனைக் கரியாக்காது
மனமது வசப்பட வழியறியவுமே
தினகரன்போல் செனிக்காம லிருக்கும்
இனமறிந்திடு மார்க்க மெடுத்திடே 250

வேறு

முன்போற் பனிநீரதில் முனைந்துமே பற்பமதை
அன்போ டரைநீலி யவள்சாற்றாலைந்து சாமம்
மின்போல வெளுக்கும் செயமேவுரசமும் சமனிடை
தென்பாக மத்தித் தரைத்திடு திரும்பவுமே. 251

தாக்கிடு கெந்தி சமனிடைதாளக மரைதான்
தூக்கிடு கௌரி பாஷாணம் சிலைதொக்கவுமே
போக்கிடுவெள்ளையும் சமன் அரைசாம மைபோல்
ஆக்கிடுகுழிக் கல்லினில் அதைவழித்தெடுத்திடே. 252

ஓங்கிடும் மலைகள்மேலே உயர்கம் பம்போலும்
மூங்கிலென்றும் புகல்வார் மூலமாஞ் சாம்பலுப்பு
வாங்கியொரு பாண்டத் திட்டுவ்கை பெறவுமே
பாங்குடன் முன்சொன்னபடியொன் றிட்டிடே 253

உப்பினை யாழம்செய்து உலர்த்தியவதையும் வைத்துத்
தப்பிதமின்றிநீயும் தன்மையாய்க்காடாக்கினியால்
ஒப்பியே யாறுசாம மெரித்திட உருவுமாச்சு
இப்படியார் தான்சொல்வார் இதற்கினி உயிருண்டாக்கே.
254

வேறு

உயிர துண்டாக ஓவியமாகப் பின்பு
பயிரது வேலியின் சாறது படியுமாகும்
செயலுடனதிலரைத்துச் செப்பிடும் நீலியின்சார்
அயலுறவைந்துசாம மரைத்துமேமெழுகுமாக்கே. 255

வேறு

அறைத்திடு அந்தநீர்சுண்ட அழகாகச் சீலைசெய்
குரைத்திடப் புடமதும் குத்திடம் குளிரவிட்டு
விரைத்திடவ் வோடுநீக்கி வெகுபதன மாகவுந்தான்
பிரித்திடு வாய்பேசாதே பிணிகடல் புக்குந்தானே. 256

பஞ்சபாஷாண பற்பமிது பாரினி லாரறிவார்
மிஞ்சிய நோய்கள் தான் மேலாகா தோடிவிடும்
அஞ்சிட வேண்டாம் அரிசியிடை கொடுத்தால்
தஞ்சமென்றுனை அரசர் தாள்பணிவாராண்டே. 257

குட்டமோடு ஈளை யிருமல் குடல்வாதம்
நட்டமுறு மெய்வலிப்பு கசிவு மிசிவும்போம்
துட்டமெனும் சூலை கிரந்தி தொலைந்தோடும்
சட்டமதும் சொர்னமெனத் தான்வலுத்தேறுமே. 258

வேறு

மேனியது சொர்ணமென வேதிகழு மண்டலம்
தானுமுண வாசியது தணியுமேல் வாங்காது
ஏனுமினி வையகத் திருந்து பலவாக
ஊன வுடலாலு முயிரழிய வாண்டே. 259

வேறு

உற்பனக் கருத் தொண்ணூற் றாறினால்
பிற்பவத் துறும் பிழைக் கிடையாகும்
விற்புரு வத்திடை வேதை விசித்திரங்கோடி
அற்ப வித்தையிலை யாகுமறி யாரே. 260

வேறு

வழலையின்ன தென்றறியார் மாநிலமுழுதும் சுற்றினார்
அழலதில் உப்பையிட்டு அகங்குலைந்து வெம்பினார்கள்
விழலுக் கிறைத்தநீரென வெந்துசாம்ப லாய்க்கண்டார்
மழலையா மென்றாய் மகத்துவமுணர்ந்தார்க்கதுவாகுமே.
261

கருவங்கச் சுண்ணம்

வங்கமது வழியாய் மடிந்தால் மாந்தர்க்கதுதான்
தங்கமது வாகும்துறை யார்கண்டார் தரணிதனில்
சிங்கமது ராசயோகம் செய்யும் திறமையதனால்
பங்கமுறாது பலிதமிதன் வேதையதிகம் பார்த்திடே 262

உலகுதனில் வங்கந்தனை ஓதினார்பெரியோர் உடலுக்காக
இலகுமது தன்பெருமை இயம்பிடவெகுகடினம்
எண்ணுவாயே
விலகுமினிச் சலனம் ஐயமில்லைவியப் பொன்றுமில்லை
அலகைதனைப்போல் திரிந்தாலார் செப்புவா
ரறிந்திடாண்டே 263

வேறு

சுத்தியேது வங்கமிதற்குச் சுத்தசலமது
தனிற் றூய்மை யாகும்
வித்தையோ தினேன் பன்னிரண்டு
சாமம் விகசிதமதாக வைத்து

நத்தியேயுருக்கி யெருக்கன் பாலில்
நலமுடன் தோய்ந் தெடுக்கச்
சித்தியாகும் இனிச்சுத்தி வேறில்லை
தெளிந் திடாண் டையே. 264

வேறு

உருக்கியேநற் சுண்ணமும் உறுதியாய்ப்
பெருக்கினாற் சுழஞ்சி இடைபேணியே
தருக்கினா லதன்வீறு சளைத்துமே
அருக்கன் போலவு மாகுமறிந்திடே 265

கலக்க் மேனினி வங்கமும் கட்டிடும்
துலுக்க மேவெட்டை யாகவும் தோன்றிடும்
நிலைக்க வேகுகை தன்னினீ ரூட்டவே
வலுக்கு மேபொடியாக மடிந் திடும். 266

மடித்துமே குகை மாறி மறுதரம்
பொடித்துமே சுத்த கெங்கையைப் போற்றியே
விடுத்துமே யொரு சாமம் வியப்புடன்
கடுத்துமே யரைப் பாய்நீ கலுவத்தே. 267

கலுவத்தே யொரு சாமம் கடிதினில்
அலுவல் யாதுமே அன்றி அரைத்துமே
நலுவத்தால் ரவி நாட்டத்தில் வைத்திட
உலகத் தார்க்கிது உற்ற முறையிதே. 268

முறைய தாய்மாது நாத முணர்ந்துநீ
நிறைவ தாகக்க ழஞ்சி நீரூட்டிடக்
குறைவ தேது குருவிதற் கானதோர்
துறையி னாலினித் துப்புர வாகுமே. 269

ஆகும் வங்கம் அதனை யரைத்துமே
வேகும் பரிதியாம் வெய்ய லுலர்த்தியே
வேகமாய்க் கெச புடத்தில் வெளுத்திடும்
யூகமா ரறிவார்க ளுணர்ந் திடே. 270

உணர்ந்துமே மறுதரமும் உறுதியாய்த்
துணிந்துமே கரிசாலைச் சுருக்கிடப்
பணிந்துமே சீலைபாங்குடன் செய்திட
இணங்குமே யினிச்சேவற் புடமிடே. 271

வேறு

குளிர்ந்ததும் பரிந்தெடுத்துக் குறிப்பதாய்
விளங்குமே கோடிசூரியன் வெம்மைபோற்
பளிங்குதா னிதற்குப் பாரில் நிகராகுமோ
உளங்குளிர்ந்திடும் உண்மையீ தாண்டையே. 272

வேறு

வங்கமது தரணிதனில் செய்ய வென்றால்
    வாதிகட்காகாது மகத்தான கடினமது
பங்கமடைந்தார் பலபேர் வழலை யென்றிருந்தும்
    பரிபக்குவ முணராது பலிக்காமலும்
சங்கை யறுமிந்தமுறை சாற்றினார் எவருமில்லை
    சலுதியாய் யேக்கமது தானுமின்றித்
துங்கமுறும் வங்கமதைத் தொட்டு நோய்கள்
    துலைதூர மோடிக்கடல் புக்கிவிடு மாண்டே. 273

வேறு

காலை யொடுமாலை இருவேளை கதியெண்ணி
வாலை குண்டலியபிராமி மலர்த்தாள் தனைப்பணிந்து
ஞாலமதில் நோயாளிகட் கீய்ந்திடு நயமதாய்ப் பயர்தான்
ஓலமிடு நோய்கடாம் உறைத்தேன் அறியிதாண்டே. 274

ஓடிடும் சூலைக்கிரந்தி உற்றிடுமாந்தமோரெட்டும்
சாடிடும் வாய்வுவிக்கல் சன்னி கக்கலொடுசூதகம்
நாடிடும் சேத்தும நோய்கள் நல்லரவெனக் கண்டுசாகரம்
தேடிடும் வங்கபற்பம் சிவபற்பமிதனை யறிந்திடே. 275

குன்மம் வச்சிரகண்டம் கொடிய மகோதரமும்
அன்னத்துவேஷமும் அரியமேகமிருபத்தொன்றும்
பன்மையாம் காசமும் குலைப்பும்படர் வெள்ளைக்குட்டமும்
நன்மையாம் நாள் மூன்றருந்த நலிவுற்றிடுமே 276

தக்கதொரு வநுபானத் துடனருந்திடச் சண்டனில்லை
தொக்கதாம் பிணிகளோடும் துலைதூரம் துயர்கள் நீங்கும்
மிக்கவுமுண்டால் உடல் கருக்கும் மேனியுந் தாங்காது
முக்கிய மிதையறிந்து மூன்றுநாளுண்ண முனைந்திடே
277

எடுத்திடு பணவிடை இனிமையாய்ச் சூதமேல்
தொடுத்திட ரசிதமாம் சுருக்குவெகு கவனமாய்
நடத்திட வழியறிந்தால் நாட்டினில் துக்கமில்லை
கெடுத்திடு மாசைநீக்கிக் கிருபை பெற்றிருந்திடாயே. 278

உள்ளிய ரசிதந்தன்னை உருக்கியே சமனெடுத்து
வள்ளவும் பரியிலீய்ந்தால் வேதையு மெண்மாற்றாகும்
கள்ளமு மொன்றுமில்லை கடிதிது கருத்தில் கொண்டால்
சள்ளையுமில்லை சொன்னேன் சாஸ்திர நுட்பமாண்டே
279

வேறு

உறுதியா யகத்தீசர் உரைத்திட்ட
சுருதிபோல் முறைசொல்லவும் கூடுமோ
கருதியேபடி காத்திருந் தாலுமே
அரிது இம்முறை யாருமறிவாரோ. 280

பொய்க்காதன் மடவார் போகத்தில்
மொய்க்கா மலும் மோனம தாகவும்
கைக்கானபடி கனகஞ்செய் துண்டுமே
மெய்க்காய் சித்தி விரைந்திடே. 281

வன்னியும் வாயுவு மப்புவும் வாய்த்துமே
நன்னியம்பெற நன்மையாய்க் கூடினால்
இன்னிலந் தனில்முப்பு வென்றாச்சுதே
பின்னுமற்றும் பிறப்பகற் றும்மிதே. 282

யோகிகட்கிது மண்டலம் உண்டிடத்
தேகமும் பிலமாக வலுத்திடும்
ரோகியென்று யிரப்பவர்க் கீந்துமே
போகம் நீக்கிப் பொருளை யறிந்திடே. 283

சன்மமே தினிச்சஞ்சல மில்லைகாண்
கன்மமேது கடல்புக்கி யோடிடும்
இம்மையோக மறுமை யிழித்திடாத்
தன்மையே வந்துதான் சித்தியாகுமே. 284

உண்மை ஞானவெட்டி உரைத்தநூல்
திண்மை தானறிந்தே குறிகண்டிடில்
பெண்மை யேதுபிறழா துடற்குளே
அண்மையா மம்மை அருளும் விளங்குமே. 285

வேறு

சொல்லிய முனியோடுந் துரிதமா யமுரிச்சுண்ணம்
வல்லமையுடனே சூதம் கழஞ்சிட வடமாயின்னும்
மெல்லவே விடுகல்லுப்புஞ் சாரமும் பதனமாக
நல்லதா முப்புவந்து நிற்கும் நானிலத்தி லாண்டே 286

உத்தமமாய் ஈறெட்டுச் சாமமரை இருகவும்
வித்தகமாய் மெழுகுபோல் வருமளவும் விரைவினிலே
நத்தியே விடுகெந்தித் தைலம் நயம்படப்பின்பு
சித்தியாகு மிதுரெண்டு சாமமரை திடமுடனே. 287

திடம்பெறவும் ரெண்டு சாமம் திரும்பவுமரை
படமரவஞ் சீறும்பார் கெந்தித்தைலப் பான்மையினால்
அடம்படவு மினிவிடுமேனிச்சார் அதுவும் நான்கே
உடன்படவும் சாமமரை உறுதியினி யாண்டையே. 288

தொல்லை வராமலு மரைத்துச் சுருக்கிவிடு கவசம்
அல்லலேதுயினி அருணன் முகம்பட வைத்து
மெல்லவுமெடுத்துச் சில்லிட்டு மேல்முடிச் சீலைசெய்து
வல்லமையாக மணற்கொட்டி எரித்திடே. 289

வேறு

வன்னியிட்டு யெரித்திட மேலுமே
அந்நிறமும் முருக்கன் மலரது
என்ன நாளுமிலங்கு மிமையவர்
நன்னயமுடனாடுவ ரித்தையே. 290

வேறு

செந்தூரமிது செயசூதரசகெந்தி சேர்க்கையால்
விந்தூறு முடற்குருதி வினாடிதனில் நாடிமிசை
வந்தூறும் காயம் வலுக்கும் கூற்றவனும்
நொந்தோடுவ னித்தைநுகர்ந் திருந்தாலுமே. 291

ஆச்சுது செந்தூர மரிதாகு மிதிற்பணவிடை
பாய்ச்சிட ரசிதம்கனகம் பார்வேதையுஞ் சுலபம்
ஆச்சரிய மாற்றுமெட்டு அவனியில் கண்டவுடன்
கூச்சலிடு வகத்தீசர் குருவருள் வாய்த்ததென்றே. 292

வெண்கார காப்பு

தரைக்குள் வெண்காரவைப்பைப் பற்றியார் சடுதியாக
உரைப்பதற் கந்தமார்க்கம்உள்ளமும் கபடமில்லை
தெரிப்படவும் காரைவைப்புத் தெரியாமல் வேதையாமோ
சரிப்படாது முறைதெரிந்து சங்கையற் றிருந்திடே. 293

கல்லுப்புடன் பூநீரெண்டும் கடிதினி லொன்றதாய்
மெல்லவுளுத் தமாவுடன் மேன்மையா மணிவித்தும்
வல்லமை யாங்கள்ளிவளஞ்சேர்பாலுமென்றாய்த்
தொல்லையே யறச்சீலையதும் தொக்கவு மூட்டிடு
வாண்டையே 294

வைத்திடுமண்டலம் குழிவெட்டி வகையாய்ப் பாண்டம்
நைத்திடும் பூமிதனில் நாடிப்பின்னெடுக்க நவின்றிடும்
பொய்த்திடுமோபாரு மினிப்பலகைபோல்நின்றிடும்
பைத்தியருக்கோ இதுசொன்னேன்
பார்தனில்சூட்சுமமிதே. 295

பிசகாது யிந்தமுறை பிரியமுட னறிந்தபேர்க்கு
நிசமாகும்வேதைதான் நீடியவெண் காரவைப்பால்
ரசவாத மோடுநல ராஜயோக மதுதான் சித்தி
உசவாத வீணருக்கு உதவாது யிதுதானாண்டே. 296

வேறு

சோகை நீரினிற் சுத்தியா முப்பதும்
ஆகுமென்று மநேகர் அறிவாரோ
மேகநீரென்று வீணில் விளம்புவார்
ஏகநீரன்னை நீரது வென்றுமே. 297

என்றுமே தசதீட்சை இசைந்துமே
நன்றுமே பெறநாட்டிடிற் கற்பம்
ஒன்றுமே உலகற்கது முப்புவாம்
சென்று பார்த்தவர் சேதிவறிவர்காண். 298

தொந்தவேதை
வேறு

தாளகந்தனைத் தாக்கிடு சுருக்கினிற் சட்டியில்
மாளவும் சுத்கெங்கையை மாட்டிடு சுருக்குமே
மீளவும் தீபந்தன்னில் மெதுவாய் விடுத்திடு
வேளையுமொரு சாமந்தன்னில் வெம்பிக் கட்டுமே. 299

இன்பமொடு சற்குரு இசைந்திடில் யாவருக்கும்
அன்பினால் வேதை அத்துடன் யோகமாகு மம்புவியில்
நம்பியே காமக்குரோதலோப நாசமதி மோக மாச்சரியம்
வெம்பியே விட்டால் மெய்க்குரு விளங்கு முண்மையே.
300

காரமென்ற பூரமது பலந்தானொன்று கண்டுமே
சாரமென்ற சுத்தஜலம் சாடிவிடுதிரி சாமமும்
வீரமுடனிரவியிலிட் டதைவழித்து வெகுபதனம்
தீரமுடன் வெண்கருவால் திரும்பியாட்டே. 301

ஆட்டியே வெண்கருவும் அதைமென்மேல் விடுவழகாய்ச்
சூட்டியே லிங்கமதைத் துரிதமாய்ச் சேர்த்தரைத்துமே
நீட்டிடு முப்புக்கழஞ்சி யிடைநிச்சயமா யகலிலிட்டுச்சீலை
ஊட்டிடுவா யேழுமுறை உறுதியாய்ப் புடமுமாண்டே.
302

குக்கிடபுட மதுகொண்டு குளிர்ந்த பின்னெடு குவலயத்தில்
மிக்கவும் இதையாரறிவார் விவேகிகளுணர்வார் வேதையாகும்
ஒக்கமும் செந்தூரம் விட்டாட்டு வெண்கரு வொல்லையில்
தக்கவும் தரமேழுபுடம் குக்கிடம்தன்மையாண்டே. 303

லிங்கமொடுபூரம் இரண்டெனி லிலகும் சூதஞ்
சிங்கி செந்தூரமும் தொந்தமிது செய்வது வெகுவேதை
பங்கமேது பாரினிற் பார்த்தெடு சுயம்புவாகும்
வங்கமீதினில் தாக்கிது வன்மையாய் உலையிலே. 304

உருக்கு முகந்தினிலீந்திட உடனேகண்விட்டாடும்
தருக்குமில்லை முன்சொன்ன முப்புவிடை தான்கழஞ்சி
பெருக்கவும் நீதாக்கிடு பேதகமில்லை வங்கமும்
சுருக்கினில் ரசிதம் சோதிமயம்சுயம்பிரகாசமே. 305

சோதிமயரசிதம் வங்கம் தொடுமுப்பு வினால்
பேதகமாகுமிது பேசரிது பெருமையா ரறிவார்
வாதிகள் கூடிமயங்கினார் வாயாறச் சொன்னேன்
நீதியுடன் ரசிதம் தன்னொடு நேர்மையிதே. 306

கொண்டிடுரசிதம் சமனிடை குலவியே செந்தூரம்
மண்டிடு துருத்தியில் மாட்டிடு குகையிற்றானும்
கண்டிடு சாமந்தன்னிற் கனகம் வயதுபத்தரை
விண்டவர்யார் என்போல் வெகுசுலபமீதாண்டே. 307

வேறு

இந்தப்பாகம் அறிந்தவர்க்கே தினி
முந்தும் பாவவினையும் முளைத்திடா
தொந்திப் பானவறுமை தொலைந்திடும்
சந்திப்பா மகத்தீசன் தயவினால். 308

வேறு

கானகத்தி னுப்பதனைக் கண்டறிந்துகாரமெனும்
பானகத்தினோடு சுத்தி பாலித்தால்-ஊனசுத்தில்
மாசில்லைமாற்று மருளில்லை ஈதறிந்து
ஊசரத்தைக் கண்டு உணர். 309

ஈரைந்து தீட்சை எழிலாகச் சுன்னமதில்
சாரந்தனை யுணர்ந்து சாதித்து-நீரிந்த
மண்டலத்தில் மாயோகம் மாசித்தி வாய்த்திடவும்
கண்டு கடைத்தேறக் கருது. 310

வேறு

சடமிருந்தா லன்றோசாதிக் கலாம்யோகம்
திடமிருந்தா லன்றோசித்திக் கும்வாசி
விடமானவரவம் விட்டோட்ட வேணும்
உடல்போனா லுனக்கு உறுதியே தாண்டையே. 311

குடமது உடைந்துபோனாற்கூடும்ஆகாசம்போலத்
திடமது குறைந்ததானால் சிலேத்தும மீறிப்போகும்
நடமிடும் குண்டலியாம் நாரியவள் பாதம்நம்பிச்
சடம்இது இறுகுமாறு சாதித்திடு நாளுமாண்டே. 312

மனைவிமக்களோடு மண்ணாசையால் மயங்கி
வினைகளைமேலும் கொள்ளும் விவகாரங் கழன்றுவிட்டுப்
புனைந்திருந்திடாது தனித்துப் புதுமையாய்ப்
பதுமையென்னத்
தனியதா யிருந்து அந்தி சந்தியும் சாதியாண்டே. 313

துறவியெனவும் வேடம்துலங்கவும் வழக்குப்பேசி
மறலிவாய்க் குள்ளேசிக்கி மடிவார்கள் கோடாகோடி
இறையவ னடிமலர் ஏத்திடாப்பதர்கள் தமக்குப்
பிறவியும் கோடாகோடி பிசகில்லை அறிந்திடாயே. 314

முப்பாவ தென்னமுடிந்த பேர்க்கன்றோ மொழிந்தேன்
துப்பாளி யறிவான் தொடர்மலமாய்கைக் குள்ளாய்
இப்பாரதனிற் பொய்வேடமிட்டுப் பொருள்பறிக்கும்
தப்பானவர்க் கில்லையது சண்டாளர்க் காகாதாண்டே.
315

அட்டாங்க யோகம் அதுபலித்திட அருளும்முத்தி
தொட்டாங்கு நின்று துணையாயியமநியமாசனம்
பட்டாங்கிலுள்ளபடி யறிந்து பாலிக்காதார்க்கு
முட்டாகும் முப்புமுடியாது மொழிந்தேனிது சத்தியமே 316

இயமமொடு நியமாதிகளை நீக்கி இட்டப்படி கள்ளும்
வயமதாய்க் கஞ்சா வபினொடு வனமூலி தனையுமுண்டு
நயம்பேசும்சண்டாளர்நாட்டினி லறியாவண்ணம்
பயமாகச் சொன்னேன் பரிபாஷை யுணர்வார் பக்குவரே.
317

வேறு

பக்குவர்க ளறிவார் சற்
குருவால் பார் பயமேதுமில்லை
நற்கரு மாதிகளை நீக்கி
நாட்டி லலையு முலுத்த ரறியார்
தற்குறியாகத் தடித் தனமாய்
வாய்வாதம் பேசும் சழக்கர்கள் தாம்
மக்குவார் வாதம் செய்து
மண்ணாக மண்ணோடு மடிந்தே. 318

வேறு

இட்டனர் சித்தர்கள்தாம் சாபம் இயைபிலா மாந்தருக்குத்
தொட்டதும் கருக்கும் அன்றித் துலைதூரம் பரக்குமென்று
விட்டகுறைவந்தால் வாய்க்கும் வேணும் சாந்தமுமன்புமிது
மட்டுடன் வாய்மை தூய்மை வள்ளன்மை அருளுந்தானே
319

அண்டபிண்ட சராசரம் அனைத்தையும் ஆதியுப்பாற்
கண்டுகொண் டேனென் குருகருது மகத்தீசனருள்
உண்டு அதன்சூட்சமம் ஓதினேன் ஞானவெட்டி நூலதில்
மண்டலத்தில்முப்பு வழலைமார்க்கமும் தெளிந்திடே 320

சொன்னதொரு வுப்பது சுயம்பிரகாசநீரதில்சுத்தி
பின்னமேது பிசகாதே முறைபிறழாதுமே முடித்துத்
தன்னையேயறியத் தணித்துத் தணிவதாய் கற்பமுண்டு
அன்னை யபிராமி யவளருள் நாடி அமர்ந்திடே. 321

விந்துவுடன் நாதம்கூடி விளைவான திந்தவுடல்
அந்தத் தந்திரந் தானறிந்தால் அறிவுண்டாச்சு
தொந்தமே செய்ரசசூத விந்துசுத்த சத்திநாதம்
கெந்தியொடு மென்போற் கிருபையால் சொல்வராண்டே
322

தொந்திடச் சுருதியுடன் யுக்திதோண வேண்டும்
தந்திரத்தினை யறிந்தவர்க்குச் சடலமது வலுத்துப்போகும்
அந்தரத்தினில் நின்றிலகலாகும் ககனவெளியி லதனால்
வந்துசித்தித்திடும் வண்மையாம் ரசகுளிகை யாலே. 323

துருசுநீறு – வேறு

தூக்கிடு ரசபூரவீரமதில் துணிவதாகத்
தூக்கிடு சுத்தகெங்கை துரிதமாய்ப்
போக்கிடு குழிக்கல்லில் புதுமையாய்
நீக்கிடு மயனமாய் நெறியிதே. 324

நெறியதாய் வருமெழுகை நீயுமே
குறியதாய்த் துரிசதைக் கொண்டுதான்
தறியதாய்க் கவசமும் சாடிடு
சிறியதா யிரண்டெரு தேர்ந்திடே. 325

தேர்ந்தெடுத்திடு திரமாய்த் துரிசதும்
சார்ந்திடும் சுயச்சுண்ணமா மிதனால்
ஆர்ந்திடும்ரசம் ஆடிடும் பிட்டதாய்ச்
சார்ந்திடு மிந்தச் சூட்சமந் தன்னினால். 326

சூதமணி - வேறு

சொல்லொணா ரசசூதவிந்து தொகுத்திடு சட்டியில்
வெல்லொணாத் துரிசதின் சுண்ணமே யதில்மேவிடு
மெல்லவும் வன்னியிட்டு மென்மையாக வெரித்திடு
வல்லராசனும் சிறைவசமதாகு மாண்டையே. 327

சூதராசன் சிறைபட்டுப் பிட்டென சுழன்றான்
வாதராஜன் வகையான தால்மத்தை வகிர்ந்துந்
தீதுமேயறத் தீபமேயிடு திரும்பவும் செம்மையாய்ப்
பூகமேயென வெண்ணைபோல் புரண்டிடு மாண்டே 328

வேறு

வாய்த்திடு மத்தை தன்னில் வளமதாய்த்
தீய்த்திடு தீபத்தால் திரும்பவும் தசமுறை
சாய்த்திடு பொன்மூலிச் சாரமதில் பின்புமே
பாய்த்திடு மணிபோ லாச்சு பாரினியாண்டே. 329

பின்புநீ யெடுத்தொரு பீங்கானி லிட்டுமே
அன்பதாய்க் கையா னதன் சாற்றினால்
தென்பதாய்க் கொடுப்பை சுருக்குத் தீவரத்திட
இன்பதாய்ச் சாரணை ஏற்றிட ஓடுமே. 330

ஓடுமே ககனமிசை உறுதியாய் யோசனை தான்
நீடுமே அண்டரண்ட மெல்லாம் நிலையதாய்த்
தேடுமே யதைவிடா மலும்தீப தூபமிட்டுப்
போடுமே யிதனாற் புனிதராகுவர் காணாண்டே. 331

சாதித்திடும் மோகிகட்குத் தானதுந் துலங்கும்
வாதித்ததி னாற்பயனும் வழங்காது மார்க்கம்
சோதித்துமே சூதமணி சூடியே விண்சாரி
பாதித்திடு வார்பரம சற்குரு பரனாலே. 332

வேறு

சோதித் துரிசத்தின் சுண்ணத்தால் சூதமும்
ஆதியொளி மணியு மாந்தானே-சேதி
அறிந்தார் முடிப்பார் அறியார் மதிமயங்கி
வெறியார்போற் றானலைவார் வீண். 333

தாளக நீறு

புகலுகிறேன் தாளக நீறுபுனித முடன்
அகலுமே நோய்கள் அணுவும் கைதப்பிடா
துகளு மாதிமூலியினால் தோன்று முடலும்
சகலமும் வலுக்கும் சந்தேகமில்லை யாண்டே 334

அமுரியினாற் றாளகத்தை அரைத்து மைபோல்
குமுறிவிடச் சுண்ணமதிற் கொஞ்சமிடு நீதான்
அமைவளவும் வட்டோடு அடுப்பிற் கேற்றி
சமைவுபெற வன்னியிட்டுச் சமைத்திடு மாண்டே 335

அனலிடவும் அதுகருத்து நீர்வர ண்டுமே
புனலெனவும் போமதற்கும் புதிதாம் வாழ்வு
கனகமுடம னதன் நிறமும் கருத்துக் காணும்
இனமுடன் பின்னதை வழித்துக் குழிக்கல்விடே 336

இட்டுமே குருமூலி இதனாற் சாமம்
மட்டுமே மயனம தாகவும் பதமாய்
விட்டுமே யரைத்து வில்லைசெய் ரவியில்
பட்டுமே புடம்குக்கிடம் பிசகாதிதே. 337

பிணமதாகிலும் வாய்திறந்து பேசுமொரு நாழிகையேனும்
குணமதாகும் கொடுநோய் களுக்குக்காலன் குவலயந்தன்னில்
மணமதாகு மகாகேசரி மெழுகிதன் மகத்துவத்தினை
உணவின் காரமறும் உந்திக்கமலச் சுழினை உற்பவமே338

வேறு - மகாகேசரி மெழுகு

பாஷாண மென்னப் பளிங்குபூரம் வீரம்பரிவுறவும்
வேஷாண மேதுகௌரி மனோசிலை வெள்வங்கம் நிமிளை
ஆஷாட பூதிபோலலை யாமலும்தாம்பிர மயம்வங்கம்
காஷாயமான குடவன் லிங்கமும்காணாகமதே. 339

காரமெனும் சிங்கிரசிதம் வெங்கலம் காணரிதாகும்
தாரமுடன் ரசசூதம் சத்திநா தம்கெந்தி யிவை சமனாம்
நீரதுதான் சுத்தஜலம் காரசாரம் நேர்மையாய்க் கரைத்துத்
தீரமுடன் லோகங்களவை தூளதாய்ச் சிதைத்திடாயே. 340

சூதரசமதனைத் தொந்திகெந்தி சுகமாம் சத்தியதனால்
ஆதிநவபாஷாணமும் அவைதான் பொடி அணுவும் தவறிடாது
ஏதமேதினி எங்குமம்புவி மிசை இனிக்காரசாரத்தினால்
நாதமொடு குமுறவடுப்பேற்றி நளினமா யெரித்திடாயே. 341

காலைமாலை யிந்தப்படி சுண்டிடவும் கடினமதமாய்
வேலையாகும் வெகுவிகசிதம் மேன்மையிதை யார்காண்பார்
சேலைமூடு மாதராசை செகதலத்தற்று வாலைதிருவருட்
பாலையுண்டு காலைமாலை பணிந்தவ னிருந்திடாண்டே. 342

பாச்சிடு செங்குமரி நீர்ப்பனிபோலு மாதவிடாய்நீரதே
கூச்சலிடும் சரக்கெல்லாம் கூவென்றலறிக் கட்டும் மெழுகதாய்த்
தீச்சலிடாம லும்பதனமாய் நீர்சுண்டு மட்டும் தீயுமிட்டு
ஆச்சுதென்று அம்மைகுண்டலி அடிவணங்கியாறவிடே. 343

எடுத்திடு நற்குகையில் இன்னலறச் செம்பிட்டுருகியபின்பு
கொடுத்திடு பச்சைப்பயறளவு குலவும்துரி சகன்றுபோம்
மடித்திடு மதன்களிம்பு மாசறும் மாவேதை யிதுயார்தான்
தொடுப்பாரிவ் வையகத்தில் துரிதமாம்
வேதையீதாண்டையே. 344

பேதமற்று விலங்குமெய்ஞ் ஞானப்பெரியோர்கள்தாம்
ஏதமுற்று வாடாமலும் இரந்துண்ணா மலும்
வாதமுற்று விற்றுவழி பார்த்திருப்பர் வகையிதுகாண்
தீதகற்று மகாகேசரி மெழுகுசெகதல மீதிலறிந்திடே. 345

பூமிதனி லின்னமும் புகன்றிடும் பித்தவாத சிலேத்துமம்
காமியற்கு மேதரிதுகாண் கடிதினில் பயறதன்வீதமாய்
வாமியபிராமி யவளடிமலர் வணங்கியுஞ் சிரமதில்
தாமிதம் பெருமை யுணரத்தாக்கிடச்
சந்தேகமில்லைதானே. 346

வேறு

செத்தவரு மெழுந்தொரு கணமேனும் சேர்ந்துநின் றவரை
நத்தியுமுரைப்பர் நடுக்கமுறார் நாதனுயிர் விடுக்குமட்டும்
பித்தசன்னியும் துலைதூரம் போகும் பேசாது கடல்புக்கிடும்
முத்தணி மாதர் முலைப் பாலில்முனைந்து பயிறளவீயவே.
347

இலங்கு மிளகுடன் முக்கடுவும் சமனதா யிசைத்த ரைத்து
நலங்கிளர் நல்லாவின் பாலுடன் கூட்டியே நயந்துமேவிச்
சலங்குமுறும் மேகம்பதினெட்டும் சார்ந்திட்ட பிணிகளுக்கும்
துலங்கிடவும் பயறளவு நீட்டத் தோன்றா தோடுமேகமே.
348

வேறு

கருத்திடுங் கையானுடன் சங்கன் கருந்துளசி
யிவையின் சாற்றில்
கருத்துடனும் பயறளவு மகாகேசரி
மகராஜமெழு கிழைத்துப் புவியில்
பொருத்தி யருந்திடவும் கொடுபோகும்
காமாலை சோகைபலவும்
வருத்தமினி யேன்உலகுள வன்பிணியெலாம்
நாசமாமே. 349

சுக்குடன் கஸ்தூரிமஞ்சள்
கடுக்காயிவை பொடிக்க வளமாய்த்
தொக்கவும் யிடுசமனாய்த்
தொந்தியதில் மெழுகு பயறது
விக்கலுடன் மேவுவிப்புறுதி
விஷப்பாண்டு விண்டிட்டேன்
தக்குமோ சடலமுயிர் பிரியாதுதரை
தனிலாச் சரியமாண்டே 350

வேறு

துரிதமுடன் காயசித்தி தோன்றுமுடல் வலுக்கும்
பெரிதரிதென வென்றும் பிசகாது வாசிகட்டும்
அரிதுதான் மகாகேசரி அதன்மகிமை யாரறிவார்
விரிதிரைப் புவிதனில் வீணர்க்குதவாதிதுவாண்டே 351

தபகுண்டலி மூலாதாரத் திருந்துபொழிந்திடுமமுதம்
ஆபத்தில்லை யினியுடற்கிதை யநுதினமு முண்டுவரத்
தாபமேது வையகத்தில் சாவேது தகமையோடுங்
கோபமோடு மகங்காரம் கொள்ளியிட்டுக்கட்டிடே 352

தப்புமே உப்புறைப்பும் புளிப்புத்தள் ளாதிருந்து
ஒப்புவாத ரல்குல்உரக படந்தனில் நிலைத்துச்
செப்பும் நோய்கள் பலவும் மென்மேற் பெருகவுமாசை
கைப்பும் விடாதவர்க்குக் கிருபையே தாண்டே 353

சீலமாய் வாசிஉனக்கு ளடங்கச் சித்தி யாம்காயம்
வாலிபனாய் வாழ்வாய் வருவார்களுன்பாற்சித்தர்
தூலமும் கடந்துசூட்சம தேகியாய்க் ககனமேவி
ஞாலமீதிருக்க ஞாயமிதுகல்லவனாயிருந்திடாயே. 354

சனகாதிகள் முன்கண்ட சச்சிதானந்த ரூபகற்பம்
கனகமதாகும் காயம்கல்லுடன் வாள்வில்லடி யேறாது
வனிவுகலை யாதியிடைபின் னிரண்டும்விர வியேமூலக்
கனலைமேவும் சுழினைகாணும் கபாடத் திறந்தே. 355

வேறு

காலையொடு மாலைகடுகளவும் பிசகாமலும்
பயறதுதான்
வாலையவள் பாதம்பணிந்து வாசியுடன்
கூட்டியுண்ணவும்
சீலமுடனோடும் தொல்வினைத் தோஷம்
பறக்கும் திகைப்பில்லை
பாலனென்ன வானம்பூமி யிரண்டிலும்
வாழ்வாராண்டையே. 356

வேறு

காயம் வலுத்திடும் கவலைக் கடல்மூடும்
ஆயுளிவ னுக்குமிது வென்னலு மாகாதே
ஓயும் மனோவிருத்தி உடலில் குருதிவாயும்
மாயும் வகைக்கிதை மாற்றயா ரறிவாரே. 357

காமப் பாலுண்டுங் கருத்தை யழிக்காது
வாமப் பாலமுரி வழங்கிவைய கந்தனிலே
நேமகத் தோடுநிட்டை தனிலிரு ந்திடில்
ஏமனேது இனியிழுக் கேது ஆண்டையே. 358

ஒத்துப் பாய்ந்திடும் உலகில் திரிதரும்
பத்துத் தசநாடியும் படிந்து ஒருமித்துச்
சுத்த சிவாநந்த சூட்சமது கையுறும்
வித்தை பஞ்சரெத்தின மேன்மை யறிந்திடே 359

அண்ட மொடுபிண்ட மாதார வாசியதால்
விண்டிடவு மாகாதிதன் மேன்மை பூதலத்தில்
கண்டதுவும் காயமெனும் கற்பத்து றுதியதால்
பண்டு செய்தபாக்கியம் பலிதமு மிதாண்டே 360

கற்பமது கலந்துதின முண்டிடக் கலக்கமுடன்
மூற்படு மரவதுங் கடித்தாலு விஷமேறாது
சொற்பமாம் பலவிஷமும் துயர்தராது தோன்றும்
அற்பமா ந்தருடன் கூடியழி யாமலுமாண்டே 361

சூதநீறு

செயரச சூதமொரு கலுவத்திட் டுச்சிறப்புடன்
நயமெனு முமிநீர் சுத்தசலம் நாட்டிமத்தித்துப்
பயமுடன் தகரைப்பனிச் சாறலாவி யறிந்துமினிச்
செயமிதி லதிசூட்சமம் செந்தீயி லெரித்திடே 362

எரித்திட வும்பாலாடை போலுமினி மையாகத்
தரித்திடு மேல்வழித்துத் தனித்துமே ரவியிலுந்தான்
பொருத்தியே நீர்கண்டப் பொலிவுடன் குகைதன்னில்
இருத்திடச் சுண்ணமாம் குகைச்சுண்ண மிதாண்டே 363

உருக்கிடு வெள்வங்கம் உலகுதனிற் பதறாமலும்
பெருக்கிடும் சுண்ணமீயப் பேசாதுகண் விட்டாடும்
சுருக்கினில் ரசிதம் தூய்மை சோதிபோல் துலங்கும்
அருக்கனைப் பழிக்கும் அரிதரி தாண்டையே. 364

சுண்ணமு மரிசியிடை சுருக்கத்தில் காலைமாலை
திண்ணமா யுண்டிடவும் திரேகம் கனகமாம்
எண்ணமே யலையாது ஏகாக்கிரச் சிந்தையாம்
நண்ணுமே குண்டலிநாரி யவள்பதந் தன்னிலே. 365

நாட்டிலே சிவயோகி கட்கிது நளினமாய்ப்
பூட்டகந் திறந்திடும் புறட்டில்லை யந்திசந்தி
தாட்டிக மாயுண்டு சடலத்துறுத்தி கூட்டியுச்சி
மேட்டதி லேறிவெகு சூட்சமித றிந்திடே 366

வாதநோய்களுக் கதிகாலையில் வாங்கியுண்டு
தீதறும்படிச் சுழினைத் திருமுனை யூடுபோய்
பேதமேது முறாது பேணிக்கருத்தோ டிருந்திடில்
நாதமே யொலிக்கும் நன்மையா யிதுசுண்ணமே. 367

அகார மென்ற வமுரிதன் சாதனையால்
உகாரமது உனக்குள் உறுதியாய் வலுத்தது
மகாரமென்ற மௌனம் மடைதி றக்கும்
சிகார சிதாகாசப் பெருவெளி சித்திக்குமே. 368

தீட்சையினால் அகார உகாரந் தெளிந்திடும்
காட்சி கைகூடும் கருத்துடன் குருவால்
சூட்சமமிது சொல்வார் பெரியோர் சோதிப்பார்
தாட்சண்ய மும்தயை யோடருள் கூடிடே 369

வேறு

முப்போதும் வாசிமுனை நோக்கித்
தப்பாம லம்மையின் தாள் பணிந்து
இப்பாரில் யோகமீ தெனத் தெளிந்தேன்
செப்பார்கள் சிலாக்கிய மீதாண்டே. 370

தள்ளி னேன் தனிப்புளியு முப்பும்
துள்ளி னேன் உரைப் பும்துலை தூரம்
உள்ளி னேன் உந்திக் கமலமுறுசோதி
மெள்ள வேயிகம் வெறுத்து மேலாண்டே. 371

அறுத்தேன் அந்நிய மாதராசை
வெறுத்தேன் வெறுங்கள் கஞ்சாவும்
குறித்தேன் குண்டலிஇரு செழுமலர்ப்பதம்
நெறித்தேன் வாசிதனை நேர்மையாய் 372

கண்டதும் குண்டலி காலன்போலுமே
மண்டில மட்டும்சீறி மதர்த்துத்தான்
கொண்டதும் யான்பதறி னேன்கொலு
மண்டபத் திருந்துமதி வந்ததெனாண்டே. 373

அண்டமுங் கடந்தேனதி யாச்சரியம்
பிண்டத்தினுட் பிறழாமலும் பிழைத்தேன்
உண்டன் னமுரிஉச்சி யிருவேளையிலும்
எண்டிசை யிலும்பானுயர்ந் தேனாண்டே 374

நிலைத்தது துருத்தி நின்றது ஓடாமலும்
குலைத்திடு மிந்திரியம் குலைந்தது மாயமாகச்
சிலிர்த் ததுமேனி சிவந்தது முகம் திட்டமாய்
வலுத்தது காயம் வையகத்தி லாண்டே. 375

வேறு

ஊதிநான் கண்டஓங் காரவாசி யதலால்
சாதிசதயம் சண்டாளர் வகுத்ததென வேதேர்ந்து
ஆதிசக்தி யவளருள் வாய்க்க அணுவளவும்
பேதியா திருந்தேன் பிசகாமலும் நிதமே. 376

செம்பு சுத்தி

மட்டறும்துருசதின்சுண்ணமும்மகிழ்ந்தம்முறைத்
திட்டமும் பதனமாய்த் திடமுடன் வராலி யிலையதில்
இட்டமாய் இடித்திடச்சாறுவழிந்து ஏகோபித்துத்
தட்டற நீராய்ஓடியது வெள்ளத் தன்மைபோலே. 377

வேறு

உச்சிதமாய்த் தாம்பிரம் உறுதியாய்
தகடதும் வெகுமெலினம்
சொச்சிதமா யடித்து. முன்சாற்றினில்
தோண்டி யிட்டுப்
பச்சிதமாய்க் குழிவெட்டி மண்டலம்
பாய்ந்து வைத்து
இச்சிதமாய் எடுத்திடக் களிம்பற்
றிருந்த தாண்டே 378

துரிசற்ற தாம் பரத் தகடது
தூய்மையா மாற்றாறுகாண்
பரிசற்றவே தையிதால் அதிகம்
பகரும்வெள் வங்கமாம்
பெரிகற்றசுண் ணமும்தினையா
னதற்குப்பிச காதுயினி
வரிசையாம் மாற்றேழு
வாய்த்தது வழங்குவாயே. 379

வேறு

தொல்லுலையி லும்பதமாய்க் கொண்டுகுகை யிட்டூதி
வெல்லுமுருக் கும்முகத்தில் மேன்மையாய் லிங்கமது
மெல்லவும்சம னிடையிட்டூதிப் போடுவியப் பேதுகாண்
சொல்லவும் போமோமாற் றெட்டுசுயம் பிரகாசமே. 380

மூட்டிடு பின்னுமக்குகை முனைதவறாதே எடையது
நீட்டிடு செங்குமரிச் சாற்றின் சுருக்கு நிச்சயமாய்ப்
பூட்டிடு பின்னும்ரச சூதபற்பம்புனித முடனே
தாட்டிக மாம்வயதொன்பது தரணியிலாரறி வார்காணே. 381

உள்ளமது கனகமானால் உறுதிவெளி லோகமெலாம்
கள்ளமதிருந் தால்கபடினால் கடுகளவும் கைகூடாது
தெள்ளமுத முண்டுசிவயோக நிட்டைத் தெளிவினாலே
பள்ளமும் மேடும்இன்னதென்று தெரிந்திடும் பாரினிலே. 382

மதியமுதம் பொழியும் மகவானாக யோகம்
பதியளவும் பனிரெண் டாண்டென் பார்கடாம்
விதியது மேவினால் விட்டகுறை தரலினென்றும்
துதிகுண்டலி யவளால் சொரியு மமுதமே. 383

உதகமென் றவமுரி உனதுள்ளே தான்வழியும்
இதயகமல ந்தனில் இருவிகற்ப மறவும்
சதமெனவும் சதாயோக நிட்டை சாதித்து
நிதமும் அமுறியுண்டு நீடித்திருப்ப ராண்டே. 384

குறிப்பான முலைப்பால் கொண்டிடார் கசடர்
வெறுப்போடு உலகம் சுற்றிவெறுங் கையாய்ப்
பறிப்பார் கள்பின்பு பணந்தான் பதர்கள்போல
நெறிப் பார்வையில் நின்றிடாமூடர் களாண்டே. 385

பரிகாசமல்ல விந்நூல் பஞ்சரெத் தினம்
துரியமும் அதீதத்துணை நிலையுமுணர்ந்திடவும்
கரையேற லாகும்கருத் தால்வழி யுணர்வார்
சரியாகவன்னைவாலை தாள்மலரர்ச்சிப்பாயே. 386

ஓயாமலும் கனகம் உலுத்தரவர் செய்யவென்று
வாயாலும் பேசிவழி யுணராது வையகத்தில்
நோயாளி தமைக்கொன்று நொந்து போவார்
பேயாவ ரிவர்பேச்ச றிந்துவிலகு மாண்டே. 387

அருள்வந் தெய்திடில் அருட்கண் பார்வைத்
தரும்கற் பமதுதள்ளா ட்டமின்றித் தானறிந்து
குருவந்தவன் குவலயந் தன்னிலும் கூறான்
மருள்கொண்டு மயங்காது வழியறி ந்திடே. 388

அப்புடன் தேயுவாயு ஆகாசம் பிரிதிவியும்
ஒப்புடன் பஞ்சபூத மதனால்உலகினிற் கோசமைந்துந்
தப்பியே வெளியைநோக்கித் தனித்துரிய நிலையமர்ந்து
இப்புவி யிருப்பர்விதி இல்லாருக் காகாதாண்டே. 389

நாகநீறு - வேறு

விட்டிடு மிலுப்பைநெய் யதுவெகு பதனம்
பட்டிடும் கரண்டியில் பணிவதாம் ஏழ்முறை
தொட்டிடு நாகம்தூய் மையாம் துணிவாக
நெட்டிடு பற்பமாக நீள்புவி பிழைக்கவே. 390

கம்பியுப் பொடு சீனம்கா ரம்சாரம்
வெம்பி யப்பதும் மேன்மை யமுரிநீர்
நம்புங் கடல்நுரை உப்பும்ந ளினமாய்
வம்பிலா மலுமிடித் துவை சூரணம். 391

தாக்கிடு வீரச்சுண்ணம் தகமை யாக
வீக்கிடு சமன்பூரம் வெள்ளையு ந்தான்
ஆக்கிடு சுண்ணக் குகைஅது தன்னில்
மூக்கிடு மூசைதன்னை முனைந்து மணலிலே. 392
வன்னி யிட்டெரி வண்மையாய் நாற்சாமம்
இன்னி லந்தனில் இதற்குநிகர் ஏதுமில்
சொன்ன வாறிடச் சுண்ணமும் பற்பமாய்ப்
பின்னமில் லாமலும் பிரித்தெடு உறுதியே. 393

வேறு

சுன்னமோ டுசேர் துரிதறுட னதீத
மென்னும் வீரமும் மேலும் ரசசூதம்
இன்னமும் சுத்தநாத மிதுவுஞ் சேர்ந்து
நன்னயம்பெற நடாடு குழிக்கல்லிலே. 394

கல்லிலிட்டமுரி மூலப்புளி கடிதிலூட்டி
அல்லியின் செஞ்சா றதுவும் அளவதாக
மெல்லவும் சேர்த்து அரைத்துப் பதனமாய்
வல்லபத் தோடுவே வழித்திடு மகலிலே. 395

கதிரொளி தன்னிலும் முகம்படக் காணும்
பதிந்திடும் நீர்வறண்டு படியும் பச்சையாம்
எதிரிதற் கேதினி சீலைஏழு பிசகாமலும்
சதிருடன் செய்சடுதி பிற்புடம் குக்கிடமே. 396

பிரித்தெடு சீலையைப் பேதமும் ஏதுகாண்
தரித்திடும் பற்பமும் தவளமாம் தாழ்விலா
திருத்திடும் இதனையே இருவேளை தன்னிலும்
பொருத்தியே உண்டிடப் போகும் பல்நோய்களே. 397

காசமெட்டும்காத தூரம் கடிதான
ஈசரோகமி தற்குள் நாசம் குன்மம்
பாசமும் பதறும் நீரெறிப்புப் பறக்குமே
நாசமாம் வாந்தி சோபதாபமும் நாடிடே. 398

கண்டமா லைபிர மேகம் கண்டவிஷம்
சுண்டுமேகம் சூலை ஆகாத விக்க லேப்பமும்
தண்டிடா தரோசிகம் தள்ளாடும் வாயுக்கள்
விண்டி டாதுஓடும் வெகுவியப் பிதாண்டே. 399

கருமவினை யினாற் கட்டிய நோய்களும்
தருமம் புரியாது தடித்திடும் பலபிணிகளும்
பருவகால முணராது பாவித்த புணர்ச்சிப்
பிரியத் தாலுறும் பிணிகள்வாய் பேசாதாண்டே. 400

வஞ்சக மில்லை மாதுளங் கனியினீரும்
அஞ்சிடும் பனினீர் இளநீர் இதற்கனுபானம்
மிஞ்சிய கஞ்சாவபின் மெலிவுறும் கள்ளும்
அஞ்சியே நீக்கி அருந்திடந் தெளிந்திடுமே. 401

பத்தியம்

மங்கையர் புணர்ச்சியும் மயக்குறு வத்துவும்
பொங்கிய துர்கருமம் பொல்லாத சினமும்
தங்கிய நடையதிகம் தான்பலவும் நீக்கியே
திங்களும் பத்துமுண்ணச் சித்தியுடலாண்டே. 402

பலவீனப் படாமலும் பச்சைப்பய றரிசியும்
நலமாகு மாவின்பாலும் நன்றாகக் கூட்டித்
தலமேற் சர்க்கரை சற்றுக்கலந் துபொங்கி
அலையாதிருந்திட நோய்கள் அலறுமாண்டே 403

கதிரொளி யோடு கடிதினில் திங்களும்
வதியொளி யுந்தானே வாய்க்கும் - பதியொளியா
மூலப்பதி யிருந்துமூளும் சுழிமுனையில்
சாலத் தெரியும் அதுந்தான். 404

முப்பாழுக் கப்பால் முளைத்த துரியமது
இப்பாரில் யாரறிவார் யோகிகடாரம் - தப்பாமல்
அன்னை அடி மலரை ஆதாரத் தேயிருத்தி
இன்ன லறக்கண் டிருப்பா ரே. 405

காயமது குலைந்தாற் காரியமும் சிக்காது
ஓயும் காரணங்க ளோயாது - பாயும்
வகையது தான்மாற்றும் வழியமுரி பானந்
தகைமை யுடனே யருந்தத் தான். 406

ஆகாசத்தே தோற்றும் அந்தரங்கத் தானேகம்
வாகாக வாசிவசப் பட்டால் - தேகாதி
மூன்றும் திடமுடனே முப்பாழுமே கடக்கும்
சான்ற அறிவோர் தமக்கு. 407

நாதத் தயிலம் – வேறு

உயர்ந்த வெண்காரம் சாரம் உவருப்புமே
அயர்ந்த கம்பியுப்பும் அதீதபாரை யுப்புடன்
வியந்த கடலுப்பும் மேவுசவட் டுப்புமூலம்
பயந்த அமுரியும் கலக்கிப் படியவை திரிநாளே. 408

வைத்திடு திரிநாளும் தெளிய வந்நீரிலே
உய்த்திடு மால்தேவி உதவிடு வீரம்கௌரி
நத்திடு மேற்சிலை நாதகெந்தி யதுவும்
எத்திடு வெள்ளைலிங்கம் இவைகளைத் தூளதாய். 409

வேறு

தூளதாகவும் தூக்கிடு கிழிதனில் துறையாகவும்
மாளவுமுன்னீரில் மாட்டிடுகிழியிதைவயணமாய்த்
தாளவும் வன்னிகமலந் தாக்கிடு நுரைவராது
தேளது போலவும் தூளும்கட்டிடும் தெரிந்திடே 410

சீர்மேவிய கதிர்முகம்படவம் செயமுட னிதனைப்
பார்மேவி யோர்பாண்டத் திட்டபின் படரும்
கூர்மேவிய கிரணச்சூடதனால்குணமாய்ச்சுண்டும்
ஏர்மேவிய இதைவெகு பதனமாய் எடுத்திடே 411

சங்கையே தினியொரு வாலுகையில் சடுதியாகத்
துங்கமாமுப்புத்தூள் தனைவிரலது வைக்காமலும்
தங்கவோட் டினிற்கட்டிடு தாட்டிகமாக மேலும்
பொங்கவே வேறுபாண்ட மிட்டுப்பொ திந்திடே 412

வழிந்துவரும் வாலுகையின் வழியதாய்த் தைலம்
இழிந்துவரும் இதற்கீடென் சொல்வேன் இனிநான்
அழிந்த உடலும் வலுக்கும் அரியரச சூதம்கட்டும்
பிழிந்தரசமிதைப்பிசகாது சுருக்கிடப்பேறிதே 413

சொன்ன முறையைந்து தரம்துரிதமா கவும்செய்
பின்னமு மில்லைபின்புநற் சூதம்பிலம தாகும்
இன்னமு மிந்நூற்பஞ்ச ரெத்தினமிதன் மகிமை
தன்னைய றிந்தால் சந்தேக மில்லைதானாண்டே 414

நவலோக மாற்றமும் நாடியிந்தத் தைலமதால்
சிவலோகம் போகலாம் சித்தர்களும் மயங்குவார்கள்
தவலோகமகிமையும் யிதற்குச் சற்றுத்தாழ்ந்திடும்
பவலோகங் கடந்துவாலைப் பதமலர் பணிந்திடாண்டே
415

பத்துக்கொன்றுதாக்கிடு தாம்பிரமதனிற்பணிவாய்
வித்தையிது மாற்றுத்தசபத்து வெகுமேன்மை வேதை
முத்துப்போலச் செயசூதரசமதை முனைந்துதைலமிட்டுச்
சுத்தத்தீ பாக்கினிதொடுத் திடக்கட்டி விடுமாண்டே. 416

வேறு

காரசாரத்தால் சூதம்கட்டுண்டு
தீரமாகவும் வீரமேறும் திடமுடன்
தூரமோடவும் தொல்லையேதிதனால்
சாரணையும்புட மொன்றொன் றாய்த்தானே. 417

பங்கமறச்சார ணையும்பத்துப்பத்துத்
துங்கமுடனிட்டி டவும் தூய்மையாய்
வங்கமதைவைத் துருக்கி மாட்டிடவும்
பொங்குமதனீர்பிரி ந்துபோகுமாண்டே. 418

வைத்திடுவாய் வாயதனுட் கண்டத்தில்
பொய்த்திடுமே லோகம்போம் ககனமும்
உய்த்திடுமண்டபகி ரண்டமும் உண்மையாய்
எய்த்திடச்சுற்றி வரலாம் இசைந்துமே. 419

வெள்ளை யாம்ரசித மதில்வியப் புறவும்
மெள்ள வுமிதைத் தாக்கிடவும் மேன்மையாய்த்
துள்ளுமே ரசிதமுலை யில்தூய தாமாற்று
விள்ளுமே சோடசம் விந்தை யிதாண்டே 420

வேறு

இந்தவிதம் சட்டமுனிக்குக் ககனமேற வும்யானும்
சொந்தமுட னருளினேன் சுற்றினாரண்டகடாகம்
வந்தவிதம் போல்வழக்க மதுதானறிந் திருந்து
விந்துவினால் கனகமும் விளம்பி னேனாண்டே 421

சுருக்குடனும் குடவனில் தைலம்தொடுத்திடவும்
கருக்காது மாற்றுப்பத் தரைகனக மதாகுமிதைப்
பெருக்காது நூற்றுக்கொன்று பெருமைய தாயீந்து
இருக்கா திருக்கும்வகை யறிந்திருந் திடாயே. 422

செம்பொன் னால் துரிசி னால்செய மதாகும்
வம்பில்லை யிதனுள்மாட்டிடுபத்துக்கொன்று
நம்பிடுவாய் வயதுபத்து நாட்டினில் கடினம்
அன்பினாலிவ் வழிஅறைந் தேனினியறி யாண்டே. 423

குற்றமேது யினிவெள் வங்கம் குறிப்பதாகச்
சற்றுமசங் காமலும்தா னாகுநூற்றி லொன்று
உற்றிட வும்மாற்று உண்மையாய்த் தசமே
பற்றற்ற வர்க்கும் பரிசிது வாண்டே. 424

தயிலமித னாற்சடலம் தான்வலு வாகும்
சயிலநீரறி வார்செய் வார்சந் தேகமில்லை
செயலுசா விடுமூர் களிற்சேர்ந்து மாந்தர்
வயமுலாவிட வழியி துளவுமிகு தானாண்டே. 425

மூலப்புளிச் சுண்ணத்தால் முடிந்தது முப்புவுமே
ஞாலத்தினில்ஏமமும்காயமும்ஞானமும் சித்தியாம்
சீலத்துடன் தினம்இரு வேளைகற்ப முண்டால்
பாலத்தைத் தாண்டிக்கரைசேரலாம்பரிந்துமே. 426

தானாகநின்று தவித்துத் தள்ளாடிப் புகையுண்டு
போனார் கள்செத்துப் புவிதனில் கோடாகோடி
ஏனோயிதை யறியாமலு மிருந்தார் யானிரங்கி
வானாளச் சொன்னமுறை யிதுவகை யறிந்திடே. 427

துரிசினாற் செயரச சூதமும் துலக்கமாய்
வரிசையுடன் கட்டும் வாதிக ளறியார்
அரிதாகு மிந்தவைந் நூற்றிற் சொன்னேன்
பெரிதென்று நம்பிப் பிரியமாய்த் தெரியுமே. 428

வேறு

நாழிகையில் வந்திடுவான் நமனென்றும் பாராமல்
பாழினிலே மனதைப் பாயவிட்டார்-சூழிரவி
சூதமதி கெந்திதனைத் தொட்டும் பிடிக்காமல்
வாதமது வாமோ வழுத்து. 429

சுட்டுக் கரியாக்கித் தொல்லுலகிலே தொலைந்தார்
கட்டுக் கடங்காது காணுமோ-பட்டுமினிப்
பாராத பாவிகட்குப் பாழாச்சு லோகமெல்லாம்
ஆராய்ந்து ஓதி அறி. 430

ஞானிகட்குவையகத்தில் நன்மையுடன்தொட்ட தெல்லாம்
ஆனியறத் தான்பழுக்கும் ஆய்ந்துபார்-மேனியது
வெம்பிக் கருகினவர் வீணாவார் வேறேது
அம்பிகை பாதமலர் ஆர். 431

இவ்வுலகில் ஏமமது எங்கும் இலகுமதைக்
கவ்வினவர்க் காகாது காணுவீர்-அவ்வும்
உவ்வும் உணர்மவ்வும் உற்றறிந்தா லதுவே
வவ்வும் கனகமது வாம். 432

வேறு

கலியேதுகாண் ஞானிகட்குக் கசடற்ற பெருமையினால்
நலிவேது அரசரும் நயந்து மலரடி பணிந்து
மெலிவாகப் போற்றுவார் விடுபட்ட வர்க்காசை
உலையாது உறுதிகடைப்பிடித்தொழுகினார்க்கே. 433

பொய்ஞ்ஞான முற்றுப்பூவையர் மயக்கிற் பொருந்தியினி
எஞ்ஞான முங்கூடாதென யிவர்இறக்கும் வழிகண்டு
விஞ்ஞான முத்திசித்தி யருள்மேம் பதியை நாடிடார்கள்
மெய்ஞ்ஞான சற்குருவகத் தீசர்மென்பத மவைபோற்றி.
434

வேறு

கட்டோடே அழியத்துறை கண்டார்
கருது வார்கள் பெண்கள்
பட்டாலே பொட்டாலே பாழ்கிணற்றில்
மூழ்கி மெய்ச் சேறு
பட்டாலும் சந்தனம் சவ்வாதெனப்
பரவசமா வார்காண்
விட்டார் புவிமாய்கை வாழ்ந்தார்
மதிப்புற் றுத்தாமே. 435

தப்பாதகற்ப வழலைமுறை யெல்லாம்
தழுவி மெய்ஞ்ஞானம்
சொற்போத வெட்டியொடு தொடரெண்
ணூறில் தானறிவார்
ஒப்பாதபேர் கட்குரைத்தேன் உலகின
ரறியப் பஞ்சரெத்தினம்
இப்பாரிலிதற் கேதிணை என்குரு மலர்ப்பாத
மாணை யாண்டே. 436

வேறு

சித்தாதிகள் விடுத்தகதைகளைச் சகதலமாண்பர்காணார்
சுத்தோதகம் சொன்னேன் சுரோணித நீர்க்காடிதன்னைச்
சத்தானதிதைக் கைவிடார் சகலமும் கைவசமாச்சு
செத்தாற்பிழைப்பதேது காண்திரிமூலவட்டம் பாரே.437

பாஷாண பற்பம்

நன்றானகள்ளி சதுரமதுதான் நாட்டினில் மெத்தவுண்டு
குன்றேறிக் கண்டுமதுதனைக் கொண்டதிப் பாலெடுத்து
இன்றோடு நாண்மூன்று வெள்ளைஎழிற் பாஷாணம் விரவி
அன்றாடம் வைரவியில்பெரு மகலிலிட்டதும் சுண்டிடவே.
438

கற்பூரமானும் பூரம்கூடனது கவின்பெறத்தூள தாய்ப்பொடி
பொற்பாகச் சேர்த்தரைசாம மட்டும்புகழ் பெறமயனமதாய்த்
தற்போதர் தருமதீதவண்டு நாபிதனை யொக்கவும்விடு
முப்பாலுந் தவறாதிந்தமுறை மொழிந்தேன்
ரவியில்நாட்டே 439

நாட்டிடவும் சுக்கானதின் பொடிநவிலும் பொற்சுண்ணமதைச்
சூட்டிடுநீ சீலையதுஏழு முறைசுருக்கினி லகலிலிட்டு
மாட்டிடு குக்கிடப்புடம் மௌனமாயிரு வாய்பேசாதே
காட்டிடும் பாஷாணபற்பமிது கண்டவரெவர்க
ளாண்டே 440

வேறு

கொட்டாவி விட்டுமுயிர் குலைந்த சவமேனும்
தட்டாது உக்கிரமாய்த் தானெழுந்து பேசும்
எட்டாது பற்பமிது ஈரரிசி யாகக்
கெட்டாருக்கிட்டாவனு பானமுங்கொண்டே 441

வேறு

சங்கனது சாறதனில் சற்றும் பிசகாமல்
மங்களம னோன்மணி யாம்வாலை யருளாலே
இங்கிதமு டன்தர வும்ஏகு முடன்சன்னி
சங்கையினி யேதுசிவன் தந்தமுறையாண்டே 442

வன்மைபெறு குட்டமுடன் வாதமீளை நோய்கள்
கம்மிடுசி லேத்துமமும் கடல்புக்கி யோடும்
உண்மையுடன்குன்மமுள மாந்தையொடுவாய்வும்
செம்பைபெற யிந்தமுறை செப்பினேனா னாண்டே 443

குக்கல்வலி காக்கைவலி குமட்டுமரோ சிகமும்
விக்கல் விஷப்பாண் டுடனே வெள்ளை குறையும்நோயும்
பக்கமணு காதுயினிப் பாகலிலைச் சாத்தில்
சிக்கெனக் கொடுத்திடவும் சிலாக்கியமு மாமே. 444

விப்புறுதி யாப்புமெலி விக்கல் பக்கசூலை
ஒப்புவிரை வாதமும் முதலானைக் காலும்
தப்பும் பிசகாது உடன் தாக்கு கரிசாலை
அப்புவினி லச்சம தகற்று புளியாகா. 445

வேறு

அகமெனும் செம்புருக்கி அரிசியிடை அதில்தாக்கு
சுயமெனும்சொர்ணம் சொல்லரியசோ திப்பிரகாசம்
வயததும் தசமாற்று வளமுடன்தனை மறுமுறையும்
நயமுட னுலை யிலிட்டுநாத கெந்தித்தைலம் சுருக்கிடே 446

கருக்கிடவும் சொர்ணம் துரிதமுடன் வெட்டை யதாம்
நெருக்கிடவும் பொற்றலை நெல்லிச்சாறது தன்னில்
பெருக்கிடவு மிடுபுடம் பிசகாமலும் குக்கிடம்
எருக்கிடவும் செந்தூரம் அதிவெகு சூக்ஷம மாண்டே.447

கற்பழியாமலும் கள்ளபினி யுடன்கஞ்சா புகையாமலும்
வெற்பான உடலதுமெலி யாமலும்மேன் மையாயமுத
நற்பானமுடன் கொண்டிடவும் நலிவேது காயமது
பொற்போலு மிறுகும்பூரண மாம்வாலை யருளாண்டே 448

முளைத்தெழுந்த செழுஞ்சோதி மூலத்திடை யேநின்று
விளைத்தெழுங் கனலைமே லெழுப்பியம்மை யருளால்
களைத்திடாம லதீதப்பார்வை கண்முன்கண்டு கற்பமுண்ணத்
துளைத்திடு மாறாதாரமுந் துரிதமாயூடு றுவித்தானே.449

செந்தீக்கன லெழிப்பியதில் செலுத்தும் பனிரெண்டாண்டு
நந்தீசருரைத்த வாணையிது நாட்டினில் சூக்ஷம மறியாமலும்
விந்தானும் வன்னியென விதரணையது தெரியாமலும்
நந்தீமை விலகுமெனச் சாடினார் நாட்டு நெருப்பிலே.450

பிண்டத்துறுஞ் சுடர்பேதித்துச் சீறிப்பிதிர்ந்தெழுந்து
அண்டத்தினுச் சியில்தாக்க அமுதமது சுரந்திடும்
கண்டத்தி னிடைவாசி கால்விட்டோடா தயர்ந்திடும்
சண்டப்பிர சண்டசமர்த்த வாலாம்பிகை சாதகத்தால்.
451

சொற்குறி காணாமலும் மனிதர்கடாம் சோலைபுக்கித்
தற்குறிபோல் சுள்ளிகள் பொறுக்கித் தணலி லிட்டும்
விற்குறிமேவ விழைவார் வீணரவரை நீக்கிடு
சற்குருபாதம் சதாகதியெனத் தாழ்ந்திடாண் டையே. 452

சட்டைகக்கு மோராண்டின் சாதகத்தால் தணியாத
வெட்டைய கலும்பலநோய் வெடுவெடுத்தோடிடும்
நட்டமும் படாதுநானு மஞ்சியோடிப் போவேன்
இட்டமுட னோதினாரகத்தீ சர்எனக்கு மாண்டே 453

சதானந்த செந்தூரம்

கெந்தியரி தாரமனோ சிலையோடு கேளும்
விந்துரச பூரம்விளை வானநவச் சாரம்
இந்துவத னுப்பொடுந்தா னீசனவன்பாரி
இந்தவகையத் தனையும்ஏற்று கலுவத்தே. 454

விட்டுவிடு வெண்கரு வும்விட்டு மரைசாமம்
பட்டவை கள்தான்மெழுக தாகவுமே பாங்காய்த்
திட்டமுடன் சிவந்துவருஞ் சீரமுரி மேலும்
இட்டுமறை பின்னுமொரு சாமமினி தாண்டே 455

தீதற்றுச் செந்தேன்பாயும் சிகரனச் சிதாகாசப்
போதுற்றுத் தழைக்கப் புழைவழிகண் டார்க் கென்றும்
யாதற்றும் பிறப்பற்றும் என்னம்மை வாலையம்மை
தாதுற்ற அடிமலர்த்தாள் சதாநந்ததூர மொழிவேனே.
456

பாசவறையில்செல்கின்றபணமுடியர வெனும்தீய
வாசியைக்கூட்டி வழிதனில் மடைமடக்கிக்கபாலம்
ஊசித்துவாரத் திடைச்செலுத்த உபாயமிச் செந்தூரம்
தேசிகனற்பாதம்தெண்ட னிட்டுச் செய்யுமெனச்
செப்புவேனே 457

வானுலாவும் பனிவரைவாய் மருவற்ற நீரொருபடி
நாளைந்து மொருபாண்டத் திடுசற்றுவைப் போற்றி
ஈனமென்று கருதாமலும் இனிதாகவும் கரை கம்பியுப்புப்
பானமிதனைத் தெளியவை பரிதிதனில் திரிநாளே. 458

சாகரமும்வற ண்டுமேகமாம் தனிக்கதிர் வெம்மையினால்
தாகநீரது தான்சுண்டும் பதமறிந்து தவறாமலும்
ஏகமான இதன்குழம்பை யினிவேறுபாண் டத்திட்டும்
ஏகவிந்துரசநாதகெந்திசேர்த்தரைத் தாண்டே. 459

பாகமாகவும் யிருநான்கு சாமம்பக்குவ மாகவும்
சோகமின்றி விடாமலும் துரிதமுடன் அரைக்கவும்
வேகமாக மெழுகதுபோல் விகசிதமாகத் திரண்டு
போகும்பின்னும் விட்டமுரி புதுமையாக வும்கல்லிலே. 460

தாக்கவுமிடைக்கிடையரி தார மனோசிலை லிங்கம்
பார்க்கவும்பஞ்சபூதமாச் சுதுபவுஷாரறிவார்காண்
ஊக்கமது விடாமலுமரை உரைத்துப் பின்னுமுந்தான்
வீக்கமுடன் சாமந்தான் மூன்றுமேல் விளம்பு வேனே 461

பூதவுடற்சித்திபுகழதீதப் புளியாரைச்சாறும்வெகு
ஆதரவுடன் பொற்றலை அதிசயமாம் சீத்திலதன்வழி
நாதமாஞ்சாறும் நளினமுடன் நல்லவுரியதினுடன்
தீதறும்சாறும் தினுசுக்காகச் சாமமொன்று தேர்ந்தே 462

காலமது வீணாகாமலும் கடிதினில் மெழுகதைப் பதமாய்ப்
போலுமது குழிக்கல்லினிற் புதுமையுடன் திரண்டுமேலும்
சாலவும்வரும் பாகமறிந்து தவறிடாமலும் தாக்குடனே
காலனெனவும் வீரச்சுண்ணம் கடுகளவுங் கவனமாண்டே
463

ஊட்டிவிடு சுண்ணமாம் வீரம் ஒருகடுகளவும் துரிதமாய்
மாட்டிவிடு குழிக்கல்லினில் மத்தித்தந் தப்படியும்
நாட்டிவிடு வகலதனில்நளினமாய்ரவிமுகம்படவும்
ஒட்டிவிடுசீலையேழும் உண்மையதாய்ப்
புடம்கௌதாரியே. 464

சீக்கிரமாய்க்கௌதாரிப்புட மிடவும்திரண்டுகட்டி
நோக்கிடவுஞ் செம்மையிதன் வண்ணம் சிறுமையது
போக்கிடவு முன்சொன்ன சாறுபுறட்டி மறுபடியும்
காக்கிடவு மரைத்துச் சளையாமலும்புடமிடே. 465

அடுத்துமேதா னிந்தவிதம் ஐந்துமுறை யாகவும்
தொடுத்திடச் செந்தூரமாகும் தோஷமேது மின்றியே
எடுத்துமே பணமதாக ஈந்திடத்தீர்ந் தோடுமே
கடுத்துமே நோய்களெல்லாம் காணுமோ சகத்திலே. 466

கண்டதொரு வல்லாரை கனமூலியது காய்ந்திடித்து
விண்டதொரு பனைவட்டதில் வெம்பிடவும்தீயில்
சுண்டிடவும் இளகியமாகத்தேன்விட்டுப்பிசைந்து
மண்டிடவும் செந்தூரம் கழஞ்சிமடிந் திடுமேகமே. 467

மேகமென்ற தெல்லாமடி ந்திடும்மேன் மையாகச்
சாகசமுடன் கையான் சூரணத்திற் கழஞ்சியது
போகவும் கெடுக்கப் புக்கியோடும் சாகரமே
சோகமுட னீளையசீரண மும்துரி தமாகவே. 468

கோபமுடன் முப்பானெட் டட்டகுட்ட குன்மமும்
சாபமுட னகலும்சகல தோஷங்களும் சன்னியும்
தீபமுடன் கற்கண்டதின் பொடியினில் தேன் விட்டுத்
தூபமிட்டுத் தரத்தொலை தூரம்போம் சிலேத்துமமே.
469

சேர்த்திடும் விலாமிச் சுச்சிறிய தாகவும்
சேர்த்தெடு வில்வம் பழமதன்சா றும்நன்னாரி
சேர்த்திடு வெட்டியின் வேறதுவும் ஆகவும்நீர்
சேர்த்திடு வன்னியிட்டுச் சட்டியி லாண்டே. 470

-டுப்புறவும் அனல்மீறி அதுகொ திக்கவும்
-காதித்திடு செந்தூரமது கழஞ்சு துரிதமாய்
-டுத்திடவும்சுண்டி மேலும்வரும் இளகியம்
-டித்திடும் நோய்களுக்கு மகாகால னாண்டே. 471

-லனுமி தைக்கண்டு கடிதினிலோடிப் போவான்
-லகாலமு மிதைஅசைக் கொணாது அதிகமாம்
-சலதேகமும் வலுக்கும் துணிந்தொரு மண்டலம்
-மலுமண் டிடவேறு கற்பமினியே னாண்டே 472

-த்தமாம் சுத்தோதகப் பெருமையினால் சுருதி சொன்ன
-த்தையெல்லாமாகும் வேறுசலனமிதற்குமில்லை
-த்திநாத விந்துமொக்கக் கலந்துசலனமு முண்டாகும்
-த்திதனை யறிந்தால் இனிப்பிறப்பில்லை யாண்டே. 473

கட்டுக்கதை கள்மொழிவார் கனகமும்செய் வோமென்று
அட்டைச்சுற்று வழியறியாது துடுக்காக வாய்மதம்பேசிக்
கட்டுவிட்டோடினவர் கோடியுண்டுகேவல மாகாமற்றான்
நட்டமுடன் பஞ்சரெத்தின மிதில்இயம்பினே னறிந்திடே. 474

வேறு

இன்பமுடன் கடுக்காய் தான்றி
இனியதாம் நெல்லியதின்ரசம்
தென்பருளும் கீழாநெல்லியுந் தேனதும்
விட்டு நன்றாகத்தான்

அன்புடன் பழச்சாறதும் அதீதமாங்
கருந் துளசிச்சாறும்
நம்பியே விட்டுநன்றாய் நளினமாக
வன்னியிட் டிடாயே. 475

இட்டிடவும் பாகதன்பதமாக இனியது
சுண்டி வரும்போது
விட்டிடுநீ ஆவின்நெய்தான் மேலு
மதைக் கிண்டிப்பின்பு
சட்டென மிறக்கியா றவிட்டுத்
தவறாமற்செந் தூரமதனிற்றான்
பொட்டென வுங்கொடுக்கப் போகுமே
மகோ தரமுமாண்டே. 476

வேறு

சுக்கானற்ற கப்பலைப்போற் சுழன்று தூளதாகும்
இக்காயகற்ப மறியாமலும் இசைத்திட்ட நாதவிந்து
எக்காரண மெனவும்காணா மலும்இகந்த னிற்பல்லோர்
மிக்காவி விட்டழிந்தார் வேணபேர்களுந் தாணாண்டே.
477

விந்தான சுக்கானதின் விநோதமீ தென்றறியார்
சந்தான மூலிதனைச் சரக்கென்றுந் தரணியிலே
நொந்தார்க ளனேகர் நொடிதனி லாகும்நாதமது
விந்தோடு கூடிக்குருவாச்சு வெட்டவெளி யாண்டே. 478

ஊசித்துவார மொன்றுண்டு உலைக்களத் திலதனை
நாசித்துவா ரத்தினடுவணை யில்நன்மை யாயூதி
வாசியெனும் பரியேறிவை யாளிபோ வார்காண்
யோசியாம லும்சிவயோக உத்தமர்கள் தெளிந்திடே. 479

ஊற்றுநீர்போற்பெருகும் உதகமெனும் சுத்தசலம்
மாற்றும்வகை யறிந்ததின் மாநிலத்தில் நாதவிந்தைப்
போற்றித்தச தீட்சைபத்தும் புனிதர்கள் முடிப்பர்வாசிக்
காற்றைப் பிடிக்கும்வழி கண்டார்கள் யோகிதாமே. 480

சத்தான வாழ்க்கைதனில் சடலமதைமறந்துநாளு
வத்தானபானம்செய்து வைதீகமெனும்சன்மார்க்க
சித்தமெய்ம் மார்க்கத் துறவுதனில் கழிப்பாருக்கு
வித்தையறிவாரிதன் சூட்சமம்விளம்பினேனே. 481

ஓங்காரவட் டக்குண்டலி உண்மை யையறிந்து
நீங்காதவன் மலரடிநித்த மும்நிலையுற் சூழ்ந்து
சாங்கோப மாகவும்தனித் திருந்திலகி வாழ்வார்
ஏங்காணும் உலகோர்க்கு இந்தமுறை யாண்டே. 482

எக்கலிடும் குருதியும் சீழும் இனிவழியும் சலமும்
கக்கலெனும் குழியில்கச டர்கள்கண் மூடிகளாய்க்
குக்கல்போற் றிரிவார்க்குக் குண்டலித் தாயுமிவர்
பக்கம்வரு வாளோபா வியவராகு மறித்திடே. 483

உக்கிரமாய்ப் பெண்கள் மாய்கையிலே உரமழிவார்க்குத்
தக்குமோஉடல்தப்பாது காயசித்திசெய்துமென்ன
பக்குளமாகவு மவர்பாழ்பாழ் நேசமே உதறினால்
எக்காலமும் காயம்இருகு மினிச்சித்தி யாண்டே. 484

சுருக்கான வாலையவள் சுருதிமுப்பு வாய்முடிந்து
கருக்கான சரக்கிற்கெல்லாம் காலனென வுந்தான்
பொருக்கான வர்க்குப்பொலி வுறுநேராகு மென்று
இருக்கான வகத்தீச ரினிதுரைத்தா ராண்டே. 485

வேதா கமங்க ளெல்லாம் விநயமதாய் மறைத்த
சூதானவித் ததின்சூட்ச மதைமுறை யாய்க்கண்டு
ஊதாரியா காமலும்வாசியை ஊதிஉந்தியில்நின்று
ஆதாரமாறுங் கடந்தார் அறிவாளர் கள்தாமே. 486

முடியுமெய்ஞ் ஞானக்குருபரன் மேன்மை முன்சொன்ன
ப்டியில்ஞான வெட்டிப் பரிபக்குவங் கண்டால்
கொடியதா முப்புக் கசிவும் குலைந்துடலும் இறுகி
விநாடியதில் சித்தியாகும் நுண்ணறிவாலாண்டே. 487

கனகமாம் செம்பினைக் கனமுடனு லைதனில்
வினயமுட னுருக்கிச் செந்தூரம் வியப்புடனே
நினைவதா கவும்பணவிடை நீட்டிட வுடனே
முனையும் சோதிவண்ணம் முக்கா லாண்டே. 488

பத்தியுட னிந்தப் பரீட்சைய தைப்பார்த்து
வித்தியா சமுமன்றி வெகுபதன மாகவுந்தான்
நித்தமும் மண்டலம் நிச்சயமாக வுமுண்டிடச்
சித்தியாச் சுதுகாயம் சிறப்பாகவு ந்தானே. 489

காயமது மிறுகிக் கனகம்போல் செவக்கும்
பாயும்கலையு மாறாமற் பாலவழி யூடுபோகும்
சேயைப்போல் சென்மங் கோடிவருட முலகில்
மாயமாக வாழலாம் மகத்தான போக்கிதாண்டே. 490

காலையிரு வேளையிலும் கருத்தோடுந் தானாக
மூலப்புளி யுடன்செந்தூரம்முக் காலுமுண்டு
சாலவுமம்மை குண்டலித்தாள் மலர்நோக்கி
நால்மிசை சித்தனென்று நாளும்வாழலாமே. 491

வெண்பா

பிண்டத்துட பேதைப் பிறப்பகற்ற லேபிறந்து
குண்டலித் தாயும் மகத்தாமே-குண்டலியின்
காளைத்தினந்தோறும் தாள்பணிந்து காயகற்பம்
வேளை யிருபோதும் விழை. 492

மூலப்புளி யென்னும் முன்னோர்கள் தாமுரைத்த
சலத்தினை யுணரச் செப்பினேன்-ஞாலத்தில்
சுத்தசலம் கெங்கைச் சுயம்புவாம் நீரமுரி
நித்தங் கலங்காமற் றேர். 493

சோற்றைச் சருக்காமல் தூய்மையாய்த் தானிருந்து
ஏற்றி யிருகாலும் இன்பமாய்க்-காற்று
வழியொடு ககன மார்க்கமே நுழைவார்க்கு
அழியாது இக்காயம் அறி. 494

ஆண்டதில் மலமற்று அந்தரங்க நாடிகடான்
வேண்டும் வகைத்திசையும் வேறில்லை-தூண்டிடவும்
திரிமூன்று ஆண்டதனில் திரேகம் வயிரமாம்
வருமூன்று யோகமதில் வாசி. 495

இருபத்தோ ராயிரத்தறு நூறெனு ம்சுவாசம்
விரிவாக விருந்ததெல் லாம்வியப்புட னொன்றாச்சு
சரிபத்துத்தீட்சையும் சாதித்ததினால்தன்மயமாம்
பெருமையாம் சிவயோகப் பிராப்திதரணி யிலாண்டே.
496

இந்திரிய மெனுமமுரி இதன்நுணுக்கமுமுணர்ந்து
சந்துவெனவும்அண்டத்தில் தள்ளாடித்திரியாமல்
வந்தவழி நோக்கி வாயிற்படி காத்திருந்தார்க்கு
முந்தும் முத்திசித்தி யெல்லாம் மொழிந்தே னாண்டே.
497

சிட்டருக் கெனச்சொன்ன நூல்சிலா க்கியமாம்
வெட்டியாயிர மும்ஞானமெ னமுந்நூற தினாலும்
தொட்டவெண் ணூறும்நூறும் தொடுகு றியாய்
விட்டபஞ்ச ரெத்தினமும் விரிவான தாமாண்டே. 498

பஞ்சரத்தின மெனப் பக்குவர்க் குரைத்த
விஞ்சை நூலாமிந்நூல் வெட்டவெளி யாகவும்
சஞ்சலத்தினை யறுத்துத் தற்போதநிலை யளிக்கும்
மஞ்சலமிசை வளர்குரு வர மதினா லாண்டே. 499

ஓதிடும் ஆதியாம் உத்தமநாத விந்துபோற்றி
நாதராம் பதினெண்மர் நற்றாட்பத மும்போற்றி
நீதியாயன்னை வாலாம்பிகை நேமகத்தாள் போற்றி
மேதினிப் பஞ்சரத்தினம் மேன்மையும் போற்றி போற்றி. 500

திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்த ஞானவெட்டி-1500க்கும் நவரத்தின சிந்தாமணி-800க்கும் திறவு கோலாகிய பஞ்சரத்தினம்-500

முற்றிற்று

தாமரை
நூலகம்